தர்மசக்கரம்



துந்துபி ஷு சித்திரை மீ ௴ சக்கரம் 31 ஆரம் 4

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை, எலமனூர் ஸ்டேஷன், திருச்சி ஜில்லா.

ஸ்ரீ விவேகானந்த வித்யாவன குருகுல உயர்நிலைப்பள்ளி

திருப்பராய்த்துறை-639 115, திருச்சி ஜில்லா.

குருகுலத்தில் புதிய மாணவர்களைச் சேர்ப்பது சம்பந்தமான அறிக்கை

இந்தப் பள்ளியில் 4ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரையிலும் உள்ளன. இதனுடைய தொடர்ச்சி 11, 12 வகுப்புக்கள் மதுரை ஜில்லா, திருவேடகம், விவேகானந்த மேல்நிலைப்பள்ளியில் அமைந்திருக்கின்றன. 8ஆம் வகுப்பிலும் அதற்கு மேலான வகுப்புக்களிலும் புதிய மாணவர்களைச் சேர்ப்பது இல்லை. 4, 5, 6, 7ஆம் வகுப்புக்களில் மட்டும் புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். புதிய மாணவர்களைச் சேர்க்க விரும்புவோர் மே மாதம் 30ஆம் தேதி காலை 9 மணிக்குள் மாணவர்களுடன் இங்கு வரவேண்டும். அப்பொழுது மாணவர்களை நேரில் பார்த்து, அவர்களுடைய உடல்நிலை, படிப்பு, வேறு இயல்புகள் இவற்றைப் பரிசோதித்து அவர்களுக்கு இடமளிக்கப்படும். மற்ற நாட்களில் மாணவர்களைச் சேர்ப்பது இல்லை. பரீட்சைகள் மே மாதம் 30 ஆம் தேதி காலை 10-00 மணி முதல் முற்பகலிலும் பிற்பகலிலும் நடைபெறும். மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான முடிவுகளை அன்று மாலையிலும் இரவிலும் ஒவ்வொரு வகுப்பாக அறிவிக்கப்படும். இதற்காக விண்ணப்பத்தாள் எதுவும் எழுதியனுப்பவேண்டியதில்லை. மாணவனை எடுத்துக் கொள்வதாக அறிவித்தவுடன் பொறுப்புத் தொகை ரூ. 200ம், சாமான்கள்பொருட்டு ரூ. 200ம் ஆக ரூபாய் 400 முன்பணமாகச் செலுத்த ஆயத்தமாக இருக்கவேண்டும். இங்கு இடம் பெற்ற பிறகு, முன்பு படித்த பள்ளிக்கூடத்திலிருந்து பள்ளிக்கூட மாற்ற சர்டிபிகேட் வாங்கித் தந்தால் போதுமானது. உணவு, உடை, வாடகை, முட்டுவழி மற்றும் எல்லாச் செலவுகளுமாக வகுப்புக்கு ஏற்ப மாதம் ரூ. 160 முதல் ரூ. 180 வரை ஆகும். இலவசமாகவோ குறைந்த செலவிலோ மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதில்லை. போதனுமொழி தமிழ். மேலும் விவரம் வேண்டுவோர், 75 பைசா ஸ்டாம்பு அனுப்பிவைத்து "வித்யாவன குருகுல சட்டதிட்டங்கள்" என்ற சிறு புத்தகத்தைப் பெற்று விவரம் தெரிந்துகொள்ளலாம்.

S. ஈசுவரன்
தலைமை ஆசிரியர்

சித்பவானந்த
தலைவர்

மாணவ மாணவிகளுக்கு விடுதி வசதிகள்

மாணவர்களை மேல்நிலை வகுப்புக்களில் (11, 12) சேர்ப்பதற்கு:

விவேகானந்த மேல்நிலைப்பள்ளி, திருவேடகம் மேற்கு-624 217, மதுரை மாவட்டம்.

மாணவர்களைக் குருகுலக் கல்லூரியில் சேர்ப்பதற்கு:

விவேகானந்த கல்லூரி, திருவேடகம் மேற்கு-624 217, மதுரை மாவட்டம்.

குழந்தைகளை நர்ஸரியிலும், ஆரம்பப் பள்ளியிலும் (ஆண், பெண்) சேர்ப்பதற்கு:

ஸ்ரீ ஶாரதா பாலமந்திர், சேலம்-636 004.

மாணவிகளை உயர்நிலைப்பள்ளியில் சேர்ப்பதற்கு:

ஸ்ரீ ஶாரதா வித்யாலயா, சேலம்-636 004.

மாணவிகளைக் கல்லூரியில் சேர்ப்பதற்கு:

ஸ்ரீ ஶாரதா கல்லூரி, சேலம்-636 004.

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 31	துந்துபி ஸூ சித்திரை மீ	ஆரம் 4

பொருளடக்கம்

வருட சந்தா உள்நாடு	ரூ. 12-00	வருட சந்தா வெளிநாடு	ரூ. 35-00
தனி இதழ் ,,	ரூ. 1-25	தனி இதழ் ,,	ரூ. 3-00

அந்தர்யோக விவரங்கள்

மதுரை ஜில்லா—காமயக்கவுண்டன்பட்டியில் 18—4—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: கஸ்தூரிபாய் நடுநிலைப்பள்ளி
நேரம்; காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்; ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

நீலகிரி மாவட்டம்—குன்னூரில் 25—4—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ சத்குரு இராஜயோக ஆச்ரமம
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி குஹானந்தர்
உணவுவசதி: நேரில் ரூ. 2-00 செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

[தொடர்ச்சி பின்பக்கம் பார்க்க]

நீலகிரி மாவட்டம்—கோத்தகிரியில் 26—4—82 திங்கட்கிழமை

இடம்: சாந்தி ஆச்ரமம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி குஹானந்தர்
உணவு வசதி: நேரில் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

தஞ்சாவூர் ஜில்லா—அம்மாப்பேட்டையில் 2—5—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி ஸதானந்தர்
உணவு வசதி: நேரில் ரூ. 2-00 செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

பெரியார் மாவட்டம்—சென்னிமலையில் 2—5—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: கைலாசநாதர் கோயில்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

பெரியார் மாவட்டம்—பவானியில் 6—5—82 வியாழக்கிழமை

இடம்: ஸ்ரீ ஐயப்பா சேவாமிஷன் மண்டபம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

பெங்களூரில் 9—5—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: கன்டோன்மெண்ட் அஜந்தாடாக்கீஸ் எதிரிலுள்ள ஒடுக்கத்தூர் சுவாமிகள் மடம்
நேரம்: காலை 10-30 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

கோவை ஜில்லா—அன்னூரில் 9—5—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ராமகிருஷ்ண ஆச்ரமம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

தர்மபுரி ஜில்லா—காவேரிப்பட்டணத்தில் 10—5—82 திங்கட்கிழமை

இடம்: தபோவனம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்
உணவு வசதி: நேரில் உணவுச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

வடஆற்காடு ஜில்லா—வைரப்பெரியான் குப்பத்தில் 14—5—82 வெள்ளிக்கிழமை

இடம்: சின்மயானந்த தபோவனம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

வடஆற்காடு ஜில்லா—துரிஞ்சாபுரத்தில் 15—5—82 சனிக்கிழமை

இடம்: புஷ்பகிரி ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி கோவில்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 31	துந்துபி ஹூ சித்திரை மீ	ஆரம் 4

பிரார்த்தனை

मय्यन्यत्र तथाशेष भूतेषु भुवनेषु च ।
तवैव व्याप्तिरैश्वर्य गुणासंसुचिका प्रभो ॥

— विष्णुपुराणः

மய்யன்யத்ர ததாசேஷ பூதேஷு புவனேஷு ச ।
தவைவ வ்யாப்திரைஸ்வர்ய குணஸம்ஸூசிகா ப்ரபோ ॥

— விஷ்ணுபுராணம்

இறைவா, என்னிடத்தும் பிரபஞ்சத்திலுள்ள அனைத்திடத்தும் உன் மகிமைகளை விளக்கிக்கொண்டு நீயே வீற்றிருக்கின்றாய்.

திக்கொடுகீழ் மேலும் திருவருளாம் பொற்பறிந்தோர்
கைக்குள்வளர் நெல்லிக் கனியே பராபரமே.

— தாயுமானவர்

அருள் விருந்து

கேட்டை அகற்றி நலனைக் கடைப்பிடி.

அக்ஞான இருளில் உழல்பவர் கீழோர்.

பண்பட்ட மனதைக் கற்பக விருட்சம் எனலாம்.

நல்ல ஆட்சிமுறையில் எவ்வுயிர்க்கும் தீங்கில்லை.

நிலையற்றவைகளை நாடுவது நல்லார் செயல் அன்று.

தாங்கவொண்ணத் துயரத்துக்குத் தக்க நண்பனாய் வருவது மரணம்.

சந்தர்ப்பம் வாய்க்கும் பொழுதெல்லாம் பிறர்க்கு ஏதாவது பணிவிடை பண்ணு.

உயிர்களனைத்தையும் உள்ளன்போடு நேசிக்கிறவன் ஆத்ம பரிபாகம் அடைகிறான்.

பொல்லாதவன் படிப்படியாகத் தனக்குத்தானே கேட்டை வரவழைத்துக் கொள்கிறான்.

தற்செயலாய் வந்தமைவதை அமைதியுடன் ஏற்றுக்கொள்பவன் சான்றோன் ஆகிறான்.

ஆசை ஒன்றை வெல்லுவதில் வருகிற ஆனந்தம் அந்த ஆசையை நிறைவேற்றுவதில் இல்லை.

வறுமை ஒரு சிலரைப் பாழ்படுத்துகிறது. மிகைபட்ட செல்வமோ பலரைப் பாழ்படுத்துகிறது.

பட்டினி கிடப்போருக்கு முதலில் உணவை வழங்கு. அதைத்தொடர்ந்து நலன் தானே வருகிறது.

நலனை மட்டும் நேசிப்பது உள்ளன்பாகாது. கேடதனையும் உள்ளன்போடு நேசித்து அதைப் பயன்படுத்துவதே பேரன்பாம்.

நல்வழியினின்று பிசகுவது மானுட இயல்பு. அதற்குப் பரிகாரமாக ஒவ்வொரு செயலையும் பிரார்த்தனையுடன் தொடங்குதல் வேண்டும்.

உள்ளத்தினுள்ளே இருப்பதை மனிதன் புறத்தே காண்கிறான். குழந்தை ஒன்றுக்குப் புறவுலகில் திருடன் இல்லை. ஏனென்றால் அது இன்னும் திருட்டுத்தனத்தைக் கற்றுக்கொள்ளவில்லை.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

பரமஹம்சதேவர் பக்தர்களோடு உரையாடிக்கொண்டிருக்கிறார்.

தாரக்: "என உற்றார் உறவினர் பாரமார்த்திகப் பெருவாழ்வில் எனக்குகந்த மார்க்கத்தில் செல்லுவதற்கு அனுமதி தரமாட்டார்கள்."

பக்தர் ஒருவர்: "இளைஞன் ஒருவனுடைய தாய் அவன் தக்ஷிணேசுவரத்துக்கு வருவதற்கு அனுமதி கொடுப்பதில்லை. 'நீ அங்குச்செல்லுவது என்னைக் கொன்று என் ரத்தத்தைக் குடிப்பதற்கு நிகர்' என்று தடை சொல்லுகிறாள். அத்தகைய தடைக்கு இளைஞன் ஒருவன் கூறவேண்டிய விடை யாதோ?"

பரமஹம்சதேவர்: "இளைஞன் ஒருவன் நல்வழியில் செல்லுவதற்குத் தடைபோடுகிற தாய், தாய் ஆகமாட்டாள். அவித்தையின் சொரூபமாக அன்னவள் இயங்குகின்றாள். அத்தகைய தாயின் சொல்லை மீறி நடப்பது பாபமாகாது. ஈசனுடைய அனுக்ரஹத்தை நாடுகின்ற செல்வனுக்கு அன்னவள் இடைஞ்சல் பண்ணுகிறாள். கடவுள் நாட்டத்தில் ஈடுபடுகிற இளைஞன் ஒருவனுக்கு இடைஞ்சல் பண்ணுகிற பெற்றோரை மீறி நடப்பதில் தோஷம் ஏதுமில்லை. ராம பக்தியில் ஈடுபட்டிருந்த பரதன் தன் தாயின் சொற்படி நடந்துகொள்ளவில்லை. பால கிருஷ்ணனைப் பார்க்கப் போகவேண்டாமென்று கணவன்மார்கள் கோபிமார்களுக்குத் தடைபோட்டார்கள். அத்தடையை அந்த மாதர்கள் பொருட்படுத்தவில்லை. பிரஹ்லாதன் பூண்டிருந்த தெய்வ பக்திக்குத் தந்தை இடைஞ்சல் பண்ணினான். அந்த இடைஞ்சலைப் பிரஹ்லாதன் பொருட்படுத்தவில்லை. ராமசேவையில் முற்றும் ஈடுபட்டிருந்த விபீஷணன் தன் தமையன் ராவணனுடைய சொற்படி நடந்து கொள்ளவில்லை. தமையனை அவன் மீறிச் சென்றான். கடவுள் நாட்டம் ஒன்றில் மட்டும் உற்றார் உறவினர்களையும் பெற்றோர்களையும் ஒருவன் மீறிப்போகலாம். மற்று, உலக விஷயங்களில் அவர்கள் ஆணைக்குட்பட்டே அவன் நடந்து கொள்ளுதல் வேண்டும். உன் கையைக் காட்டு பார்க்கலாம்."

பரமஹம்சதேவர் தாரக்குடைய கையைத் தம் கையின் மீது வைத்து எடைபோடுவது போன்று ஆராய்ச்சி பண்ணினார். சில விநாடிகளுக்குப் பிறகு அவர் பகர்ந்ததாவது: "உன் மன அமைப்பில் ஒரு சிறிய கோணல் இருக்கிறது. ஆனால் நாளடைவில் அது சரியாகப் போய்விடும். கடவுளை நாடிப் பிரார்த்தனை பண்ணு. இடையிடையே இங்கே வா. நீ அப்படிச் செய்வாயாகில் உன் மனதில் உள்ள கோணல் தானே சரியாகத் திருந்திவிடும். டவ்பஜாரில் நீ வசித்து வரும் வீட்டை வாடகைக்கு அமர்த்தியது நீ தானே?"

தாரக்: "அதை வாடகைக்கு அமர்த்தியது நான் அல்லன் ஐயனே; என் பெற்றோர்கள் அங்ஙனம் செய்தார்கள்."

பரமஹம்சதேவர் (புன்னகை பூத்தவராக): "வாடகைக்கு அமர்த்தியவர்கள் அவர்களா அல்லது நீயா? மாதந்தோறும் வீட்டு வாடகை கட்டுவது சிறிது சிரமமான காரியமே. அதை முன்னிட்டுத்தான் அவ்வீட்டை வாடகைக்கு அமர்த்தியது உன் பெற்றோர்கள்; நீ அல்ல வென்று அழுத்தந்திருத்தமாக இயம்புகின்றாய். வனத்தில் வசிக்கும் மான் போன்ற விலங்குகள் வேங்கைக்கும் புலிக்கும் அஞ்சுவது போன்று முறையாக வாடகை செலுத்துவது சிலர்க்குச் சிரமமாகத் தென்படலாம்."

தாரக்கருக்கு விவாகம் ஆயிருந்தது. இளம் மனைவி ஒருத்தியைப் பேணும் பொறுப்பு அவருடையதாயிருந்தது. அதை முன்னிட்டுத் தான் வனத்தில் வசிக்கும் வேங்கைப் புலி போன்ற விலங்குகளை அவர் சான்றாக எடுத்துக் கொண்டார்.

பரமஹம்சதேவரின் பாதங்களில் வீழ்ந்து விட்டுத் தாரக் விடை பெற்றுச் சென்றார். அங்ஙனம் அந்த இளைஞன் புறப்பட்டுப் போயான பிறகு பரமஹம்சதேவர் தாம் அமர்ந்திருந்த சிறிய கட்டிலின்மீது கால் நீட்டிப் படுத்து ஓய்வு எடுத்தார். தாரக்கரைப் பற்றி அவர் சிறிது கவலையுற்றிருந்தவராகத் தென்

பட்டார். திடீரென்று அவர் மகேந்திரரிடம் கேள்வி ஒன்றைக் கிளப்பினர்.

"இந்த இளைஞர்களைப் பற்றி நான் இவ்வளவு கவலை எடுத்துக் கொள்வானேன்?" அக்கேள்விக்கு என்ன மறுமொழி தருவதென்று தெரிந்துகொள்ளாத மகேந்திரர் அமைதியுற்றிருந்தார். ஏதாவது விடை தரலாமாவென்று அவர் மனதிற்குள்ளேயே எண்ணிக் கொண்டிருந்தார். "நீ ஏன் பேசாதிருக்கின்றாய்?" என்று பரமஹம்சதேவர் மகேந்திரரைக் கேட்டார்.

மோகனனுடைய மனைவி இப்பொழுது அறையினுள் வந்து ஒரு பக்கத்தில் அமர்ந்தாள். அவள் அங்ஙனம் அமர்ந்ததைப் பரமஹம்சதேவர் ஆமோதித்தவர் போன்று தென்பட்டார். பரமஹம்சதேவர் மகேந்திரரோடு உரையாடினர். பேச்சு தாரக்ரோடு வந்திருந்த அவருடைய நண்பரைப் பற்றியதாகும்.

பரமஹம்சதேவர்: "அந்த இளைஞனைத் தாரக் ஏன் தன்னோடு இங்கு அழைத்து வந்தான்?"

மகேந்திரர்: "வருகிற வழியிலே வாய்ப் பேச்சுக்கு யாராவது ஒருவன் தேவை என்கின்ற எண்ணத்துடன் தாரக் அவனை அழைத்து வந்திருக்கக்கூடும். கல்கத்தாவிலின்று இங்கு வந்து சேருவதற்கு நேரம் அதிகம் பிடிக்கிறது. அக்காரணத்தை முன்விட்டுத் தன் நண்பனை அவன் அழைத்து வந்திருக்கக்கூடும்."

இப்பொழுது திடீரென்று பரமஹம்சதேவர் மோகனனுடைய மனைவியைத் திரும்பிப் பார்த்து அவளோடு உரையாடினர். "அகால மரணத்துக்கு உட்படுகிறவன் ஒருவன் சிறிது காலத்துக்கு யாதனா சரீரத்தில் வசித்து வருகிறான். அதை நன்கு ஞாபகத்தில் வைத்துக் கொள். தத்துவவிசாரம் ஒருவாறு நீ செய்திருக்கிறாய். அப்படியிருந்தும் உன் உள்ளத்தில் இது போன்ற கேள்வி எழுவதற்கு இடம் தருகிறாய். இந்த எண்ணத்தை அறவே ஒதுக்கித் தள்ளுவது நலம்."

மோகனன் இப்பொழுது விடை பெற்றுச் செல்ல ஆயத்தமாயினன். பரமஹம்சதேவரின் முன்னிலையில் அவன் வீழ்ந்து வணங்கினன். அவனைத் தொடர்ந்து அவன் மனைவியும் பரமஹம்சதேவரை வணங்கினள். அப்பொழுது பரமஹம்சதேவர் தம் அறையின் வடபுறத்து வாயிலண்டை நின்று கொண்டிருந்தார். அவரிடம் மோகனனுடைய மனைவி ஏதோ முணுமுணுத்தாள்.

பரமஹம்சதேவர்: "நீ இங்கேயே தங்கியிருக்க விரும்புகின்றாயா?"

மோகனனுடைய மனைவி: "ஆம் ஐயனே. இங்குச் சில நாட்கள் நான் தங்கியிருக்க விரும்புகிறேன். நஹபத்கானவில் அன்னை சாரதாதேவியார் வசித்து வருகிறார். அவரோடு நானும் இங்குத் தங்கியிருப்பதற்குத் தாங்கள் அனுமதி தருவீர்களா?"

பரமஹம்சதேவர்: "அது மிக நன்று. ஆனால் செத்துப் போவதைப் பற்றி நீ பேசுகின்றாய். அதைக் கேட்டு நான் அஞ்சுகிறேன். உன் விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு மிக அருகில் கங்காநதியும் இருக்கிறது."

கல்கத்தாவில் பக்தர்களோடு பரமஹம்சதேவர் கூடியிருக்கிறார். 1885ஆம் ஆண்டுமார்ச் மாதம் 11ஆம் தேதி அன்று காலையில் பரமஹம்சதேவர் பக்தர்கள் சிலருடன்கூடிக் கல்கத்தாவில் பலராம்போஸுவினுடைய வீட்டுக்கு எழுந்தருளினர். பலராம் போஸுவைப் பாக்யவான்என்றுகருதலாம். பரமஹம்சதேவருடைய கிருஹஸ்த சிஷ்யர்களுள் அவர் ஒருவர். அவரைக் குறித்துப் பரமஹம்சதேவர் இடையிடையே இயம்புவதுண்டு. தம்மைப் பேணி வருவதற்கேற்ற ரக்ஷாதரர்களில் ஒருவராகப் பலராம்போஸ் அன்னை பராசக்தியின் அருளால் நியமிக்கப்பெற்றவர் என்று பரமஹம்சதேவர் கூறுவதுண்டு. பரமஹம்ச தேவரைப் பலதடவைகளில் வரவேற்று அவரைப் பாங்குடன் உபசரித்த பெருமை பலராம்போஸுவுக்கு இருந்தது. அந்த இல்லத்துக்கு வந்த பொழுதெல்லாம் பரமஹம்சதேவர் பெரிதும் சமாதியிலேயே மூழ்கியிருந்தார். அதைத் தொடர்ந்து ஆனந்தப் பரவசத்தில் மூழ்கியவராக அவர் ஆடவும், பாடவும் செய்திருக்கிறார். அதற்கிடையில் பரம்பொருளைப்பற்றிய சம்பாஷணைகளையும் அவர் ஆங்கு நிகழ்த்தியிருக்கிறார். பரமஹம்சதேவரோடு தொடர்பு பூண்டிருந்த பக்தர்கள் எல்லாருக்குமே தக்ஷிணேசுவர

ஆலயத்துக்குப் போகும் வாய்ப்புக் கிடைப்பதில்லை. அதற்கு ஈடாக அவர்கள் குருதேவரைப் பலராம் போஸுவினுடைய மாளிகையில் வந்து தரிசித்தார்கள்.

அங்ஙனம் அங்கே வந்து கூடியவர்களை நல்ல முறையில் உபசரிக்கும்படியும் பரமஹம்சதேவர் பலராம் போஸுவுக்கு உற்சாகமூட்டினர். ராக்கால், பவநாத், நரேந்திரன் ஆகிய தூய்மையே வடிவெடுத்திருந்த இளைஞர்களைப் பரமஹம்ச தேவர் பலராம்போஸுவுக்கு அறிமுகப்படுத்தியிருந்தார். குருதேவருடைய ஆணைக்கு அடிபணியும் பாங்கில் பலராம்போஸுவும் பரமஹம்சதேவருடைய பக்தர்கள் பலரைத் தம்வீட்டுக்குப் பணிவுடன் வரவழைப்பார். சிறப்பாக அந்த இளைஞர்களைக் குறித்துப் பரமஹம்ச தேவர் பகர்ந்ததாவது: "பிறவியிலிருந்தே இந்த இளைஞர்கள் தூய்மையே வடிவெடுத்தவர்கள். இறைவனுடைய சாந்நித்தியத்துக்கு இவர்களுடைய உள்ளம் இருப்பிடமாகிறது. இவர்களுக்கு அமுது படைப்பது இறைவனுக்கு அமுது படைப்பதற்கு நிகராகும். தெய்வீக இயல்பில் ஊறியவர்களாக அவர்கள் பிறப்பெடுத்திருக்கிறார்கள். அவர்களுக்குப் பணிவிடை பண்ணுவது பரமனுக்குப் பணிவிடை பண்ணுவதற்கு நிகராகும்." பலராம் போஸ் தம் குருதேவருடைய ஆணையை முழு மனதோடு நிறைவேற்றி வந்தார். எப்பொழுதெல்லாம் அந்த இல்லத்துக்குப் பரமஹம்ச தேவர் எழுந்தருளினரோ அப்பொழுதெல்லாம் அங்கே பக்தர்களுடைய திருக்கூட்டம் ஒன்று வந்து சேரும். தக்ஷிணேசுவர ஆலயத்துக்கு அடுத்தபடியாகக் கல்கத்தாவில் பலராம் போஸுவினுடைய வீடு பரமஹம்சதேவருக்கேற்ற ஆச்ரமமாக அமைந்திருந்தது. வடக்கே நான்கு மைலுக்கப்பால் உள்ள தக்ஷிணேசுவர ஆலயத்துக்கு அடிக்கடி செல்ல இயலாத பக்தர்கள் இங்கு இந்த இல்லத்தில் கூடி ஒருவரை ஒருவர் நன்கு அறிந்துகொள்ளும் வாய்ப்பைப் பெற்றிருந்தனர்.

இந்த இல்லத்துக்கு அருகில் ஓர் உயர் நிலைப்பள்ளியில் மகேந்திரர் தலைமை ஆசிரியராக உத்தியோகம் பண்ணி வந்தார். அவரிடம் கல்வி பயின்று வந்த மாணக்கர்களுள் பண்பட்டுள்ள சிலரைப் பலராம்போஸுவினுடைய இல்லத்துக்கு அவர் அழைத்து வந்தார். அங்ஙனம் பரமஹம்சதேவரைச் சந்திக்கின்ற வாய்ப்பு அந்த இளைஞர்களுக்கு உண்டாயிற்று. பரமஹம்சதேவர் பலராம்போஸுவினுடைய இல்லத்துக்கு இன்றைக்கு வருகிறார் என்று கேள்விப்பட்ட மகேந்திரர் நண்பகல் ஓய்வு வேளையில் தம் பள்ளியினின்று இங்கு வந்து சேர்ந்தார். வீட்டின் கூடத்திலேயே நண்பகலில் அமுது பண்ணியான பிறகு பரமஹம்சதேவர் அமர்ந்திருந்ததை அவர் பார்த்தார். அக்கூடத்தினுள் இளைஞர்கள் சிலர் பரமஹம்சதேவரின் முன்னிலையில் அமர்ந்திருந்ததையும் பார்த்தார். பரமஹம்சதேவரின் முன்னிலையில் அவர் வீழ்ந்து நமஸ்காரம் பண்ணிவிட்டு அருகில் அமர்ந்தார்.

பரமஹம்சதேவர் (கனிந்த உள்ளத்துடன்): "இப்பொழுது இங்கு வருவது உனக்கு எப்படிச் சாத்தியமாயிற்று? பள்ளியில் இன்று உனக்கு அலுவல் ஒன்றுமில்லையா?"

மகேந்திரர்: "ஐயனே, பள்ளி அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருப்பதற்கிடையில் நண்பகல் ஓய்வு வேளையில் நான் இங்கு வந்து சேர்ந்திருக்கிறேன். சிறிதுநேரம் இங்குத் தங்களோடு சேர்ந்திருப்பது என் அலுவல்களுக்கு இடைஞ்சல் ஆகமாட்டாது."

பக்தர் ஒருவர்: "இல்லை ஐயனே, இன்றைக்கு அவர் பள்ளியினின்று நழுவிக்கொண்டு இங்கு வந்திருக்கிறார்." (இதைக் கேட்டு எல்லாரும் சிரிக்கிறார்கள்.)

மகேந்திரர் தமக்குத் தாமே எண்ணிக்கொண்டதாவது: "ஆஹா, ஏதோ ஒரு தெய்விக சக்தி என்னை இங்கே இழுத்துக்கொண்டு வந்து சேர்த்திருக்கிறது."

பரமஹம்சதேவர் சிறிது ஆழ்ந்து சிந்தனையில் மூழ்கியிருந்தார். பிறகு மகேந்திரரைப் பக்கத்தில் வரும்படி கூப்பிட்டார். அதன் பிறகு அவர் இயம்பியதாவது: "என்னுடைய ஈரத்துண்டைப் பிழிந்து வெயிலில் காயப் போடுவாயாக. அதனோடு நான் அணிந்திருந்த சட்டையையும் வெயிலில் காயப்போடு." மேலும் அவர் பகர்ந்ததாவது: "என் கால்களும், பாதங்களும் ஒருவாறு வலிக்கின்றன. மெதுவாக அவைகளைத் தடவிக் கொடுப்பாயாக."

எந்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

6-23. சத்தம் முதலாந் தழைத்துஇங்கு எமக்கு [உணர்த்தும்
சுத்தமா மாயை தொடக்கு அறுவது எந்நாளோ.

ஐம்பூதங்களுள் முதல் பூதமாகப் பரிணமிப்பது ஆகாசம். இந்த ஆகாசத்தின் தன் மாத்திரை ஓசை. ஓசையோ பிரபஞ்ச அமைப்பில் முதல் இடம் பெற்றிருக்கிறது. ஓசைக்கு நாதம் என்பது மற்றொரு பெயர். அது பெற்றிருக்கிற ஸ்தானத்தை முன்னிட்டு நாதப்பிரம்மம் அல்லது சப்தப்பிரம்மம் என அது அழைக்கப்படுகிறது. ஓசையின் அல்லது சப்தத்தின் ஸ்தூல தோற்றமாக வந்திருப்பது பிரபஞ்சம். வித்தினின்று மரம், செடி, கொடிகள் உண்டாவதுபோன்று நாதம் என்னும் விந்து அல்லது வித்திலின்று பிரபஞ்சம் வடிவெடுத்திருக்கிறது. கைவசம் விதையிருந்தால் அதைக் கொண்டு அதன் விளைவாக வருகிற மரத்தையோ, செடியையோ மனிதன் உண்டுபண்ணிக்கொள்ளலாம். அதே பாங்கில் ஓசையின் தத்துவத்தை அறிந்து கொண்டால் அதன் தோற்றத்திற்கு வந்துள்ள பிரபஞ்சத்தைச் சரியாக அறிந்துகொள்ளலாம். நாத வடிவத்திலிருப்பது நான்கு வேதங்கள். காதால்கேட்டு அறிந்துகொள்ளப்படுவதால் அது சுருதி என்னும் பெயர் பெற்றுள்ளது. பிரபஞ்சத்தைச் சிருஷ்டி பண்ணிய சிருஷ்டிகர்த்தாவாகிய பிரம்மதேவன் முதலில் நாதம் அல்லது ஓசையைத் தோற்றுவித்தான். அந்த ஓசையின் ஸ்தூல வடிவமாக அகிலாண்டம் முழுதும் அமைந்திருக்கிறது. ஓசையின் பல வடிவங்களாக உலகில் மொழிகள் உண்டாகியிருக்கின்றன. ஓசையை உண்டு பண்ணிய பிரம்ம தேவனுக்கு வேத நாயகன் என்னும் பெயர் வந்துள்ளது. உயிர் வகைகளில் பல ஓசையின் துணைகொண்டு தங்கள் கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் பரிமாறிக்கொள்ளுகின்றன. எனவே ஜகத்தும், ஜீவனும் சப்த வடிவம் அல்லது ஓசையின் புறத்தோற்றம் என்பது வெளிப்படை.

இங்ஙனம் நாதத்தின் பண்பட்ட பாங்குகளாக வந்துள்ள மொழிகளின் உதவியைக் கொண்டு பிரபஞ்சத்தின் கூறு உள்ளபடி மனிதனால் அறியப்படுகிறது. இந்த அறிவு முழுதும் அபரவித்தை அல்லது உலகைப்பற்றிய ஞானமாக அமைந்திருக்கிறது. இவ்வுலகுக்கப்பாலிருப்பது பரவஸ்து. அப்பரவஸ்துவோ நாத அதீதம் (நாதாதீதம்) என்று இயம்பப்படுகிறது. எனவே சப்த மயமாக இருக்கிற உலகின் துணைகொண்டு உலகுக்கு அப்பாலுள்ள பரமனை ஆத்ம சாதகன் அடையப் பெறுகிறான் என்னும் கோட்பாடு இக்கண்ணியில் வந்துள்ளது.

6-24. எம்மை வினையை இறையைஎம்பால் [காட்டாத
அம்மை திரோதை அகலுநாள் எந்நாளோ.

அம்மை திரோதை-திரோதானம் என்னும் மாயாதேவியின் மறைப்புச் சக்தி.

ஈசன் பஞ்சகிருத்தியங்கள் உடையவனாக இருக்கின்றான். அவைகளை முறையே சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோதானம், அனுக்ரஹம் என்று இயம்புகிறோம். அந்த ஐந்து செயல்களையே படைத்தல், காத்தல், துடைத்தல், மறைத்தல், அருளல் எனவும் இயம்புகிறோம். இந்த ஐந்து கிருத்தியங்களுள் முதல் மூன்று மயமாகப் பிரபஞ்சம் இயங்கிக்கொண்டிருப்பது வெளிப்படை. மற்று மறைத்தல், அருளல் என்னும் கிருத்தியங்கள் இரண்டும் ஆத்ம சாதகனுக்கே பொருந்தியவைகளாக அமைந்திருக்கின்றன. பரமனுடைய மெய்க்காட்சியை மறைத்து வைத்து மாறுபட்ட காட்சியை வழங்குவது திரோதானம் அல்லது மறைத்தல் என்னும் பெயர் பெற்றிருக்கிறது. இவ்வுலகம் பரமனுடைய திரிவு பட்ட காட்சியாகும். உவமானம் ஒன்றை ஈண்டு எடுத்துக்கொள்வது அவசியமாகிறது. இருண்டு வருகிற நேரத்தில் வழியில் கிடக்கின்ற கயிற்றை வழிப்போக்கன் பாம்பாகப் பொருள் படுத்துகிறான். பாம்பு என்று அவன் எண்ணுகையில் கயிற்றின் மெய்க்காட்சி மறைந்து கிடக்கிறது. விசாரித்துப் பார்த்துக் கயிற்றைக் கயிறாகவே பொருள்படுத்துவது அருளல் அல்லது அனுக்ரஹமாகும். அந்த அரிய

செயலும் அதே அன்னையின் திருவருளால் நிகழ்கிறது. மெய்க்காட்சி தரவேண்டுமென்று அன்னை பராசக்தியைச் சார்ந்திருப்பது ஆத்ம சாதகனுடைய பண்பட்ட நிலையாகும்.

உபமானம் ஒன்று இதற்கு நன்கு உதவுகிறது. அண்ணனும் தங்கையும் தங்கள் தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். விளையாட்டுக்கிடையில் அண்ணன் திடீரென்று மறைந்து போனான். தோட்டத்துக்குள்ளே தங்கை அவனைத் தேடிக்கொண்டிருந்த பொழுது புதர் ஒன்றிலிருந்து கரடி புறப்பட்டு வந்தது. அவ்விலங்கைப் பார்த்த தங்கை திகைத்துப் போனாள். ஓட அவளால் இயலவில்லை; ஸ்தம்பித்து நின்றாள். தங்கையின் பயம் வரம்பு கடந்து போய்விட்டது என்று அறியவந்த அண்ணன் தான் போட்டிருந்த கரடித் தோலை நீக்கினான். 'ஓ, இது அண்ணா தானா!' என்று இயம்பிக்கொண்டு தங்கை மனத்தெளிவடைந்தாள். இதே விதத்தில் தான ஈசுவரன் பிரபஞ்சத்திலுள்ள பலப்பல உயிர்களாக வடிவெடுத்து விளையாடுகிறான். ஈசுவரனை ஜீவர்களாகக் காணுவது திரோதானம் அல்லது மறைப்பு. இத்தனை வடிவங்களில் இறைவன் தானே விளையாடுகிறான் என்னும் உண்மை அறிகிறபொழுது அது அனுக்கிரஹம் அல்லது அருளல். அவன் அருளை நாடியிருத்தல் ஒன்றே ஆத்ம சாதகன் செய்யக்கூடிய செயலாம்.

6-25. நித்திரையாய் வந்து நினைவு அழிக்கும்
கேவலம்ஆம்
சத்துருவை வெல்லும் சமர்த்துஅறிவது
எந்நாளோ.

மனிதன் நாள்தோறும் மூன்று அவஸ்தைகளில் மாறி மாறி இடம் பெறுகிறான். அந்த மூன்று அவஸ்தைகளும் முறையே நனவு, கனவு, கனவற்ற உறக்கம் எனப் பெயர் பெறுகின்றன. ஜாக்ரதாவஸ்தை, சொப்பனாவஸ்தை, சுஷுப்தி அவஸ்தை என்று அவைகள் இயம்பப் பெறுகின்றன. அவஸ்தாத்ரயம் என்பது பொதுப் பெயர். இம்மூன்று அவஸ்தைகளுள் சுஷுப்தி அல்லது கனவற்ற உறக்கத்தில் தனிச் சிறப்பொன்று உண்டு. சுஷுப்தி அவஸ்தை சமாதி நிலைக்கு நிகரானது. சமாதி நிலையிலும் சுஷுப்தி அவஸ்தையிலும் மாயப் பிரபஞ்சம் மாயமாய் மறைந்து போகிறது. ஜீவாத்மனும் தன்னுடைய ஜீவ வியக்தியை இழக்கிறான். ஆங்குக் காண்போனும், காணப்படு பொருளுமில்லை. கால தேச வர்த்தமானம் ஆங்கு இல்லை. இங்ஙனம் நிலையற்றவைகள் நாள்தோறும் சுஷுப்தி அவஸ்தையிலே மனிதனிடத்திருந்து கை நழுவிப் போகின்றன. அச்செயலினின்று மனிதன் கற்றுக்கொள்ளவேண்டிய பாடம் ஒன்று உள்ளது. எது ஓர் அவஸ்தையிலிருக்கவும் மற்றோர் அவஸ்தையில் இல்லாது மறைந்துபட்டுப் போகவும் செய்கிறதோ அது நித்திய வஸ்து ஆகாது. எனவே நாம் வாழ்ந்து வரும் நனவு உலகம் நித்தியமானது அன்று என்னும் பாடத்தை இயற்கைத்தாய் நாள்தோறும் சுஷுப்தி அவஸ்தையின் வாயிலாக நமக்கு விளக்கி வருகிறாள். ஆயினும் ஆயிரத்தில் ஒருவனும் கூட இந்தப் பாடத்தைப் பயன்படுத்த வல்லவனாவதில்லை. இதுவே மாயா சக்தியின் திரோதான வல்லமையாம்.

ஆயினும் ஆயிரத்தில் ஒருவனாவது இதைப் பயன்படுத்தக் கற்றுக்கொள்வானாகில் சாதனத்தில் அவன் நிபுணன் ஆவான். சுஷுப்தி அவஸ்தைக்கும் சமாதி நிலைக்கும் பொதுவாயிருப்பது ஆத்ம சொரூபம். அது துரியம் என்னும் பெயர் பெறுகிறது. மற்று, சுஷுப்தி அவஸ்தைக்கும், சமாதி நிலைக்கும் பெரிய வேற்றுமை ஒன்று இருக்கிறது. சுஷுப்தி அவஸ்தையில் ஆத்ம சொரூபம் மறைந்து பட்டுக்கிடக்கிறது. சமாதிநிலையில் ஆத்ம சொரூபம் முற்றிலும் தன்மயமாய்த் திகழ்ந்து கொண்டிருக்கிறது. தன்னை மறந்திருக்கும் அவஸ்தை, சுஷுப்தி. தன்னை முற்றிலும் அறிந்துள்ள நிலை சமாதி. சமாதி நிலையைப் பெறுவது வாழ்க்கையின் குறிக்கோள். அதன் பொருட்டு, நனவு உலகிலும், கனவு உலகிலும் தான் காண்பவைகளை வெறும் தோற்றம் என்று யார் ஒருவன் ஒதுக்கித்தள்ள வல்லவனாகின்றானோ அன்னவனே சமர்த்தனாகின்றான். ஏனோ தானோ என்று இருப்பவன் சாதனத்துக்குத் தகுதியற்றவன். உறுதியான உள்ளத் தெளிவு படைத்திருப்பவனே அவஸ்தாத்ரயத்தை ஒதுக்கித் தள்ளிவிட்டு அப்பால் செல்ல வல்லவனாகின்றான்.

இயேசுவின் மலை உபதேச விளக்கம்

(சுவாமி பிரபவானந்தரின் கருத்தைத் தழுவியது)

39. பரிசுத்தமான பொருள்களை நாய்களுக்குப் போடாதீர்கள். விலையுயர்ந்த முத்துக்களைப் பன்றியின் முன் போடாதீர்கள். அவைகள் பொருள்களின் மதிப்பை அறியாது, பொருள்களைக் காலால் மிதித்துவிட்டு உங்களையும் வந்து கால் நகங்களால் பிறிவிடும்.

"பாத்திரம் அறிந்து பிச்சை இடு" என்பது பழமொழி. யாருக்கு எதை எடுத்து வழங்குதல் என்பதை அறிந்து வழங்கவேண்டும். பாரமார்த்திக விஷயங்களை விவேகம் படைத்தவர்களுக்குப் புகட்ட வேண்டும். நாம் புகட்டுவதைக் கிரகித்துப் பின்பற்றக் கூடியவர்களுக்குத்தான் புகட்டவேண்டும். முண்டக உபநிஷதம் பகர்வதாவது: "மனத்தூய்மை உடையவர்களுக்கும், பக்தி உள்ளம் படைத்தவர்களுக்கும், ஒழுக்கநெறி நிற்பவர்களுக்கும், பகவத் விஷயங்களை எடுத்துப் புகட்டவேண்டும்." பசித்துள்ள ஒருவனுக்கு உணவு கொடு; அதற்குப்பதிலாக அவனிடம் தத்துவம் பேசாதே. அவனிடம் தத்துவம் பேசினால் அவனுக்கு அது எந்தப்பயனும் தராது. அவனிடம் தத்துவம் பேசும்போது காலத்தை விரயம் செய்தவனாகின்றாய். அர்ஜுனனுக்குக் கீதை உபதேசித்த பின் ஸ்ரீ கிருஷ்ணன் பகர்வதாவது: "அர்ஜுனா! புலனடக்கம் இல்லாதவனுக்கும், பக்தியில்லாதவனுக்கும், தொண்டு புரியாதவனுக்கும், என்னை இகழ்பவனுக்கும் இப்பேருண்மையை நீ இயம்பாதே."

பாரமார்த்திகப் பேருண்மைகளை உண்மையான குரு ஆன்மீக விழிப்பு இல்லாதவரிடம் ஒப்படைக்கமாட்டார். ஆன்மீக விழிப்பு ஏற்படாதவர் பாரமார்த்திக உண்மைகளுக்குச் சரியான விளக்கம் தெரிந்துகொள்ளாது உலக ஆசைகளை நிறைவேற்றுவதற்கு அவ்வுண்மைகளை முறைதவறிப் பயன்படுத்துவார்கள். மேலும் அவற்றைப் பரிகாசத்துக்கு உரியதாக்கிவிடுவார்கள். உலகியல் அறிவை யார் வேண்டுமென்றாலும் பெற்றுவிடலாம். பாரமார்த்திக ஞானத்தைப் பெறுவதற்குச் சில பண்புகள் வேண்டும். ஒழுக்கமில்லாதவர் பாரமார்த்திக உண்மைகளைக் கிரகிக்கமுடியாது. மனத்தூய்மையும், ஞானவேட்கையும், சிரத்தையும் ஒருவரிடம் அமைந்திருந்தால்தான் அவர் பாரமார்த்திக உண்மையைத் தெளிவாகக் கிரகிக்க முடியும். பாரமார்த்திக உண்மையைப் புகட்டும் குருவும் அதைக் கேட்கும் சிஷ்யரும் அடைந்திருக்கின்ற பண்பாட்டிற்கேற்பப் போதனை மிக விரைவில் பயன் தருவதாக அமைகிறது. ஆத்மாவைப் பற்றிக் கேட்கின்றவர்கள் பலர் அதை அறிந்துகொள்ள முடியாத நிலையில் இருக்கிறார்கள் என்று உபநிஷதங்கள் கூறுகின்றன. ஆத்மாவைப் பற்றிப் பேசுகின்றவர் ஆச்சரியத்துக்குரியவராகின்றார். ஆத்மாவை அறிகின்றவரே அறிஞராகின்றார். ஆத்மாவைப் பற்றிப் போதிக்கின்றவரும் அதை அறிந்துகொள்கின்றவரும் பெரும் பேறு பெற்றவர்களாகின்றார்கள். ஆத்மா மனம் மொழிக்கு எட்டாததென்றும் அதை உள்ளபடி அறிந்தவர் ஒருவரும் இல்லை என்றும் பகவான் கீதையில் பகர்ந்துள்ளார். கீதா ஸ்லோகம் வருமாறு:

आश्चर्यवत्पश्यति कश्चिदेनं
आश्चर्यवद्वदति तथैव चान्यः ।
आश्चर्यवच्चैनमन्यः श्रृणोति
श्रुत्वाप्येनं वेद न चैव कश्चित् ॥

ஆச்சர்யவத்பச்யதி கச்சிதேனம்
ஆச்சர்யவத்வததி ததைவ சான்ய:
ஆச்சர்யவச்சைனமன்ய: ச்ருணோதி
ச்ருத்வாப்யேனம் வேத ந சைவ கச்சித்

இவ்வாத்மா வியப்புக்குரியது என்று விழிக்கின்றான் ஒருவன். இது என்ன விந்தை என்று விள்ளுகின்றான் வேறொருவன். ஆச்சரியம் என்று காது கொடுக்கிறான் இன்னொருவன். மற்றொருவன் இதைக் கேட்டும் அறிந்திலன்.

பொருள்களின் மதிப்புத் தெரியாதவர்களிடம் அவற்றைக் கொடுத்தால் அவைகள் பரிகாசத்துக்குரியதாக்கப்படும். அங்ஙனம் பாரமார்த்திகப் பெரும் விஷயங்களை அவற்றின் மதிப்பை அறியாதவர்களிடம் கூறினால் அவற்றைப் பரிகாசத்துக்குரியதாக்கி விடுவார்கள். ஆகையால்தான் வேத உண்மைகள் இரகசியங்கள் என்று சொல்லப்படுகின்றன.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (308) *யோக சக்தியால் இயற்கைச் சக்தியைக் கட்டுப்படுத்த இயலுமா?*

யோக சக்தி வேறு இயற்கைச் சக்தி வேறு அன்று. பிரபஞ்சம் முழுதிலும் ஒரே சக்தி தான் இயங்கிக்கொண்டிருக்கிறது. இந்த ஒரே சக்திக்கு வெவ்வேறு வடிவெடுக்கும் வல்லமை உண்டு. சான்றென்று எடுத்துக் கொள்வோம். காற்றைவிட இலேசானதாக நீராவி வடிவெடுக்குங்கால், அது வானத்தில் மேலே போகிறது. அங்கே உறைந்து கனமாகி மழையாக நிலத்தில் பொழிகிறது. மழை நீர் மலையினின்று அருவியாகக் கீழே பொழிகிறது. குழாய் வழியாக அதைக் கீழே கொண்டு வருகிறபொழுது உயரத்தை முன்னிட்டு அதன் ஈர்ப்புச் சக்தி அதிகமாகிறது. அதைக் கொண்டு சக்கரம் ஒன்றைச் சுழற்றலாம். சுழலுகின்ற சக்கரம் மின்சக்தியை உண்டுபண்ண வல்லதாகிறது. அந்த மின் சக்தியோ வெளிச்சம் தருவதற்கும் ஓசையைக் கிளப்புவதற்கும் வெப்பத்தை உண்டு பண்ணுவதற்கும் எந்திரத்தை இயக்குவதற்கும் வல்லதாகிறது.

இனி, இயற்கையில் உள்ள ஜடசக்தி சித்சக்தியாக மாற வல்லதாகிறது. சூரியனின் வெப்பமும், வெளிச்சமும் ஜடசக்தியின் கூறுகள். அவை இரண்டும் உயிரைப்பேணுகின்றன. அச் செயலின் வாயிலாக அது சித் சக்தியாகமாறுகிறது. உயிர்வகைகளிடத்துச் சித்சக்தியானது விருப்பு வெறுப்பாகவும், இன்பதுன்பமாகவும், காம குரோதமாகவும் மாறியமைகிறது.

மக்களிடத்துத் தென்படும் காம குரோதம், இன்ப துன்பம் ஆகியவைகள் இயற்கைச்சக்தியின் கூறுகளாம். ஐம்பொறிகளைத் தம்போக்கில் செயல்புரியவிட்டுவிடுவது போகம். ஐம்பொறிகளைக் கட்டியாளுதல் யோகம் என்னும் பெயர் பெறுகிறது. யோக சாதனத்தால் மனிதன் காமம், குரோதம், துயரம், பொறாமை ஆகிய கீழ்த்தரமான சக்திகளை அடக்கி அமைதி பேரன்பு ஆகிய தெய்வீக சக்திகளாக மாற்றியமைக்க முடியும்.

**'உரன்என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரன்என்னும் வைப்பிற்கோர் வித்து'**

என்பது பொய்யாமொழி. யோகசாதனத்தின் வாயிலாகவே கீழான பாங்குடைய மனிதன் தெய்வீகப் பெற்றி வாய்ந்த மனிதனாகத் திருந்தியமைய முடியும்.

பௌதிக விஞ்ஞானம் ஒரு நிலையிலுள்ள ஜட சக்தியை மற்றொருவித ஜடசக்தியாக மாற்றியமைக்கிறது. சான்றென்று எடுத்துக்கொள்ளுவோம். வெப்பம் என்னும் சக்தியைக்கொண்டு நீரைக் கொதிகலனில் ஆவியாக மாற்றி அதைப் பிடித்து அடைத்து வைக்கலாம். அப்படி அடைத்து வைத்த ஆவி சக்கரத்தை இயக்க வல்லதாகிறது. அதன் விளைவாக இருப்புப் பாதையில் வண்டித் தொடர் ஓடுகிறது. இது பௌதிக விஞ்ஞானத்தின் சிறப்பு. இதே விதத்தில் மனிதனிடத்து இயல்பாக அமைந்துள்ள ஆசை, சினம், வெறுப்பு, பொறாமை ஆகிய கீழான சக்திகளை யோகசாதனத்தின் வாயிலாகத் தெய்வ சம்பத்தாக மாற்ற முடியும். எனவே, கீழ்நிலையில் உள்ள மனிதன் மேல்நிலையடைவதற்கு யோகசாதனம் ஒன்றே உற்ற உபாயமாம்.

கேள்வி: (309) Motivation is an important factor in psychology. What should be the motive for higher life?

மனோதத்துவ சாஸ்திரம் அல்லது உள நூலில், நோக்கம் முக்கியமான இடம் பெற்றிருக்கிறது. வாழ்க்கையில் மேன்மையுறுவதற்கு மனிதன் கொள்ளவேண்டிய நோக்கம் யாது?

மக்கள் எல்லாரிடத்தும் வெவ்வேறுவிதமான நோக்கங்கள் இருக்கின்றன. பணக்காரன் ஆகவேண்டும் என்பது ஒருவனுடைய நோக்கம். பண்டிதன் ஆகவேண்டும் என்பது மற்றொருவனுடைய நோக்கம். இங்ஙனம் கீர்த்தி, அந்தஸ்து, பதவி ஆகிய நோக்கங்களால் தூண்டப்பெற்று அவைகளைப் பெற மனிதன் முயன்று வருகிறான். பெறுகிற பேறுகளுள் தெய்வீகப் பெற்றியே சாலச் சிறந்தது. கொடிய விலங்கின் பாங்கைப் பெறுதலும் கீழோனாக இருப்பதும் மேலோனாவதும் ஆகிய பாங்குகளனைத்தும் மனிதனுக்குச் சாத்தியம். இத்தனைவிதச் சாத்தியங்களுள் தெய்வீகப்

பெற்றியோடு இலங்குவது சாதனங்களுள் ஒப்புயர்வற்ற பெரிய நிலையாகும்.

'அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்'

என்பது வேத வாக்கு. மக்கள் தாமே இந்த வாக்குக்கு எடுத்துக்காட்டாக யாண்டும் இலங்கிக் கொண்டிருக்கின்றனர். உயிர்கள் அனைத்தையும் அன்போடு நேசித்தல், தன்னுடைய வாழ்வு மற்றவர்களுக்கு நல்ல விதத்தில் பயன்படும்படி பணிவிடைபண்ணுதல், கடவுள் பக்தியை வளர்த்தல் ஆகிய பேரியல்புகளைக் கையாளுவதன் மூலம் மனிதன் மேலோன் ஆகலாம்.

கேள்வி: (310) ஜீவாத்மா, பரமாத்மா இணக்கம் என்ன பாங்கில் அமைந்துள்ளது?

பிரபஞ்சத்தைத் தோற்றுவித்து அதன் நடைமுறையை முறையாகச்சாதித்து வருபவன் பரம்பொருள் அல்லது ஈசுவரன். உலகுக்கு அதிபதியாயிருப்பவன் ஈசன். இதே உலகில் கட்டுண்டு கிடப்பவன் ஜீவாத்மா. உலகில் கட்டுண்டு கிடந்தாலும் ஈசன் அல்லது பரமாத்மனுக்குப் புறம்பானவன் அல்லன் ஜீவாத்மா. ஈசனைக் கடலோடு ஒப்பிட்டால் ஜீவாத்மாக்கள் அக்கடலில் தோன்றும் அலைகளுக்கு நிகர் ஆவார்கள். மரம், செடி, கொடிகள் ஆகிய ஸ்தாவரங்களும், புழு, பூச்சி, பறவை, விலங்கு, மக்கள் ஆகிய ஜங்கமங்களும் ஜீவாத்மாக்களேயாம். எண்ணிறந்த வடிவங்களிலிருக்கும் ஜீவாத்மாக்களனைத்தும் இயற்கையில் கட்டுண்டு இருக்கின்றன. அப்படிக் கட்டுண்டு இருப்பதற்கிடையிலும் ஈசனையே அவையாவும் சார்ந்திருக்கின்றன. அலைகள் கடலைச் சார்ந்திருப்பதற்கு நிகர் உயிர் வகைகள் ஈசனைச் சார்ந்திருப்பது.

ஜீவாத்மாவின் யதார்த்தநிலை பரமாத்மாவுக்குரிய ஸத் சித் ஆனந்த சொரூபமாம். யாண்டும் அழிவற்றிருப்பது ஸத். தன் சொரூபத்தைத் தானே அறிவது பேரறிவு அல்லது சித். தன்னில்,தான் திருப்தியடைந்திருப்பது ஆனந்தம். இத்தகைய ஸத் சித் ஆனந்தம் பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்கும் பொது. ஆனல் அறியாமையினல் ஜீவாத்மன் சச்சிதானந்தத்தைப் புறவுலகமாகிய பிரபஞ்சத்தில் தேடித் திரிகிறன். பிறவிகள் பல எடுத்துத் தன் முயற்சியில் தோல்வியடைந்த பிறகு சச்சிதானந்த சொரூபம் புறத்தில் இல்லை; அகத்தில் இருக்கிறது என்பதை ஜீவாத்மன் அறிய வருகிறன். அந்த அறிவு உறுதி பெறுவதற்கேற்பப் புறவுலகப் பற்றுக் குறைகிறது. பரமனுடைய சொரூபத்தை ஜீவாத்மன் தன் அகத்தில் நாடுகிறன். அந்த நாட்டத்திற்கு அருள்தாகம் என்று பெயர். அருள்தாகம் ஓங்குதற்கேற்பவும் ஜீவாத்மன் ஆத்ம பரிபாகம் அடைகிறன்.

'அற்றது பற்று எனில் உற்றது வீடு' என்பது கோட்பாடாகும். பல பிறவிகளில் தன்னுடைய பிரபஞ்ச வாழ்வைப் பலப்படுத்துதல் பொருட்டு ஜீவாத்மன் அதில் பற்று வைத்திருந்தான். இப்பொழுது பரமனிடத்துப் பற்றுதல் ஓங்குதற்கேற்ப அவன் புரிகிறசெயல்களனைத்தும் பரமாத்மாவின் பெருமையின் பொருட்டேயாம். அத்தகைய முயற்சி கர்ம யோகம் என்னும் பெயர் பெறுகிறது. ஜீவாத்மனுடைய பரம்பொருள் நாட்டம் ஓங்குதற்கேற்ப ஐம்பொறிகளின் வேகமும் தானுகவே தணிகிறது. பொறிவாயில் ஐந்தையும் அவன் அறவே அடக்கியாண்டு வருகிறன்.அத்தகைய முயற்சி ராஜயோகம் என்னும் பெயர் பெறுகிறது. ஜீவாத்மன் தன்மீது வைத்திருந்த பற்றுதலும், உலகத்தின்மீது வைத்திருந்த பற்றுதலும் தெய்வப்பற்ருகத் திருந்தியமைகிறது.பரமனிடத்து வைத்திருக்கின்றபேரன்பு பக்தியோகம் என்னும் பெயர் பெறுகிறது. கடைசியாக ஜீவனும், ஜகத்தும் பரமனுடைய தோற்றங்களாயிருப்பதால் தன்னையும் ஜகத்தையும் ஈசன் மயமாகவே ஆத்மசாதகன் கண்டு பழகுகிறன். அத்தகைய பயிற்சி ஞானயோகம் எனனும் பெயர் பெறுகிறது. இங்ஙனம் இந்த நான்குவித யோகங்களையும் முறையாகக் கையாண்டு ஜீவாத்மன் பிரபஞ்ச வாழ்க்கையினின்று விடுபட்டுப்பரத்தில் ஒன்றுபடுகின்றன். அப்படி ஒன்றுபடுவது கடலில் தோன்றிய அலை கடலிலே மீண்டும் ஒடுங்குவதற்கு ஒப்பானதாம். ஜீவாத்மன் பரத்தில் ஒன்றுபட முயல்வது சாதனையாகும். சாதனையின் மூலம் தன்னைப் பரசொரூபமாகத் திருத்தியமைத்து இறுதியில் ஜீவாத்மன் பரத்தில் ஒன்றுபட்டு முக்தியடைகிறன்.

அம்பிகையின் மஹிமை

(ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் 1981ல் நவராத்திரி விழாவில் சேலத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

சமயம் பரந்த பாங்கிலே பரம்பொருளுக்கு விளக்கம் தந்திருக்கிறது. இறைவனுக்குச் ஸஹஸ்ரநாமங்கள் அமைத்துச் சமயம்விளக்கம் தந்திருக்கிறது. சிவ ஸஹஸ்ரநாமம், விஷ்ணு ஸஹஸ்ரநாமம், லலிதா ஸஹஸ்ரநாமம் என்பன போன்றவை மிகச்சிறப்புவாய்ந்தவைகளாகும். பரம்பொருள் தோற்றத்திலும் இருக்கிறது; தோற்றத்திற்கு அப்பாலும் இருக்கிறது. தோற்றத்தில் இருக்கும் பரவஸ்து சகுணப் பிரம்மம் என்று அழைக்கப்படுகிறது. தோற்றத்திற்கு அப்பால் இருக்கும் பரவஸ்து நிர்குணப் பிரம்மம் என்று அழைக்கப்படுகிறது. நிர்குணப் பிரம்மம் இந்திரியங்களுக்கும், மனத்துக்கும், மொழிக்கும் எட்டாதது.

ஆயிரம் திருநாமங்கள் தோற்றத்திலிருக்கின்ற சகுணப் பிரம்மத்திற்கு விளக்கமாகின்றன. பரவஸ்துவை அம்மை என்றும், அப்பன் என்றும் அழைக்கலாம். மேலும் பரவஸ்துவைத் தோழன் என்றும் பகைவன் என்றும் நம் மனப்பான்மைக்கேற்றவாறு அழைக்கலாம்.

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் தலைசிறந்ததாக இருக்கிறது.சாதாரணமக்களாகியநாம்பிரபஞ்சத்தில் வாழ்வைத் துவக்குகின்றோம். பிரபஞ்ச அதீதத்திலுள்ள பரவஸ்துவை எட்டும் வரையில் பல படித்தரங்கள் நம் வாழ்வில் வந்தமைகின்றன. எல்லாப் படித்தரங்களையும் நம் வாழ்க்கையோடு சம்பந்தப்படுத்துகின்ற பகுதியாக லலிதா ஸஹஸ்ரநாமம் அமைந்திருக்கின்றது. எனவே லலிதா ஸஹஸ்ர நாமத்தைச் சிந்தித்துப் பார்த்து நம்முடைய ஜீவிதத்தை அதற்கேற்றவாறு திருத்தியமைப்போமானல் நம் வாழ்வு பெருவாழ்வாக மாறியமைகின்றது.

ஸ்ரீலலிதா ஸஹஸ்ர நாமத்தில்முதல் நாமமாக அமைந்திருப்பது ஸ்ரீ மாதா. அதில் கடைசி நாமமாக அமைந்திருப்பது ஸ்ரீ லலிதாம்பிகா. குழந்தை பிறந்ததும் முதன் முதலில் தாயை அறிந்துகொள்கிறது. அதன் பிறகு தந்தையை அறிகிறது. அதனல்தான் அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்ற கோட்பாடு வந்துள்ளது. பிரபஞ்சத்தைச் சரியாக ஆராய்ந்து பார்த்தால் பிரபஞ்சம் முழுவதும் அன்னை பராசக்தியின் புறத்தோற்றமாக இருப்பது தெரியும். இப்புறத்தோற்றத்தை அன்னை பராசக்தி மிக மிக எளிதில் அமைத்து வைத்திருப்பதால் லலிதாம்பிகை என்னும் பெயர் பெறுகின்ருள். சிரமப்படாது விளையாட்டுப் போன்று காரியத்தைச் சாதிப்பதற்கு லலிதம் என்று பெயர். லலித கலையை Fine Arts என்று ஆங்கிலத்தில் சொல்லுவார்கள். கவர்ச்சிகரமான கலைஞானம் லலிதகலை ஆகிறது. எண்ணிப் பார்ப்பதற்குக் கவர்ச்சிகரமானவை, பார்வைக்குக் கவர்ச்சிகரமானவை, தொட்டுப் பார்ப்பதற்குக் கவர்ச்சிகரமானவை எவையோ அவை லலித கலைகள் எனப்படுகின்றன. பிரபஞ்சம் முழுவதுமே அன்னை பராசக்தியின் லலித கலைகளாக அமைந்திருக்கின்றன. லலிதா ஸஹஸ்ரநாமங்களுள் மூன்று நாமங்கள் ஈண்டு ஆராய்ச்சி செய்யப்படுகின்றன.

முதல் நாமமாக இருக்கின்ற ஸ்ரீ மாதா அகிலாண்டத்திற்கும் அன்னையாக இருக்கின்ருள். இரண்டாவது நாமமாக இருக்கின்ற ஸ்ரீ மகா ராக்ஞை என்பது அன்னை ஆட்சித் திறமைவாய்க்கப் பெற்றவளாக இருக்கிருளென்பதைக் குறிக்கின்றது. பராசக்தி சாந்த மூர்த்தியாகவும், உக்கிரமூர்த்தியாகவும் இருக்கின்ருள். பொறுமைக்கு இருப்பிடமாகப் பூமாதேவி என அழைக்கப்படுகின்ருள். பூமி பொறுமையே வடிவெடுத்ததாக இருக்கின்றது. பூமியில் பூகம்பம் ஏற்படும்பொழுது நகரங்களும், கணக்கற்ற உயிர்வகைகளும் சிறிது நேரத்தில் இருந்த இடம் தெரியாமல் அழிந்து போகின்றன. இத்தகைய உக்கிர சொரூபமாகப் பூமி வடிவெடுக்கிறது. உலகில் பூகம்பங்கள் ஏற்படுவதை நாம் காண்கின்றோம். பொறுமையே வடிவெடுத்திருப்பது பூமியின் பாங்காகும். இடையிடையே அது பயங்கர வடிவெடுப்பதும் உண்டு. நீர் உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாதது. ஆனல் மழை ஏராளமாகப் பெய்து நீர்ப்பெருக்கு ஏற்படுமானல் வீடுகளும், தோட்டந்துரவுகளும், உயிர் வகைகளும் நீர்ப் பெருக்கால் அழிந்து

போகின்றன. மிகைபட நீர்ப்பெருக்கு உண்டாகின்றபொழுது நீர் பயங்கர சொரூபமாக வடிவெடுக்கிறது. அக்னி நம் வாழ்க்கைக்கு இன்றியமையாத பகுதியாகும். நம்முடைய சரீரத்திலேயே வைசுவாநரன் என்ற அக்னி இருந்து கதகதப்பைத் தந்துகொண்டிருக்கிறது. வாழ்க்கைக்குக் கதகதப்பு இன்றியமையாதது. உடலில் சீதம் ஏற்படுமானால் உயிர் அழிந்து பட்டுப்போகும். உடல் வாழ்க்கைக்கு அக்னி அவசியமாகிறது. ஆனால் நெருப்பு வீட்டைப் பற்றிக்கொள்ளும் பொழுதோ, காட்டைப் பற்றிக்கொள்ளும் பொழுதோ அது பெரும் தீமையைச் செய்கிறது. காற்று இல்லாமல் நொடிப்பொழுதும் நாம் வாழ்ந்திருக்க முடியாது. வாழ்க்கைக்கு இன்றியமையாத காற்று சூறாவளியாக வடிவெடுக்குமானால் அது தீமையை உண்டு பண்ணுகின்றது. ஐம்பூதங்களுள் ஆகாயம் நீங்கலாக மற்ற நான்கு பூதங்களும் சாந்தமாக இருக்கும் வேளையும் உண்டு; பயங்கர வடிவெடுக்கின்ற வேளையும் உண்டு. பூகம்பத்தை முன்னிட்டு நாம் பூலோக வாழ்வை நிறுத்திவிட முடியாது. இனி, நீர்ப்பெருக்கை முன்னிட்டும், பெருந்தீயை முன்னிட்டும், புயல் காற்றை முன்னிட்டும் நாம் வாழ்க்கையை நிறுத்திவிட முடியாது. சாந்தமாக இருக்கும் இயற்கை சில வேளைகளில் பயங்கர வடிவமெடுக்கின்றது என்பது மறுக்க முடியாத உண்மை. அத்தகைய பயங்கர வேளைகளில் அவற்றைச் சமாளித்துப் பழகுதல் வாழ்க்கையின் இன்றியமையாத பகுதியாகும்.

அன்னை பராசக்தி எல்லா உயிர்களிடத்திலும் தாய் வடிவத்திலிருப்பதைப் போற்றுகின்ற தேவீ மகாத்மியத்தின் சுலோகம் வருமாறு :

யா தேவீ ஸர்வபூதேஷு மாத்ருரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:

சிற்றுயிர் பேருயிர் ஆகிய எல்லா உயிர்களும் ஆரம்ப தசையில் அன்னையைச் சார்ந்திருக்கின்றன. ஆரம்ப நிலையில் அன்னையைச் சார்ந்திருக்கும் உயிர்வகைகள் தங்களைத் தாங்களே பராமரித்துக்கொள்ளும் பரிபக்குவம் அடைந்ததும், பெரும்பான்மை உயிர்கள் தாயினிடமிருந்து விலகிக்கொள்கின்றன. வீட்டில் வளர்ந்து வரும் கோழியைச் சான்றாக எடுத்துக்கொள்ளலாம். தாய்க்கோழி தன் குஞ்சுகளைக் கவலையோடு பாதுகாத்து வருகின்றது. குஞ்சுகள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளும் பருவமடைந்ததும் தாய்க்கோழி குஞ்சுகளை விரட்டி ஓட்டிவிடுகின்றது. ஆரம்ப தசையில் குஞ்சுகளுக்குத் தாயின் பராமரிப்பு அவசியமாகிறது. மரம், செடி, கொடிகளுக்கிடையிலும் தாயின் நிலையிலிருக்கின்ற ஒரு பகுதி இருக்கின்றது. மரம், செடி, கொடிகள் விதைகளைத் தோற்றுவிப்பதற்கும் அவற்றைத் தகுந்த நிலையில் உருவாக்குவதற்கும் தாய் நிலையிலிருந்து செடி கொடிகள் பராமரித்து வருகின்றன என்பது இயற்கையை ஆராய்ந்து பார்க்கின்றவர்களுக்கு விளங்கும். சிறு விதையாக இருக்கும்பொழுது விதை எது, மற்றப் பகுதிகள் எவை என்று பாகுபடுத்த முடியாத நிலை இருக்கின்றது. நாளாக ஆகப் பழத்திலிருந்து விதை பிரிந்துவிடுகிறது. நல்ல விதையாக அமைவதற்குத் தாயின்நிலையிலிருக்கின்ற மரம், செடி, கொடிகள் எடுத்துக்கொள்கின்ற பாதுகாப்பு மிக மிக அற்புதமாக அமைந்திருக்கிறது. தாவரத்தை அணுகி ஆராய்கின்றவர்களுக்குத் தாய்ச்செடி, விதையைப் பரிபாலித்து உருவாக்குகின்ற உண்மை நன்கு விளங்கும்.

ஸ்ரீ மாதா என்ற நாமம் தாவரத்திற்கே பொருந்துகின்றது. தாவரமாக இருக்கும்உயிர் பரிணமித்து ஜங்கமமாக மாறுகின்றது. இது உயிர்த்தோற்றத்தைப்பற்றிய உண்மையாகும். பரவஸ்து பிரபஞ்சத்தில் எண்ணிறந்த உயிர் வகைகளாகப் பரிணமித்து வருகின்றது. இதற்குப் பரிணாம வாதம் என்று பெயர். கல்லாக இருக்கும் நிலையிலேயே உயிர்த்தத்துவம் வந்துவிடுகிறது. கல்லில் உயிர் உண்டு என்று இன்றைய பௌதிக விஞ்ஞானம் நிரூபித்து வருகின்றது.

கல் மயமாக வாழ்க்கை வடிவெடுக்கின்றது. பிறகு, மரம் செடி கொடிகளாகப் பரிணமித்து வருகின்றபொழுது வளர்ச்சியைக் காண்கின்றோம். எது உயிர் பெற்றிருக்கின்றதோ அதனிடத்து வளர்ச்சி உண்டு. ஜங்கமமாக மாறுகின்றபொழுது முட்டையிட்டும், குட்டி போட்

டும் இனத்தைப் பெருக்குகின்ற பாங்கைக் காண்கின்றோம். பறவை அலகினால் அருமையான கூடு அமைக்கின்றது. அக்கூட்டில் முட்டையிட்டு முட்டையை அடைகாக்கிறது. முட்டையை அடைகாக்கின்றபொழுது பறவை அடிக்கடி வெளியே போகுமானால் முட்டைக்கு ஏற்படும் கதகதப்புக் குறைந்து போய்விடும். முட்டையின் மீது கதகதப்பு உண்டுபண்ணுவதற்காகப் பறவை, முட்டையின் மீது அமர்ந்திருக்கின்றது. தாய்மையின் பாங்கு பறவையினிடத்து இங்ஙனம் வெளியாகின்றது. பறவை முட்டையை அடைகாத்துக் கொண்டிருக்கும் பொழுது சத்ருக்களாக இருக்கின்ற வேறு பறவைகள் ஆங்கு வந்தால் ஆண் பறவைகள் அவைகளைத் தாக்கி விரட்டி ஓட்டுகின்றன. முட்டையிலிருந்து குஞ்சு வெளிவருவதற்கு முன்பு தாய்ப் பறவை சிரமம் அதிகம் எடுத்துக்கொள்கிறது. குஞ்சாக வெளிவந்த பின் தாய்ப் பறவை தான் உணவை எடுத்து உண்டு ஜீரணம் செய்து குஞ்சின் வாயில் போட்டு அதைப் பராமரித்து வருகின்றது. இதை ஆராய்ந்து பார்த்தால் பறவைகளுக்கு இடையில் தாய்மையின் பாங்கு எத்தகையது என்பது விளங்கும்.

தாய்நிலையில் இருக்கின்ற பறவை தவம் பண்ணுகின்ற பாங்கில் தன் இனத்தைப் பாதுகாக்கின்றது. இதை முன்னிட்டே சக்தி, ஸ்ரீ மாதா என்று அழைக்கப்படுகின்றாள். விலங்குகள், குட்டி போட்டு, பால் கொடுத்து வளர்க்கின்றன. சாந்தமாய் இருக்கின்ற மான் இனங்கள், குட்டிகளைப் பாதுகாப்பது ஒரு போக்கில் அமைந்துள்ளது. கொடூரமாக உள்ள புலி, சிறுத்தை தங்கள் குட்டிகளைப் பாதுகாப்பது இன்னொரு போக்கில் அமைந்துள்ளது. தாய்மை, சாந்தமே வடிவெடுத்துள்ள மானிடத்திலும் தென்படுகிறது; கொடூரத் தன்மையே வடிவெடுத்துள்ள புலி, சிறுத்தைகளிடத்தும் தென்படுகிறது. குட்டிகளுக்குப் பால் கொடுப்பதிலும், எதிரிகளிடமிருந்து குட்டிகளைக் காப்பாற்றுவதிலும் தாய்மை வகிக்கின்ற எல்லா விலங்குகளும் கருத்துச் செலுத்துகின்றன. இயற்கையை ஆராய்ந்து பார்த்தால் இறைவனுடைய மஹிமை, என்னென்ன பாங்கில் வடிவெடுத்திருக்கின்றது என்பது விளங்கும்.

வட இந்தியாவில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியைக் காண்போம். வனத்தில் புலி ஒன்று இரண்டு குட்டிகள் போட்டு, குட்டிகளோடு வாழ்ந்து வந்தது. வேட்டைக்காரர்கள் தாய்ப் புலி இல்லாதபொழுது அவ்விரண்டு புலிக் குட்டிகளையும், தூக்கிக்கொண்டு வந்து ஒரு பங்களாவில் வைத்து வளர்த்து வந்தார்கள். தாய்ப்புலி, பதுங்கி இருந்து பங்களாவில் நடப்பதை எல்லாம் கவனித்து வந்தது. தக்க தருணம் பார்த்துப் பங்களாவுக்குள் நுழைந்து, ஆங்கிருந்த ஆட்களைக் காயப்படுத்தி விட்டுக் குட்டிகள் இரண்டையும் தூக்கிக்கொண்டு போய்விட்டது. குட்டியின் மீது அதற்கு எவ்வளவு பாசம் என்பது இதிலிருந்து விளங்குகிறது. இங்ஙனம் தாய்நிலையிலிருக்கும் உயிர் அதனதன் இனத்தை நன்கு பரிபாலித்து வருவதால், ஸ்ரீ மாதா என்கின்ற பதம் பொருத்தமானதாக இருக்கின்றது.

இம்மானிட உலகில் தாய்மையினுடைய மகிமை இன்னும் நன்றாக வெளியாகிறது. கர்ப்பத்தில் உள்ள குழந்தையைத் தாய் மிகப் பிரயத்தனம் எடுத்துப் பத்திரமாகப் பாதுகாத்து வருகிறாள். குழந்தைக்காக அவள் வெகு சிரமம் எடுத்துக்கொள்கிறாள். சிசு கர்ப்பத்தில் இருக்கும் பொழுது கல்வி ஆரம்பம் ஆகிவிடுகின்றது என்பதை நாம் நன்கு அறிந்திருக்க வேண்டும். கர்ப்பத்தில் சிசு உருவாகிக் கொண்டு வரும்பொழுது, தாயின் எண்ணம், மறைமுகமாகச் சிசுவுக்கு உதவிபுரிகின்றது. பேரியல்பு படைத்தவளாகத் தாய் இருப்பாளாகில், அப்பேரியல்பு சிசுவுக்கும் அமைகின்றது. சிற்றியல்பு படைத்தவளாகத் தாய் இருப்பாளாகில், அச்சிறுமை குழந்தைக்கும் அமைந்துவிடுகிறது. கர்ப்பவதியாக இருக்கின்ற சமயத்தில், நல்ல சூழ்நிலையில் வாழ்ந்துவரவேண்டும். கணவனும் மனைவியும் எவ்வளவுக்கெவ்வளவு பாரமார்த்திகப் பெருவாழ்வில் ஈடுபட்டிருக்கின்றார்களோ, அவ்வளவுக்கவ்வளவு அவர்களுக்கு வாய்க்கின்ற சிசுவும் தலைசிறந்ததாக அமையும். இதையொட்டி மனுநீதியில் சிசுவைப்பற்றிய ஒரு கோட்பாடு உள்ளது. தவத்தின் விளைவாகப் பிறக்கும் பிள்ளை ஆரியர்கள் ஆவார்கள். காம நோய்க்கு வசப்பட்டு

பிறப்பவர்கள் அநாரியர்கள் ஆவார்கள். ஆரியன் என்பது ஜாதியைக் குறிக்கும் சொல் அன்று. ஆரியன் என்ற பதத்திற்குப் பண்பாட்டில் மேலே வந்தவன் என்பது பொருள். 'ஐயர்', 'ஐயன்' என்பவையெல்லாம் 'ஆரிய' என்பதன் திரிபுகளாகும். ஆரியன் என்றால் போற்றுதற்குரிய பெரியவன் என்பதாகும்.

ஆரியன் ஆவது வாழ்க்கையின் குறிக்கோள். மனிதன் விலங்குத்தன்மையை வென்று, தெய்வீகத்தன்மையைப் பெறுவானாகில் அவன் ஆரியன் ஆகின்றான். விலங்குபோன்று கீழ் நிலையிலேயே உழல்வானாகில், அவன் மாக்கள் கூட்டத்தைச் சேர்ந்தவனாகின்றான். இது வாழ்க்கையைப்பற்றிய உண்மை என்றால், கர்ப்பிணியாகிய தாய் எத்தகைய தவம் பண்ணவேண்டும் என்பது விளங்குகின்றது.

நரேந்திரர் என்பவர் உலகப் பிரசித்தி பெற்றவராக எதிர்காலத்தில் விவேகானந்தராக விளங்கினார். விசுவநாத தத்தருக்கும், புவனேசுவரி மாதாவுக்கும் பிள்ளையாகப் பிறந்தவர் நரேந்திரர். தாயின் கர்ப்பத்தில் இருந்தபொழுது, தாய் புவனேசுவரி மாதா தவத்திலும் பிரார்த்தனையிலும் ஈடுபட்டு இருந்தாள். "மேலைத் தவத்தளவே ஆகுமாம் தாம் பெற்ற செல்வம்" என்ற கோட்பாட்டுக்கு ஏற்ப சித்த புருஷராக நரேந்திரர் பிறப்பதற்குத் தாய் தந்தையர்கள் எடுத்துக் கொண்ட முன்னேற்பாடு மிக முக்கியமானது. தாய்மை ஸ்தானம் சமுதாயத்தில் எவ்வளவு பெரியதாக அமைந்திருக்கிறது என்பதை ஆராய்ந்து பார்த்தால் விளங்கும். கடவுளையே தாய் என்று வணங்குகின்றோம். பெண்பாலரைக் கடவுள் சொருபமாகக் கருதிப் போற்றவேண்டும். சமுதாயம் ஒன்றில் பெண்பாலர் எவ்வளவுக்கு எவ்வளவு தெய்வீகம் வாய்ந்தவர்களாகக் கண்ணியப்படுத்தப் படுகின்றார்களோ, அவ்வளவுக்கவ்வளவு அந்தச் சமுதாயம் தலைசிறந்த சமுதாயம் ஆகின்றது. ஸ்ரீ மாதா என்கின்ற நாமத்தில் இவ்வரிய பொருள் அமைந்து இருக்கின்றது.

அடுத்தபடியாக ஸ்ரீ மகாராக்ஞை என்ற நாமத்தை எடுத்துக் கொள்வோம். மகாராக்ஞை என்றால் பராசக்தி பேரரசியாகவிளங்குகின்றாள் என்பது பொருள். உலகம் அனைத்திலும் தாய் அன்போடு சிசுக்களைப் பராமரித்து உருவாக்குகின்றாள். அது தாயினுடைய கடமை. குழந்தை செய்யும் சிறுபிழைகளைத் தாய் பொறுத்துக்கொள்ளுவது போல, யாரும் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள். உலகத்தில் துஷ்ட புத்திரர்கள் இருக்கின்றார்கள். ஆனால் துஷ்ட தாய் இல்லை. தாயினிடத்தில் கொடுமையாக நடந்துகொள்ளும் புத்திரர்களைக் காணலாம். ஆனால் குழந்தையினிடத்துக் கொடுமையாக நடந்துகொள்ளும் தாயைக் காணமுடியாது. துஷ்ட மிருகங்கள் கூடத்தங்கள்குட்டிகள் இடத்தில் வைத்துள்ள அன்பு சாதாரணமானதன்று. அத்தகைய அன்பு முற்றிலும் அவசியமாகின்றது.

பிறந்தது முதற்கொண்டு குழந்தைகளுக்காகத் தாய் பத்தியம் இருக்கின்றாள். குழந்தைகளுக்காகத் தாய் அல்லும் பகலும் படாதபாடு படுகின்றாள். அத்தகைய பொறுப்புக்கு ஏற்ற நல் உணர்வு அவர்கள் உள்ளத்துள் வடிவெடுக்கின்றது தாயாகப் பொறுப்பு வகிக்கின்றவள் செய்கின்ற தவம் சாமான்யமானதன்று. இதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொண்டால் இயற்கையில் அன்னை பராசக்தி என்னென்ன பாங்கில் உயிர்களைப் பேணி வருகிறாள் என்பது விளங்கும். குழந்தையை அன்போடு வளர்ப்பதற்கிடையில் கட்டுப்பாடான வாழ்க்கை முறையில் நடாத்துவதில் கண்டிப்பாக இருக்கவேண்டும். 'சிறியோர் செய்த சிறு பிழையெல்லாம் பெரியோராயின் பொறுப்பது கடனே' என்பது கோட்பாடு. சிறு குழந்தைகள் செய்கின்ற தவறைத் தவறாக எடுத்துக்கொள்ளக் கூடாது. பொறுமையுடன் இருந்து அதைத் திருத்தியமைக்க வேண்டும். பெரியவர்கள் ஆனபிறகு தவறுதல் செய்ய இடம் தரக்கூடாது. பெரியவர்கள் செய்கின்ற தவறுகளுக்கெல்லாம் மன்னிப்புக் கொடுத்துக் கொண்டேபோனால் தவறை வளர்த்துக்கொண்டு போனவர்களாகிறோம். பெரியவர்கள் செய்கின்ற தவறுக்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இயற்கைத் தாய் அதைச் செய்து வருகின்றாள்.

அன்னை பராசக்திக்குக் கோல்வளையாள் என்பது ஒருபெயர். 'செங்கோலைவிட்டுப் பிசகுதல் இல்லை' என்பது அதன் பொருள். பரா

சக்தி அரசியாக இருந்து செய்கின்ற ஆட்சி முறை அற்புதமானது. ''தாயான தத்துவனைத் தானே உலகேழும் ஆயானை ஆள்வானைப் பாடுதுங்காண் அம்மானாய்" என்று மாணிக்க வாசகர் பகர்கின்றார். அன்னை பராசக்திக்கு ஆளுகின்ற பகுதியும் வந்தமைகின்றது. பெற்றெடுத்து வளர்த்து வருகின்ற பொழுது ஸ்ரீ மாதா ஆகின்றாள். ஆட்சி செய்கின்ற பொழுது மகாராக்ஞை ஆகின்றாள். மகாராணியாக இருந்துகொண்டு நெறி பிறழாத பாங்கில் இயற்கைத்தாய் மக்களைப் பேணிக் காப்பாற்றி வருகின்றாள். அரசாங்கச் சட்டத்திலிருந்து குற்றம் செய்பவர்கள் தப்பித்துக் கொள்ளலாம். ஆனால் இயற்கைத் தாய் அமைத்துள்ள இயற்கை நியதியிலிருந்து மனிதன் பிசகுவானானால் அக்கணமே அதற்குரிய தண்டனை கிடைத்துவிடுகின்றது.

சான்று எடுத்துக்கொள்வோம். பஞ்சசீலம் என்னும் வாழ்க்கைத் தத்துவம் மனிதனால் உண்டுபண்ணப் பட்டதன்று. இயற்கை நடைமுறையை அது ஒட்டியதாகும். அஹிம்சை, சத்யம், அஸ்தேயம், பிரம்மச்சரியம், அபரிகிரஹம் என்ற ஐந்தும் பஞ்சசீலங்கள் ஆகின்றன. இவை இயற்கையாக அமைந்த சட்ட திட்டங்களாகும். இம்சை பண்ணுகின்ற ஒருவன் தனது மேலான இயல்பை இழந்துவிட்டுக் கொடூரத் தன்மை வாய்ந்தவனாக மாறியமைகின்றான். உயிர்களிடத்தில் இரக்கம் காட்டாதவன் விலங்கு நிலைக்குத் தன்னைத் தாழ்த்திக்கொள்ளுகின்றான். மேல் நிலையிலிருந்து அவன் கீழே தள்ளப்பட்டவனாகின்றான்.

வாய்மை மனிதனை மேல் நிலைக்குக்கொண்டு வருகின்றது. "தன்னெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின் தன்னெஞ்சே தன்னைச் சுடும்'' என்பது கோட்பாடு. பொய் சொல்லக் கூடாது என்பது இயற்கையின் திட்டம். அது மனிதன் போட்ட திட்டமன்று. பொய் சொல்கின்றவனுக்குப் பொய் சொல்லுகின்ற அக்கணமே மனச்சாட்சி கெட்டுப்போகின்றது. இயற்கையினுடைய நியதிகளை மனிதன் எப்பொழுதெல்லாம் மீறிப் போகின்றானோ, அப்பொழுதெல்லாம் அவன் பதிதன் ஆகின்றான். உள்ளம் சத்பொருளாகிய ஆத்ம சொரூபத்தைத் தியானம் செய்துகொண்டிருக்க வேண்டும். பொய்ப் பொருளாகிய உடலையும் உலக விஷயங்களையும் எப்பொழுதெல்லாம் உள்ளம் சிந்திக்கின்றதோ அப்பொழுதெல்லாம் அது உயர்ந்த நிலையிலிருந்து கீழ்நிலைக்குப் போகின்றது. அப்படி உள்ளம் கீழ்நிலைக்குப் போவது உலக விஷயங்களைச் சிந்திக்கிறவனுக்குத் தெரியும். மற்றவர்களுக்கு அது தெரியாது.

அரசாங்கம் போட்டுள்ள சட்டதிட்டத்தை அறிந்திருக்கும் ஒருவன் அதை மீறி நடப்பானானால் அவன் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். மனச்சாட்சியாகத் தெய்வம் எல்லார் உள்ளத்திலும் இருந்து வருகின்றார். ''யானேதும் அறியாது என்னுள்ளத்து வந்து நல்லனவும் தீயனவும் காட்டா நின்றாய்'' என்பது ஆன்றோர் வாக்கு. அரசாட்சி செய்யும் அன்னை பராசக்தி மனச்சாட்சியாக நம் உள்ளத்தில் இருந்துகொண்டு நல்லது எது, கெட்டது எது என்று காட்டித்தருகின்றாள். மனச்சாட்சிக்கு ஒத்தது எல்லாம் பாராட்டுதற்குரிய பெரிய செயல்களாக இருக்கும். மனச்சாட்சிக்கு முரண்படுகின்றன எல்லாம் நிராகரிக்கப்படுகின்ற கீழ்த்தரமான செயல்களாக இருக்கும். நிராகரிக்கக்கூடிய கீழ்த்தரமான செயல்களில் ஈடுபடுகின்ற மனிதன் அக்கணமே கீழ்மையுறுகின்றான். வேறு யாரும் அவனைக் கீழ்மைப்படுத்த வேண்டியதில்லை. மனச்சாட்சிக்கு முரணாகச் செயல்படுகின்றவன் தன்னைத் தானே பாழ்படுத்திக் கொள்கின்றான். "தானே தனக்குச் சுற்றமும் தானே தனக்கு விதிவகையும்'' என்கின்ற கோட்பாடு அன்னை பராசக்தி அமைத்து வைத்துள்ள வாழ்க்கைச் சம்பந்தமான புதிய கோட்பாடாகும்.

பேரரசி சொரூபமாக இருக்கின்ற அன்னை பராசக்தி இயற்கைத் தாயாக இருந்துகொண்டு மக்களாகிய நம்மை நல்வழிப்படுத்தி வருகின்றாள். நாம் எப்பொழுதெல்லாம் மனச்சாட்சியை மீறி நடந்துகொள்கின்றோமோ அப்பொழுதெல்லாம் நாம சீர்கேடு அடைகின்றோம். சீர்கேடு அடைவது நமக்குத் தெரியும். அது மற்றவர்களுக்குத் தெரியாது. அன்னை பராசக்தி நம் உள்ளத்தில் பேரரசியாக இருந்துகொண்டு நம்மை நல்வழியில் நடாத்தி வருகின்றாள். அவள் நடாத்தும் நல்வழியி

வின்றும் மீறிப் போகின்றவர்கள் துன்பத்திற்கு ஆளாகின்ருர்கள்.

மண்ணுலகில் பிறந்தவர்கள் யாவரும் துன்பப்பட்டேயாக வேண்டும். துன்பத்திலிருந்து விலகி யாரும் வாழ்ந்திருக்க முடியாது. உலக வாழ்வில் இன்பமும், துன்பமும் மாறி மாறி வந்தமைகின்றன. துன்பம் ஏன் வந்தது என்று ஆராய்ச்சி செய்கின்ற திறமை மனிதனுக்கு உண்டு. அத்திறமை மற்ற உயிர்களுக்கு இல்லை. துன்பப்பட்டுக்கொண்டிருப்பதற்கிடையில் துன்பம் ஏன் வந்தது என்று முறையாக ஆராய்ச்சி செய்வானுனல், அவன் செய்த குற்றம் அவனுக்கு விளங்கும். எந்தக் குற்றத்தின் வினைவாகத் துன்பம் வந்திருக்கிறது என்பதையும் அவன் அறிந்துகொள்வான். அன்னை பராசக்தி செய்து வரும் தெய்வீக ஆட்சியை யாரும் மீறி நடந்துகொள்ள முடியாது. நலம் கேடுகளுக்கேற்ற வினைப்பயன், செய்தவனை வந்து சேரும். அதிலிருந்து அவன் தப்பிக்க முடியாது. வினைக்கேற்ற வினைப்பயன் உண்டு என்னும் உண்மையை அறிந்துகொண்டால், தீமையை விலக்குகின்ற விவேகம் தானுக வந்தமைகின்றது. நலம் செய்கின்றவர்கள் எல்லாரும் நலனடைகின்ருர்கள்; கேடு செய்கின்றவர்கள் கேட்டை அடைகின்ருர்கள். இந்த நியதியை விட்டு யாரும் பிசகிப்போக முடியாது என்பதை அன்னை பராசக்தியினுடைய ஆட்சித்திறமை எடுத்துக் காட்டுகிறது.

நல்ல குடிமக்களாகப் பிறந்து நல்லமுறையில் வாழ்ந்திருந்தால் மட்டும் போதாது. வாழ்க்கைக்கு ஒவ்வொரு ஆணும், பெண்ணும் தங்களை ஆயத்தப்படுத்துவது அவசியமாகிறது. இயற்கை சாந்தமாக இருப்பதோடு மட்டுமின்றி உக்கிர சொருபமாக இருக்கிறதென்பதையும் நாம் ஆராய்ந்தோம். சிவம் என்ருல் மங்களம் என்பது பொருள். நாம் வழிபடுகிற சிவன் ருத்ரமூர்த்தியாக வடிவெடுப்பதுண்டு. அப்பொழுது அவர் பயங்கர மூர்த்தியாக மாறியமைகின்ருர். சாந்த மூர்த்தியாக இருக்கின்ற மகாவிஷ்ணு நரசிம்ம மூர்த்தியாக மாறியமைகின்ருர். சாந்தமூர்த்தியாக இருக்கின்ற அன்னை பராசக்தி, பயங்கர சொருபம் எடுக்கும் பொழுது அவள் மகாகாளியாக மாறியமைகின்ருள். வாழ்க்கைப் பயிற்சி பெற விரும்புகின்ற நமக்கு எல்லாவித முறைகளும் தேவைப்படுகின்றன. பள்ளிக்கூடத்திற்கு மாணுக்கர் கல்வி கற்பதற்காக வருகின்ருர்கள். இயற்கைக்கு வருகின்ற உயிர்கள் முன்னேற்றமடைவதற்காக வருகின்றன. சிற்றுயிர்க்கும் பேருயிர்க்கும் அடிப்படையமைப்பில் வேற்றுமை இல்லை. பரிபாகத்தில் அவைகளுக்கிடையில் வேற்றுமை உண்டு. பள்ளியில் கீழ் வகுப்பில் படிக்கின்றவர்களும், மேல் வகுப்பில் படிக்கின்றவர்களும் மாணுக்கர்கள் என்று பெயர் பெறுகின்றனர். ஆனுல் அவர்கள் கற்கும் கல்வியில் ஏற்றத் தாழ்வுகள் இருக்கின்றன. அந்த விதத்தில் உயிர்களுக்கிடையில் பரிபாகத்தில் ஏற்றத் தாழ்வுகள் இருக்கின்றன. ஸ்தாவரமாக இருக்கின்ற உயிர்கள் ஜங்கமமாகப் பரிணமிக்கின்றன. ஜங்கமமாக இருக்கின்ற சிற்றுயிர்கள் பேருயிர்களாகப் பரிணமிக்கின்றன. இன்றைக்குத் தாவரமாக இருப்பது எதிர்காலத்தில் ஜங்கமமாக மாறியமையும். ஜங்கமத்தில் சிற்றுயிர்களாக இருப்பவை படிப்படியாகப் பேருயிர்களாக மாறியமைகின்றன. உடலமைப்பில் முற்றும் வளர்ச்சியடைந்த அமைப்பு மானுட அமைப்பு ஆகும். மனிதன் சிறந்தவனுகின்ருன். மனிதப் பிறவிபெற்ருன பிறகு மனிதப் பிறவிக்கு ஏற்ற கடமையைச் செய்யாது போவானுகில் அவன் வாழ்க்கையை வீணுக்கியவனுகின்ருன். "எண்ணரிய பிறவிகளுள் மானுடப்பிறவி தான் யாதினும் அரிதுகாண்" என்பது ஆன்ருேர் வாக்கு. பிறப்புக்கள் பல இருக்கின்றன. அவற்றை மாணிக்கவாசகர் "புல்லாகிப் பூடாகிப் புழுவாய் மரமாகி......... எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்" என்று சொல்லுகிருர். "அரிது அரிது மானுடராய்ப் பிறத்தலரிது" என்பது கோட்பாடு. எல்லாப் பிறப்புக்களிலும் மானுடப் பிறப்பு மேலானதாகின்றது. மானுடப் பிறப்பில் துன்பம் அதிகம். துன்பத்துக்கிடையில் அதில் மஹிமை ஒன்று இருக்கிறது. இன்பத்தையே அனுபவிக்கின்ற தேவர்களும் மானுடப் பிறப்பு எடுத்துத்தான் முக்தியடைகின்றனர். மானுடப் பிறப்பில்தான் வீடுபேறு அடைவது சாத்தியமாகின்றது.

(தொடரும்)

ஸ்ரீ லலிதா வியாக்கியானம்-164

928. स्तुमतिती ஸ்துதிமதீ-போற்றுதலுக் குரியவளாயிருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

பண்பாட்டிலோ, ஆற்றலிலோ, செயலிலோ மேலோங்கி இருக்கும் மூர்த்தியைப் பாராட்டுவது உலகின் இயல்பு. அங்ஙனம் பண்பாட்டிலும், ஆற்றலிலும், செயலிலும் உச்சநிலையில் இருப்பவள் அன்னை பராசக்தி. பிரபஞ்சத்திலுள்ள அனைத்தும் அன்னை பராசக்தியின் அம்சங்களாகவோ அல்லது கூறுகளாகவோ வந்துள்ளன. ஆதலால் இத் தெய்வீகப் பண்புகளில் அன்னைக்கு மிக்கார் யாருமில்லை என்பது தேற்றம். போற்றுவது, பாராட்டிப் பேசுவது, ரசிப்பது, பெருமையை உணர்ந்து திகைத்திருப்பது ஆகிய செயல்களனைத்தும் ஸ்துதியின் கூறுகளாம். அன்னை பராசக்தியை, "பூமியில் புகழத்தக்க பொருளே" என்று பக்தர் ஒருவர் பாராட்டியுள்ளார். பாராட்டுதலுக்குத் தகுதியற்ற மூர்த்தியைப் பாராட்டுவது பொருள் சேராத புகழாகும். பொருள் சேராத புகழைப் பொய்யென்று ஒதுக்குவது முறை. சத்தியத்தையே பேச ஆத்ம சாதகன் கடமைப்பட்டிருக்கின்றான். சத்தியத்தை எண்ணுவதன் வாயிலாகவும், இயம்புவதன் வாயிலாகவும் ஆத்ம சாதகனுக்கு அந்தக்கரண சுத்தி உண்டாகிறது. தூயதாகத் திருந்தியமைந்த மனமே ஞானக் கண்ணாக வடிவெடுக்கிறது. இதற்குச் சான்று ஒன்றை எடுத்துக்கொள்வது அவசியம். நன்றாக விளைந்துள்ள ஏதேனும் கல் ஒன்றை எடுத்து அதை மினுக்கிட்டால் முகத்தின் பிம்பத்தை அதில் காணலாம். மினுக்கெடுத்த நிலை அக்கல்லின் தூய நிலை ஆகிறது. அதே விதத்தில் வாய்மையின் வாயிலாக மனம் தெளிவடைகிறது. தெளிந்த மனதில் தத்துவம் உள்ளபடி விளங்குகிறது. இதுவே அம்பிகையைப் போற்றுவதன் உட்பொருளாம். அன்னை பராசக்தியைப் போற்றுதலின் வாயிலாகச் சாதகன் சத்திய விரதத்தில் நிலைபெற்றவனாகிறான். அதற்குமேல் உள்ளன்போடும், உள்ளக் கசிவோடும் ஆத்ம சாதகன் அம்பிகையைப் போற்றுவானாகில் பண்பாட்டில் அதிவிரைவில் அவன் முன்னேற்றமடைகிறான். இக பரத்துக்குரிய மேன்மைகளனைத்தும் அன்னை பராசக்தியிடம் மிளிர்ந்துகொண்டிருக்கின்றன. அம்மேன்மைகளை உள்ளபடி எடுத்து இயம்புகிறவன் அந்த மேன்மைகளைத் தானே அடையப்பெற்றவனாகிறான். எனவே, ஆத்ம சாதனங்களுள் அன்னை பராசக்தியின் மகிமைகளைப் பாராட்டிப்போற்றுவது தலைசிறந்த ஆத்ம சாதனமாகிறது.

929. श्रुतिसंस्तुता ச்ருதிஸம்ஸ்துதா—சுருதி என்னும் சொல் வேதத்தைக் குறிக்கிறது. வித்யா மயமாயிருப்பது வேதம். பிரபஞ்சத்தின் அமைப்பை உள்ளது உள்ளபடி அறிந்துகொள்ளுதல் அறிவு அல்லது வித்தையாகிறது.

> எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்பது அறிவு

என்பது மறைமொழி. அன்னை பராசக்தியே அகிலாண்டகோடி நாயகியாக இலங்கி வருகிறாள். ஒவ்வொரு பகுதியிலும் அவளுடைய மகிமைகளே மிளிர்ந்து கொண்டிருக்கின்றன. அம்மகிமைகளை உள்ளபடி ஓர்ந்து உணர்தல் அன்னை பராசக்தியின் அனுபூதியைப் பெறுவதற்கு நிகராகிறது. எறும்பு ஒன்று வெல்லத்தின் ஒரு சிறு துண்டைக் கவ்வுகிறது. அதை ரசிப்பதிலேயே தன் உயிரைக் கொடுக்கிற பாங்கில் அது மூழ்கியிருக்கிறது. இக்கோட்பாடு உயிர்களனைத்திற்கும் பொருந்தும். பஞ்சேந்திரியங்களுள் ஏதேனும் ஓர் இந்திரியத்தின் வாயிலாக ஜீவாத்மன் அன்னையின் மகிமைகளை உணர்ந்துகொள்கிறான். அவ்வுணர்ச்சி மேலோங்க ஓங்க இந்திரியத்தில் வசப்பட்டவனாக அன்னை பராசக்தியின் மகிமையிலேயே அவன் சொக்கியிருக்கிறான். அப்படி இருப்பது அன்னையைப் பற்றிய வைபவமாம். இங்ஙனம் ஐந்து இந்திரியங்களும் அன்னையின் மகிமைகளை ரசித்து அவைகளில் லயப்படுவதற்குப் பயன்படுகின்றன. இதற்குமேல் ஐந்து இந்திரியங்களுக்கப்பால் தூய அறிவைக் கொண்டு அன்னையின் மகிமைகளை அறிவது ஒப்புயர்வற்ற பேர் அனுபவமாம். அத்தகைய அனுபவமும் அன்னையின்

வைபவத்தில் அடங்கியிருக்கிறது.

நான்குவித மகிமைகளை உடைய அன்னை பராசக்தி, இந்த நாமத்தின் வாயிலாகப் போற்றப்படுகிருள். நான்கு வித மகிமைகள் கால, தேச, வர்த்தமானமாக அமைந்திருக்கின்றன. காலத்தைக் கணக்கில் எடுத்துக்கொண்டால் கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகமயமாகத் தன்னை விளக்கிக்கொண்டிருப்பவள் அன்னை பராசக்தி. தேசம் அல்லது இடமாக அவள் தன்னை விளக்குங்கால் கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு ஆகிய நான்கு திசைகளிலும் அவள் வியாபித்து இருக்கிருள் எனப் பொருள்படுகிறது. நிமித்தம் அல்லது செயல் மயமாக அன்னை பராசக்தி வடிவெடுத்திருக்கிருள் என்ருல் நான்கு வருணங்கள் ஆகிய பிராம்மண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரமயமாக, உயிர்வகைகளாக அவள் இலங்கிக் கொண்டிருக்கிருள் என்பது பொருள். வாழ்க்கையின் படித்தரங்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டால் பிரம்மச்சரிய ஆச்ரமம், கிருஹஸ்த ஆச்ரமம், வானப்ரஸ்த ஆச்ரமம், சந்நியாச ஆச்ரமமயமாக அன்னை இலங்குகின்ருள். வாழ்க்கைக்குரிய குறிக்கோளைக் கணக்கில் எடுத்துக் கொண்டால் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷமயமாக அன்னை மிளிர்ந்து கொண்டிருக்கிருள் என்பதாம்.

நான்கு விதமான மூர்த்திகளாகவும் அன்னை பராசக்தி அமைந்திருக்கிருள். இயற்கையிலே உள்ள இயக்கங்களுக்கிடையில் சாந்தம் பொலிந்து கொண்டிருக்கிறது. அதற்கு எடுத்துக்காட்டு ஒன்று அவசியமாகிறது. பிறந்தது முதற்கொண்டு சாகும் வரையில் சரீரத்தில் இருக்கின்ற ஹ்ருதயம் துடித்துக்கொண்டே இருக்கிறது. அல்லும் பகலும் அதற்கு ஓய்வு இல்லாதது போன்று தென்படுகிறது. ஆயினும் இரண்டு துடிப்புகளுக்கிடையில் சற்று அது சாந்தமாயிருக்கிறது. அதுவே அது பெறுகிற ஓய்வு நேரமாம். இதே பாங்கில் இயற்கை முழுவதும் அப்போதைக்கப்போது அமையும் சாந்தம் அன்னை பராசக்தியின் சொரூபமேயாம்.

வேதநாயகியாகிய அன்னை பராசக்தியே இயற்கை முழுதிலும் உள்ள பலப்பல வடிவங்களில் அமைந்திருக்கிருள். ஒவ்வொரு வடிவத்திலும் அமைந்திருக்கிருள். ஒவ்வொரு வடிவத்திலும் அதற்கேற்ற வித்தை அல்லது அறிவு ஒளிர்ந்துகொண்டிருக்கிறது. இக்காரணத்தை முன்னிட்டே இயற்கையும் வேதமும் ஒன்று என உணரப்படுகிறது. வித்யாமயமாயிருப்பவள் அன்னை பராசக்தியாம்.

யாண்டும் இயங்குவது இயற்கை. அப்படி இயங்கிக் கொண்டிருப்பதற்கிடையில் நிலைபேறும் அதனிடத்து அமைந்திருக்கிறது. நீர் ஆனது ஆவியாக உலாவிக்கொண்டிருப்பதற்கிடையில் நிலைபேறும் அதனிடத்துத் தென்படுகிறது. இங்ஙனம் ஜகத் முழுவதிலும் அமைந்துள்ள உறுதிப்பாடே அன்னை பராசக்தியின் மகிமையாம். அந்த உறுதிப்பாட்டில் பிரதிஷ்டை பெற்றவளாக அவள் காட்சி கொடுத்துக்கொண்டிருக்கிருள்.

இயங்கிக்கொண்டிருக்கிற இயற்கை தன் இயக்கத்தின் வாயிலாகப் புறப்பட்ட இடத்துக்கே திரும்பிப் போக முயன்றுகொண்டிருக்கிறது. கடலினின்று ஆவியாக மேலே கிளம்பிய நீர் ஆனது எங்கெங்கோ என்னென்னவோ வடிவெடுத்துத் தன் இயக்கத்தைப் பூர்த்தி பண்ணிக்கொண்டு நதியாகக் கடலுக்குத் திரும்பி வந்து சேருகிறது. அதே விதத்தில் சிவ சொரூபத்தில் அனன்யமயமாயிருக்கும் பராசக்தி தன்னுடைய ஜகத் லீலையையெல்லாம் பூர்த்திபண்ணிக்கொண்டு சிவத்தில் வந்து ஒடுங்குகிருள். அந்த ஒடுக்கம் நிவர்த்தி என்னும் பெயர் பெறுகிறது. ஆகவே இத்தனை விதமான மகிமைகளுடன் பரதேவதையாகிய அன்னை பராசக்தி வடிவெடுத்து உள்ளாள்.

930. **मनस्विनी** மனஸ்வினீ — மனதைத் தனக்கே உரியதாக வைத்திருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

சிற்றுயிர்கள் பேருயிர்களாகப் பரிணமித்து வருகின்றபொழுது ஒரு படித்தரத்தில் மனோதத்துவமும் அவ்வுயிர்களில் தோற்றத்துக்கு வருகிறது. இன்ப துன்பங்களை உணரும் வல்லமை மனதுக்கு உண்டு. உயிர்களனைத்தும் இன்பத்தை நாடவும் துன்பத்தைத் தவிர்க்கவும் யாண்டும் முயன்று வருகின்றன. இம்முயற்சியிலே உயிர்களனைத்தும் அவைகளுக்

குரிய சுவாதீனத்தை இழந்துவிட்டுப் பராதீனத்துக்கு ஆளாகின்றன. ஏதேனும் உயிர் ஒன்றுக்கு இன்பம் தருகிற பகுதி இயற்கையில் இருக்குமாகில் அப்பகுதிக்கு அவ்வுயிர் அடிமைப்படுகிறது. இச்செயல் நெருக்கடி ஒன்றில் வெறுப்பாக மாறியமைகிறது. துன்பம் தருபவைகளை வெறுக்கின்ற பாங்கில் உயிர் வகைகள் பராதீனமாகின்றன. இங்ஙனம் இன்ப துன்பங்களால் தூண்டப்பெற்று உயிர் வகைகள் பிரபஞ்ச வாழ்க்கையில் சர்வகாலமும் அல்லல்பட்டுக்கொண்டே இருக்கின்றன.

'யாதெனின் யாதெனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்'

என்பது மறைமொழி. விருப்பு வெறுப்பினின்று விலகியிருப்பவர்களே முக்த புருஷர்களாகிறார்கள்.

இனி, அன்னை பராசக்திக்கோ பிரபஞ்சத்தில் எதனிடத்தும் விருப்புமில்லை; வெறுப்புமில்லை. தன்னுடைய மனத்துக்குத் தானே இறைவியாக அன்னை பராசக்தி யாண்டும் இலங்கிக்கொண்டிருக்கிறாள்.

931. **मानवती** மானவதீ—பரந்த மனமுடையவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

மனதை உடையவன் மனிதன் என்னும் காரணப்பெயர் அவனுக்கு அமைந்திருக்கிறது. ஆயினும் பரிபாகத்தில் எத்தனை மனிதர்களோ அத்தனைவிதப் பாங்குகளை மக்களுக்கிடையில் காணலாம். மனதைப் பண்படுத்துவதற்கேற்பத் தரத்தில் மனிதன் மேலோங்குகிறான்.

வெள்ளத் தனைய மலர்நீட்டம்ம ாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு

என்பது வேதவாக்கு. மனிதன் எத்தகைய மனம் படைத்தவனாயிருக்கவேண்டும் என்பதற்கு அன்னை பராசக்தி முன் மாதிரியாகின்றாள்.

பெருந்தன்மை படைத்தவளாக அன்னை பராசக்தி இலங்குகின்றாள். மக்களுக்கிடையில் பிணக்கு வந்து விட்டால் அவர்களிடமிருந்து பெருந்தன்மை பறந்தோடிப்போய்விடுகிறது. அன்னை பராசக்தியின் பாங்கோ அத்தகையதன்று. எல்லாச் சந்தர்ப்பங்களிலும், எல்லாரிடத்தும் மேன்மை படைத்தவளாகவே அன்னை பராசக்தி யாண்டும் இலங்குகின்றாள்.

தன்னுடன் ஒத்திருப்பவர்களுக்கு ஆதரவு தருவதும், ஒவ்வாதவர்களுக்கு இடைஞ்சல் பண்ணுவதும் உலகத்தவர்போக்கு. அன்னை பராசக்தியோ நல்லார், பொல்லார் ஆகிய எல்லார்க்கும் ஒரே பாங்கில் ஆதரவு தருபவளாக அமைந்துள்ளாள்.

அப்படி ஆதரவு தருவதில் பக்தர்களிடத்தில் அலாதியான அன்புடையவளாக அவள் இலங்குகின்றாள். பக்திப்ரியா என்னும் நாமமும், பக்தி வச்யா என்னும் நாமமும் அவளுக்கு உரியனவாகின்றன. சூரியப்பிரகாசம் எங்கும் சமனாகப் படிகிறது. ஆயினும் பாதரசம் பூசிய கண்ணாடியின்மீது அது படிகிறபொழுது மற்றொரு சூரியனுக்கு நிகராக அந்த இடத்தில் அது மிளிர்கிறது. அதே விதத்தில் உயிர்களனைத்திற்கும் ஒரே பாங்கில் உதவி பண்ணுகின்ற அன்னை பராசக்தியின் துணை பக்தர்களிடத்து அலாதி சிறப்புடன் மிளிர்கிறது.

தண்டனை விதிப்பதில் எல்லாரிடத்தும் சம திருஷ்டியோடு நடந்துகொள்ளுதல் சான்றோர் போக்கு. சில வேளைகளில், அறிந்தோ அறியாமலோ பக்தர்களும் நெறிவழுவிப்போவது இயல்பு. பொதுவாக அன்னவர்கள், நன்னெறியினின்று பிசகுவதில்லை. நெறி நிற்கும் அன்னவர்கள் நெறிவழுவினால், அதை வழுவு ஆக அன்னை பராசக்தி கருத்தில் வாங்கிக்கொள்வதில்லை. அது பக்தர்கள் மீது வைத்துள்ள பேரன்பின் விளைவு.

சான்றோர் செல்லும் செந்நெறியைப் பின்பற்றுவது ஏனையவர்களுடைய கடமையாகும். சில வேளைகளில் எவ்வழியில் செல்லுவது என்னும் தயக்கம் அல்லது மயக்கம் சான்றோர்களுக்கே வருகிறது. அத்தருணத்தில் அன்னவர்கள் அன்னை பராசக்தியைச் சிந்தித்தல் வேண்டும். சிந்தனை பண்ணினால் இன்ன போக்கில் நடந்துகொள் என்னும் ஆணை உள்ளத்தினுள் உதிக்கிறது. அந்த ஆணை அன்னை பராசக்தியின் உத்தரவு ஆகும். அப்பிரமாணம் ஒருநாளும் பொய்போகாது. அதினின்று யாண்டும் நலனே வந்து அமையும். இது அன்னையின் மகிமையாம்.

இந்தியா உலகுக்களிக்கும் செய்தி

(சுவாமி விவேகானந்தர்)

(91ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்நிய ஆட்சி இந்தியாவின் பெரும்பாலான மக்களின் பண்பைக் கெடுத்து விடவில்லை. இந்திய வாழ்க்கை முறையை மேன் மக்களும் கீழ்மக்களும் பெரும்பாலோர் கடைப்பிடித்து வந்தார்கள். ஆனால் இந்திய வாழ்க்கை சில சமயங்களில் விழிப்புணர்ச்சி பெற்றும், இன்னும் சில சமயங்களில் அரைகுறையான விழிப்புணர்ச்சியுடனும் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. பாரதமாதாவின் பல நூற்றாண்டுகளின் வாழ்க்கைச் சங்கிலியைப் பார்க்கின்றேன். சில காலம் வாழ்க்கை மங்கலாக இருப்பதையும், இன்னும் சிலகாலம் பேரொளி படைத்ததாக இருப்பதையும் நான் காண்கின்றேன். பாரதமாதா பெருமிதத்தோடு சென்றுகொண்டிருக்கின்றாள். பாரமார்த்திகம் என்னும் உயர்ந்த லட்சியத்தை நிறைவேற்றப் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றாள். பாரதமாதாவின் ஆன்மீகவாழ்வை மண்ணுலகிலோ, விண்ணுலகிலோ எந்தச் சக்தியும் தடைபோட்டு நிறுத்திவிட முடியாது. விலங்கு நிலையிலுள்ள மக்களை மனித நிலைக்கும், மனித நிலையிலுள்ள மக்களைத் தெய்வ நிலைக்கும் உயர்த்துவதே இந்தியத் தாய் செய்யும் மறுமலர்ச்சியாகும்.

சகோதரர்களே, உபநிஷதக் காலம் தொட்டு நாம் உலகுக்கு உறுதிமொழி அளித்திருக்கின்றோம். "புத்திர சந்தானத்தினாலோ, செல்வத்தினாலோ அழியாப் பெருநிலையை அடைந்து விட முடியாது. தியாகத்தினாலேயே அழியாப் பெருநிலையை அடைய முடியும்." இப்பிரதிக்ஞையை ஏற்று நம் நாட்டவர்கள் ஆசையால் உண்டாகும் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு முயன்றிருக்கின்றார்கள். கொடுமையும், துன்பமும் அதிகரிக்க ஆரம்பித்தன. தியாகம் இருந்த இடத்தில் பொன்னாசையும், அதிகார ஆசையும் இடம்பெற்றன. பொன்னாசை, அதிகார ஆசை இவ்விரண்டுக்கும்கீழ் தியாகம் திண்டாடிக் கொண்டிருக்கிறது. அமைதி நிலவுமா? அல்லது சண்டை மூளுமா? என்னும் கேள்வி எழுகிறது. பொறுமை நிலைபெற்றிருக்குமா? அல்லது பொறுமையின்மை ஆட்சிபுரியுமா? நல்லது நிலைத்திருக்குமா? அல்லது கொடுமை தலைவிரித்தாடுமா? உடல் பலம் ஓங்குமா? அல்லது அறிவு நிலைபெறுமா? உலகாயதம் நிலைத்து நிற்குமா? அல்லது ஆத்மீகம் நிலைத்து நிற்குமா? இவைகளெல்லாம் கேள்விக்குரிய விஷயங்கள். இப்பிரச்னைகளுக்கெல்லாம் முன்பே நாம் முடிவு கண்டு விட்டோம். நல்லது தலைதூக்கினாலும் கேடு தலைதூக்கினாலும் கடைசிவரையிலும் நம்பிக்கையிலேயே உறுதியுடன் இருப்போம். 'உலக ஆசையை ஒழித்துத் தள்ளுதல், அதாவது துறவு எல்லாப் பிரச்னைகளுக்கும் முடிவு ஆகும்' என்ற கொள்கையில் உறுதியுடன் இருப்போம்.

இந்தியாவின் வாழ்க்கைப்பணி ஆன்மீகமாகும். இடையறாது இந்தியா செய்ய வேண்டியது ஆன்மீகப்பணியே யாகும். ஆன்மீகம் இந்தியாவுக்கு முதுகெலும்பு போன்று அமைந்திருக்கிறது. இந்தியா ஆன்மீகத்தின் அடிப்படையில்தான் அமைந்திருக்கிறது. மனித இனத்தை ஆன்மீகமயம் ஆக்குவது இந்தியாவின் பணியாகும். இந்தியாவை யார் ஆண்டாலும் இந்தியா ஆன்மீகத்திலிருந்து விலகாது. துருக்கியர் ஆண்டபொழுதிலும் சரி, முகலாயர் ஆண்டபொழுதிலும் சரி, ஆங்கிலேயர் ஆண்டபொழுதிலும் சரி, இந்தியா ஆன்மீகத்திலிருந்து சிறிதும் விலகியதில்லை.

ஆன்மீகத்துறையில் உலகத்தையே ஆட்டிப் படைக்கக்கூடிய ஞானிகளை இந்தியா எல்லாக் காலங்களிலும் தோற்றுவித்திருக்கிறது. எந்தக் காலத்திலாவது இந்தியா ஞானிகளைத் தோற்றுவிக்காது இருந்தது என்பதை யாரேனும் கூறமுடியுமா? இந்தியாவின் ஆன்மீகப் பணி அமைதியான முறையில் நிகழ்ந்து வருகிறது. போர் முரசைக் கொண்டோ, படை வலிமையைக் கொண்டோ இந்தியாவின் ஆன்மீகப்பணி நிகழ்வதன்று. பனித்துளி எவ்வித விளம்பரமும் இன்றிப் பயிர்களை எங்ஙனம் செழிப்பிக்கச் செய்கின்றதோ அவ்வாறு

இந்தியா ஆன்மீகப் பணியை விளம்பரமில்லாது செய்து வருகிறது. இந்தியா உலகத்தின் மீது செலுத்தும் ஆன்மீகச் செல்வாக்கினால் சீரிய பண்புகள் என்னும் மலர்கள் உலகத்தில் மலர்ந்திருக்கின்றன. ஆன்மீகத் துறையில் மற்ற நாடுகளின் மீது இந்தியா அமைதியான முறையில் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. மற்ற நாடுகளை அமைதியான முறையில் ஆன்மீகத்தின் மூலம் தம்பால் இழுத்து வருகிறது. இவ் ஆன்மீகம் அயல்நாடுகளில் வேரூன்ற நீண்டகாலம் காத்திருக்க வேண்டும். தக்க சூழ்நிலை ஏற்படும்பொழுது இந்தியாவின் ஆன்மீகம் அயல்நாடுகளில் வேரூன்றிவிடும். நம்நாட்டுக்குள் அது ஒருபொழுதும் அடங்கி இருந்துவிடாது. மற்ற நாடுகளுக்கு அது பரவியே தீரும். பாரசீகர்களும்,கிரேக்கர்களும், அரேபியர்களும் தங்கள் நாடுகளை விரிவடையச் செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன் இந்நாட்டின் மீது படையெடுத்து இந்நாட்டைத் தங்கள் நாடுகளோடு இணைத்தார்கள். அப்படி இணைத்த காலங்களிலெல்லாம் இங்கிருந்து அவர்களுடைய நாடுகளுக்கு ஆன்மீக வெள்ளப் பெருக்குப் பெருகி ஓடியது. ஆங்கிலேயப் படையெடுப்பாலும் அதே நிகழ்ச்சிதான் நிகழ்ந்திருக்கிறது. தரை மார்க்கமாகவும், கடல் மார்க்கமாகவும் ஆங்கிலேயர்கள் இந்தியாவுக்கு வந்து இந்தியாவை ஆக்ரமித்து, இந்தியர்களை மற்ற நாட்டார்களோடு தொடர்புகொள்ளும்படி செய்திருக்கிறார்கள். ஆன்மீக வெள்ளம் மற்ற நாடுகளுக்கு மீண்டும் பரவிப் போக ஆரம்பித்திருக்கிறது. நான் சொல்லுவதைக் கவனமாகக் கேளுங்கள். 'ஆன்மீகம் வெளிநாடுகளில் இப்பொழுதுதான் வேலைசெய்யத் துவங்கி இருக்கிறது. பெரிய அளவு அதனுடைய விளைவு இனி வரப்போகிறது.' இந்தியாவுக்கு வெளியே உள்ள நாடுகளில் ஆன்மீகம் எத்தகைய விளைவை உண்டுபண்ணப் போகிறதென்பதை நான் வரையறுத்துச் சொல்ல முடியாது. ஆனால் நான் ஒன்றைமட்டும் உங்களுக்கு உறுதியாகச் சொல்லமுடியும். நாகரிகம் படைத்த ஒவ்வொரு நாட்டிலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் உலகஆசையில் மூழ்கிக் கிடக்கின்றார்கள். பணத்தில் அவர்கள் மயங்கிக் கிடக்கிறார்கள். பணத்திலும், போகத்திலுமுள்ள மயக்கத்திலிருந்து விடுபடுவதற்குரிய போதனையை எதிர்பார்த்து அவர்கள் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை உங்களுக்குத் தெளிவாகச் சொல்லுகிறேன். தற்கால உலகம் பணத்தைத் துதி செய்து கொண்டிருக்கிறது. சமூக இயக்கங்களுக்குத் தலைவர்களாக உள்ளவர்கள் பலர் வேதாந்தம்தான் சமூகத்துக்கு நலன் செய்யும் என்பதை அறிந்துகொண்ட நிலையில் இருக்கிறார்கள். சமூக இயக்கங்கள் யாவும் ஆன்மீகமயமாக்கப்படும்பொழுதுதான் அவை உயர்ந்த நலனைத் தரும் என்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள். முடிவில் ஆன்மீகம்தான் உலகை உய்விக்கும் என்ற நிலைக்கு வரப் போகின்றார்கள். இந்தியாவில் நாம் செய்ய வேண்டிய பணி மிக முக்கியமானதாகும். அப்பணி எங்ஙனம் நிகழவேண்டும் என்பதை நாம் அறிந்து செயல்பட வேண்டும்.

நம்நாட்டில் ஏதாவது பணி நிகழவேண்டுமானால் இரண்டு விஷயங்களை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அப்பணி ஆன்மீக மயமாக்கப்பட வேண்டும். நம் நாடு பல்வேறு அம்சங்களைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது. அவற்றுடன் நாம் இரண்டறக் கலந்து விடவேண்டும். முதலில் எல்லாப் பாங்குடைய மக்களையும், இனங்களையும் ஒன்று சேர்க்க வேண்டும். மக்களை ஒன்றுபடுத்துவது ஒவ்வொரு நாட்டினர் வாழ்விலும்ஒரு பணியாக இருந்து வருகிறது. எனவே இவ்விரண்டையும் நாம் நிறைவேற்ற வேண்டும். நம் நாட்டு மக்களெல்லாம் ஒன்றுபட்டு ஆன்மீகத்துறையிலே முன்னேறி ஆன்மீகத்தை உலகுக்கு வழங்குவதே இந்தியா உலகுக்குத் தரும் செய்தியாகும்.

நான் வகுத்துள்ள திட்டங்களைப்பற்றிய குறிப்புக்களைக் கீழே தருகின்றேன்.

1. மேல்நாட்டு மக்களுக்கு வீரம் செறிந்த செய்தியைத் தந்துள்ளேன். அவர்களுக்குத் தந்துள்ளதைக் காட்டிலும் இன்னும் வீரம் செறிந்த செய்தியை என் தாய்நாட்டு மக்களுக்குத் தருகின்றேன்.

2. நான்கு ஆண்டுகள் மேல்நாட்டில் தங்கி இருந்தேன். அப்படி நான் அங்குத் தங்கி

இருந்தது தாய்நாட்டைப் பற்றிச் சிறந்த முறையில் அறிந்துகொள்ள உதவியது. லோகாயதம் மிகுந்த மேல்நாட்டு வாழ்வு இந்தியாவின் புனிதத் தன்மையை நன்கு உணரச் செய்தது.

3. இந்தியா கீழ்மையை அடைந்துவிட்டது என்பது உண்மையன்று. ஆராய்ச்சி செய்கின்றவர்களுக்கு அது விளங்கும்.

4. பல இனத்தவர்களை ஐக்கியப்படுத்துவதுதான் எல்லா நாட்டிலுமுள்ள பிரச்னையாகும். பிரிவினைகள் மற்ற நாடுகளைக் காட்டிலும் இந்தியாவில் மிக விரிந்த பாங்கில் இருக்கின்றன.

5. ஒத்த மொழியும், ஒத்த அரசியலும் மக்களைப் பிணைக்கின்றன. ஆனால் அவற்றிற்கும் மேலாக ஒத்த சமயங்களே மக்களைப் பிணைப்பதில் ஆற்றல் உடையவைகளாகின்றன.

6. ஒரு நாட்டின் பண்பாட்டை மற்ற நாட்டவர்கள் மீது வலிய வன்முறையைக் கையாண்டு புகுத்துகின்ற செயல் மற்ற நாடுகளில் நிகழ்ந்து வருகிறது. அதன் விளைவாகச் சிறிது காலத்திற்குச் சுறுசுறுப்பான வாழ்வை நாட்டில் காண்கின்றோம். பிறகு அது அழிந்து போகிறது.

7. இந்தியாவில் சமுதாயப் பிரச்னையைத் தீர்க்கும் முறை அமைதியான முறையில் தொன்று தொட்டு நிகழ்ந்து வருகிறது. சமயத்துறையில் இந்தியர்களுக்குப் பொறுமை மிக அதிகம். முரண்பாடுள்ள சமயங்களையும் ஏற்றுக் கொள்கின்ற பொறுமையை இந்தியாவில் காணலாம்.

8. கிரேக்கர், ரோமானியர், நார்மன் ஆகிய நாட்டின் நாகரிகங்கள் பார்ப்பதற்கு அசைக்க முடியாததாகத் தோன்றினும் காலப்போக்கில் அழிந்து போனதைக் காண்கின்றோம்.

9. ஒரு பொது மொழி அவசியம். ஆனால் அதிலும் ஒரு குறை உண்டு. வளமுடைய மற்ற மொழிகளை நலிந்து போகச் செய்யும் குறை அதில் இருக்கிறது.

10. ஒரு மொழியிலிருந்து மற்ற மொழிகளெல்லாம் தோன்றின என்று போற்றக்கூடிய பொதுமொழி ஒன்றைத் தேர்ந்தெடுத்துக்கொள்வதே மொழிப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு உபாயமாகும். அத்தகைய மொழி ஸம்ஸ்கிருதம் என்பதைக் கண்டுள்ளார்கள்.

11. திராவிட மொழிகள் ஸம்ஸ்கிருதத்திலிருந்து பிறந்தவை என்றோ, இல்லை என்றோ சொல்லமுடியாது. நடைமுறையில் ஸம்ஸ்கிருதச் சொற்கள் திராவிட மொழிகளில் புகுந்து இருக்கின்றன. அதற்கிடையில் அம் மொழிகள் தமக்குரிய தனிச் சிறப்புக்களை இழந்துவிடாமல் திகழ்ந்து வருகின்றன.

12. ஆரியர்கள் என்பவர்கள் பண்பட்டவர்களாவார்கள்.

13. மனித இனங்கள் யாவும் கலப்புடையவைகளேயாகும்.

14. மொழிகளுக்கிடையில் ஸம்ஸ்கிருதம் பிரச்னையைத் தீர்ப்பதுபோன்று மனித இனங்களுக்கிடையில் ஏற்படும் முன்னேற்றம், பண்பாடு, சமுதாயம், அரசியல் ஆகியவைகளிலுள்ள பிரச்னைகளைத் தீர்ப்பவர்கள் ஆரியர்களாவார்கள்.

15. மனிதனுடைய உயர்ந்த லட்சியம் பிராம்மணனுவதாகும்.

16. பொருள் மிகப்படையாமை, சுயநலமின்மை, அடிமை இன்மை, அறநெறியைத் தவிர வேறு எதற்கும் அடிபணியாமை ஆகியவை இந்தியாவின் லட்சியமாகும்.

17. முன் காலத்திலும் இப்பொழுதும் பிறப்பை முன்னிட்டுத் தங்களைப் பிராம்மணர்கள் என்று சொல்லி உரிமை கொண்டாடுகிறவர்கள் இருக்கிறார்கள்.

18. அரும்செயல் செய்யும் சான்றோர் தம் செயலில் உரிமை பாராட்டுவதில்லை. அற்ப புத்தி படைத்த சோம்பேறிகள் கடைமையைச் செய்யாது உரிமையை மட்டும் கொண்டாடுவார்கள்.

19. பிராம்மணர்களையும், க்ஷத்திரியர்களையும் கலியுகத்தில் காணமுடியாது. உண்மையான அந்தணர்கள் சிலர் கலியுகத்தில் இந்தியாவில் மட்டும் இருப்பார்கள்.

20. க்ஷத்திரியப் பண்பிலிருந்துதான் பிராம்மணப்பண்புக்குப் போகவேண்டும்.

21. தங்கள் தெய்வமே மேலானது என்றும், அத்தெய்வத்தையே மற்றவர்கள் வணங்க வேண்டும் என்றும் மதமாற்றம் செய்பவர்கள் கருதுகிறார்கள்.

22. சர்வாதிகார மன்னர் ஆட்சி போன்று ஒரே தெய்வக் கொள்கை மிக விரைவில் மக்களிடையே செயலை நிறைவேற்றும் சக்திகளை எல்லாம் ஓரிடத்தில் குவிக்கும். அதற்கு மேல் அதனிடத்தில் வளர்ச்சியைக் காண முடியாது. எதிர்காலத்தில் அது கொடுமையில் கொண்டு சேர்க்கும். ஒரு தெய்வ ஆட்சியின் கீழ் வருகின்ற நாடுகள் சில காலம் பிரகாசமாகத் திகழ்ந்து இறுதியில் அழிந்து போகும்.

23. இந்தியாவில் ஒரு தெய்வக் கொள்கையைப் பற்றிப் பிரச்னை எழுந்தது. தெய்வம் ஒன்று அதை அறிஞர்கள் பல பெயரிட்டு அழைக்கின்றனர் என்ற உண்மையைக் கண்டு அப்பிரச்னையைத் தீர்த்தனர்.

24. எல்லா மதங்களிடையேயும் சமரசம் காணும் பொறுமை வேதாந்திக்கு உண்டு.

25. எந்த மதக்கொள்கைகளையும் அழித்து விடாது சமரசக் கொள்கையைக் காண்பதே நம்முடைய மதமாகும்.

26. இந்து மதத்தைத் தவிர வேறு எந்த மதமும் சமரசத்தைக் காண்பதற்குப் பயன்படாது.

27. அத்வைதம் உண்மைக்குத்தான் விளக்கம் தருகின்றது. மனிதனுக்கு அது முக்யத்வம் தருவதில்லை.

28. பண்டைக்காலத்தில் இவ்வுண்மையை ஆன்மீக ஒளி படைத்த மக்கள் உணர்ந்திருந்தார்கள். இவ்வுண்மையை உணரும் மக்கள் குறையக் குறையச் சீர்கெட்ட நிலை உருவாகிவிட்டது.

29. எதிர்காலத்தில் ஒரு மனித இனம் மற்ற இனங்களின் மீது ஆட்சி புரியவும் எல்லாச் சக்திகளையும் ஒருகைக்குள்கொண்டு வரவும் முயலும். எதிர்காலத்தில் இந்தியா புதுமைக்குப் புதுமையாகவும், பழமைக்குப் பழமையாகவும் பொலிவுற்றுத் திகழும்.

30. உண்மைக்கு ஒத்து நாம் பாடுபட வேண்டும். சமுதாயப் பழக்க வழக்கங்களெல்லாம் ஸ்மிருதிகளைச் சேர்ந்தவையாகும். ஆனல், தத்துவம் சுருதியைச் சேர்ந்ததாகும். ஸ்மிருதி காலத்திற்கேற்றவாறு மாறியமையும். சுருதி யாண்டும் மாறாதது.

31. வேதாந்த தத்துவத்தை இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் எங்கும் பிரச்சாரம் செய்யவேண்டும். வேதாந்த தத்துவத்தை வெறும் எழுத்துக்களால் மட்டும் பரப்புவதோடு நம்முடைய வாழ்க்கை மூலமாகவும் மக்களுடைய உள்ளத்தில் வேதாந்த தத்துவம் நன்கு வேரூன்றச் செய்யவேண்டும்.

32. கலியுகத்திற்குக் கர்மமே சிறந்த அறமாகும். கர்மத்தினல் சித்தசுத்தி செய்து கொள்ளாதவர்கள் ஆன்ம ஞானத்தைப்பெற முடியாது.

33. மக்களுக்கு ஆன்ம ஞானத்தையும், உலக ஞானத்தையும் வழங்கவேண்டும்.

34. தியாகம் நம் நாட்டின் இலட்சியமாகும்.

35. தியாகிகளைப் போற்றுவது இந்தியாவின் பண்பாகும். (முற்றும்)

பாமரமக்கள் பல ஆயிரக்கணக்கான வருஷங்களாக நசுக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் தாங்கள் நசுக்கப்பட்டதை எவ்வித முணுமுணுப்பும் இன்றித் தாங்கி வந்திருக்கிறார்கள். அதன் விளைவாகத் துன்பத்தைத் தாங்கும் உறுதிப்பாடு அவர்களிடம் ஏற்பட்டு இருக்கிறது. வயிற்றுக்கு உணவிருந்தால் அவர்களுக்குப் போதும். அவர்கள் தங்கள் சக்தியைக்கொண்டு உலகையே ஆட்டி விடுவார்கள். ஒழுக்கம், தூய்மை மூலமாக வரும், வலிவு அவர்களிடத்தில் உண்டு. அமைதியையும், திருப்தியையும், அன்பையும், இடைவிடா உழைப்பையும், தேவையானபொழுது சிங்கத்தை ஒத்த பலத்தையும் அவர்களிடம் காணுது வேறு எங்குக் காணமுடியும்?

புகழ் கிடைக்கிறதெனின் வீரமிகுந்த செயல்களைப் பலர் செய்வார்கள். பிறர் போற்றும்பொழுது கோழைகளும், சுயநலக்காரர்களும்கூடப் பெரிய செயல்களைச் செய்து விடுவார்கள். தங்களை விளம்பரப்படுத்திக் கொள்ளாது சிறு செயல்களையும் பக்தி சிரத்தையோடு சுயநலமில்லாது செய்கின்ற பாமரமக்களுக்கு என் வணக்கம் உரியதாகட்டும்.

—சுவாமி விவேகானந்தர்

வல்லமை தாராயோ?

(சுவாமி துருவானந்தர்)

இந்த ஆண்டில் பாரதியின் நூற்றாண்டு விழாக் கொண்டாடப்படுகிறது. அடிமை நாட்டில் வீரமுரசு கொட்டி, வீரக்கவிதை பாடி, மக்களை விறுகொள்ளச் செய்தவன் பாவேந்தன் பாரதி. அவனுடைய பாடல்களிலே சில நம் சிறுமைகளைக் கண்டு சீறிப் பொங்கியவைகளும் உண்டு; வந்தவர்களுக்கெல்லாம் வழி விட்டுத் தான்வாழக்கூட இடமில்லாத இந்தியனின் இழிநிலையை எண்ணி நொந்த பாடல்களும் உண்டு. யார் யாரோ எதை எதையோ இறைவனிடம் கேட்கிறபொழுது பாரதி "வல்லமை தாராயோ?" என்று தான் வணங்கும் பராசக்தியைக் கேட்கிறான். யாருக்காக அவன் கேட்கிறான்? தனக்காகவா அவன் அதைக் கேட்கிறான்? இல்லை; ''இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே" என்கிறான். கோயிலுக்குச் செல்கின்றவர்களில் பலர் தங்களுடைய சுயநலத் தேவையைப் பூர்த்திபண்ண வேண்டுமென்று இறைவனிடம் வேண்டுகோள் கோருகின்றனர். தங்களையும், தங்களோடு வாழும் சில உயிரினங்களையும் தவிர வேறு எதுவுமே தெரியாத, சொன்னாலும் எண்ணிப் பார்க்க இயலாத இதயம் படைத்தவர்கள் அவர்கள். வலிவு இல்லாமையினால், தங்களின் ஆற்றலை மறந்தமையினால், அவர்களுக்கு வல்லமை தரவேண்டுமென்றும், ஆற்றலை அளிக்கவேண்டுமென்றும்'வல்லமை தாராயோ இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே' என்கிறான் பாரதி.

இந்தியர்களுக்கு வல்லமை இல்லையா? ஆற்றல் இல்லையா? என்கிற கேள்விகள் பிறக்கக்கூடும். ஆம்! கண்ணிருந்தும் குருடராய், காதிருந்தும் செவிடராய், உயிரிருந்தும் ஜடங்களாய் ஒரு காலத்தில், ஒரு சூழ்நிலையில் நாம் வைக்கப்பட்டோம். அந்தச் சூழ்நிலையில்தான் வெளி நாட்டிலிருந்து நம் நாட்டுக்குள்ளே புகுந்தது முஸ்லீம் படையெடுப்பு. நம்மிடையே அன்று ஒற்றுமை இருந்திருந்தால், நாம் அனைவரும் ஆற்றல் பெற்ற வீரர்களாக அன்றே எதிர்த்திருந்தால், இந்தியாவிலிருந்து ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகியவைகள் தனி முஸ்லீம் நாடுகளாகப் பிரிந்திருக்க முடியுமா? அதோடு அன்று முதல் இன்று வரை நடக்கின்ற மதக்கலவரங்களும், கட்டாய மத மாற்றங்களும் நிகழ்ந்திருக்க முடியுமா? அன்றைய முஸ்லீம் அரசர்கள், இந்துக் கோயில்களை யெல்லாம் இடித்து அவற்றில் இருந்த செல்வங்களையெல்லாம் கொள்ளையடித்து அவற்றைக் கொண்டு மசூதி கட்டினர்கள். உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹால் எனப்படும் அழகிய கல்லறையைக் கட்டுவதற்குரிய செல்வத்தை எங்கிருந்து கொண்டு வந்தார்கள்? நமது கோயில்களில் கொள்ளையடித்த செல்வங்களல்லவா இன்று தாஜ்மகாலாக, மசூதிகளாக இலங்குகின்றன. ஆனால் நமது புனிதம் நிறைந்த இந்துக்கோயில்களோ இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன. முஸ்லீம்கள் செய்த அட்டகாசம் போதாதென்று அவர்களுக்குப் பின் வந்த கிறிஸ்தவர்கள் மக்கள் சேவை என்ற பெயரில் மத மாற்றத்தையும், கல்விப்பணி என்ற பெயரில் கலவரத்தையும்தான் இதுகாறும் செய்துவந்துள்ளனர். தடுக்கி விழுகிற இடமெல்லாம் சர்ச்சுகள், திடீர் திடீர் என்று காளான்கள் போன்று முளைத்தவண்ணமிருக்கின்றன. இவர்கள் தெருத்தெருவாகப் போடுகிற மதப் பிரச்சாரக் கூச்சலைக் கேட்டு சகிக்கமுடியவில்லை. இந்து தெய்வங்களைத் தாழ்த்திப் பேசினாலும் அப்பாவி ஹிந்துக்கள்கேட்டுக்கொண்டுதானே இருந்து வந்தனர். பொறுமைக்கும் ஓர் எல்லை இல்லையா? 'குனியக் குனியக் குட்டுபவன் முட்டாள்'என்பார்கள். இது நாள்வரை இவர்கள் செய்த அநியாயங்களைப் பொறுத்திருந்து சகித்துவந்த இந்துக்களுக்கு, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மண்டைக்காட்டில் நடைபெற்ற சம்பவங்கள் விழிப்புணர்ச்சியை ஊட்டிவிட்டன. இந்துக்கள் எப்பொழுதுமே பொறுமையில் நிலைநிற்பவர்கள். இந்திய நாடு திறந்த வீடு போன்றது. எத்தனையோ படையெடுப்புக்கள்; வெள்ளையர், போர்ச்சுகீசியர், டச்சுக்காரர், பிரெஞ்சுக்காரர் என்று எத்தனை இனம் உலகத்தில் தோன்றியதோ

அத்தனை இனமும் இந்தியாவைச் சுரண்டாமல் போனது கிடையாது. இப்போதும் பங்களாதேசிலிருந்து வந்த அகதிகள், இலங்கையிலிருந்து வந்தவர்கள், பர்மா மலேயா போன்ற நாடுகளிலிருந்து வந்தவர்கள் ஆகிய அனைவருக்கும் இடம்கொடுத்து வாழவைத்துக் கொண்டுதானுள்ளது நமது பாரத தேசம். மதச் சார்பின்மை என்கின்ற கொள்கையை இந்தியாவில்தான் பார்க்கமுடியும். பெரும்பான்மை முஸ்லீம்கள் உள்ள அரபு நாடுகள், பாகிஸ்தான் முதலிய நாடுகள் முஸ்லீம் நாடுகள் என அறிவிக்கப்பட்ட பிறகு இந்தியாவை “ஹிந்து ராஷ்டிரம்” என்று ஏன் அறிவிக்கக்கூடாது? விட்டுக் கொடுக்கும் தன்மை, சகிப்பு மனப்பான்மை முதலியன நம்மிடம் இருப்பதால் நம்மை மற்றவர்கள் பலஹீனமாகக் கருதிவருகிறார்கள். நாட்டில் எங்கும் ஜனப்பெருக்கம் அதிகமாகிக்கொண்டே இருக்கிறது. இதைக் கட்டுப்படுத்த என்ன செய்வதென்றே தெரியாது திகைக்கிற அரசாங்கம் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைப் பரப்ப ஏராளமான பணம் ஒதுக்கியுள்ளது. அதன் விளைவு என்ன? அப்பாவி இந்துக்கள்தாம் இதில் அகப்பட்டார்கள். குடும்பக் கட்டுப்பாட்டிற்கு ஆதரவுதர மறுக்கின்ற முஸ்லீம்கள், கிறிஸ்தவர்களைத் தட்டிக் கேட்க அரசாங்கத்திற்குத் தைரியம் உண்டா? அல்லது ஹிந்துக்களாவது அரசாங்கத்தை எதிர்த்துக் கேள்வி கேட்பதுண்டா?

சபரிமலையில் ஐயப்பன் கோயிலுக்குப் போகிற ஐயப்பன்மார்கள் வாபர் சமாதி என்கிற முஸ்லீம் மசூதியில் உள்ள உண்டியலில் காசு போடுகிறார்களே ஏன்? சமரசம் பேசுகின்ற அப்பாவி ஹிந்து நாகூருக்கு வேண்டுதல் செலுத்துவான், வேளாங்கன்னியையும் தெய்வமாக எண்ணிக்காணிக்கை செலுத்துவான். ஆனால் இந்தப் பணத்தை வைத்துத் தானே கிறிஸ்தவர்கள், முஸ்லீம்கள் மதமாற்றத்தில் இறங்குகின்றனர் என்பதை அப்பாவி ஹிந்து மறந்துவிடுவான். இன்னும் பாமரர் முதல் படித்தவர் வரை தங்கள் குழந்தைகளைக் கிறிஸ்தவ, முஸ்லீம் கல்வி ஸ்தாபனங்களில் பணம்கொடுத்துச் சேர்க்கிறார்கள். அதன் விளைவாக நம் குழந்தைகள் ஹிந்து கலாசாரத்தை மறந்து, அவர்களின் வலையில் விழுந்து நம் மதத்தை இழித்துப் பேசுவதை நீங்கள் கேட்பதில்லையா? இன்றும் அறியாமையில் மூழ்கியுள்ள இந்துக்கள் எத்தனையோ பேர் தங்கள் குழந்தைகளுக்கு நோயைக் குணமாக்கப் பள்ளிவாசலுக்குப்போய்க்காத்திருக்கும்கீழ்மையைக் கண்டுதானே வருகிறோம். இந்தக் குறைபாடுகளுக்குக் காரணம் என்ன? நம்மிடம் ஒற்றுமையில்லை. கிறிஸ்தவர்கள், முஸ்லீம்கள் இருசமயத்தாரும் எல்லா அரசியல் கட்சிகளிலும் இருப்பார்கள். வேறு வேறு கட்சிகளில் இருந்தாலும் சமயம் என்றால் தங்கள் சமயக்கொள்கையிலிருந்து இம்மியளவும் பிசகமாட்டார்கள். கிறிஸ்தவ, முஸ்லீம்களில் நாஸ்திகர்களைக் காணமுடியாது. ஆனால் இந்து மதத்தில் இருப்பவன் அரசியல் கட்சிகளுக்குக் கொடுக்கிற மதிப்பைச் சமயத்திற்குத் தரமாட்டான். நாஸ்திகவாதியை இந்து மதத்தில்தான் காணமுடியும். கடவுள் சிலையை உடைப்பவனையும், கடவுள்கொள்கையை மறுப்பவனையும் இந்து மதத்தில்தான் காணமுடியும். அப்படிப்பட்ட நாஸ்திகவாதிக்கே எங்கும் வழிபாடும் மரியாதையும் நடக்கும். ஹிந்துக்கள் அப்பாவியாக இருந்தால் இது மட்டுமா நடக்கும்? போகட்டும், நடக்கிற நிகழ்ச்சியைச்சிந்தித்துப் பார்த்து இனியாவது கோழைத் தனத்திற்கும், அசட்டுத் தனத்திற்கும் இடம் தராது உண்மையான ஹிந்து உணர்வோடு வாழவேண்டும் என எல்லா ஹிந்துக்களும் உறுதியாகத் தீர்மானிக்கவேண்டும். “வல்லமை தாராயோ இந்த வல் அசுரர் கூட்டத்தால் நமது ஹிந்து மதம் நலியவோ, ஹிந்துக்களின் தொகை குறையவோ இடம் தராது நம் நாட்டில் இருப்பவர் அனைவரும் ஹிந்துக்களே என்னும் உணர்வைத் தாராயோ?” என ஹிந்துக்களாகிய நாம் உளமாரப் பிரார்த்திப்போமாக.

நம்மிடையே உள்ள பல குற்றங்களுக்கும், குறைகளுக்கும் மூல காரணம் பயம். அச்சம் என்ற ஒன்று இருப்பதால்தான் நம்மையறியாது பல தவறுதல்களைச் செய்து விடுகிறோம். நடந்த நிகழ்ச்சி ஒன்றை எடுத்துக்கொள்வோம். புகைவண்டியில் ஒரு பெட்டியில் ஆஸ்திகர்கள் பத்துப் பதினைந்துபேர் பிரயாணம் செய்துகொண்டுபோனார்கள். கூட்டம்

அதிகமாயுள்ள பெட்டியினுள்ளே நுழையப் பார்த்தான் ஒரு முஸ்லீம் சிறுவன். சிறுவன் பெட்டியருகே சென்றான். தன் மூக்குச் சளியைச் சிந்தி தன் இரு கைகளிலே தட விக்கொண்டு இருகைகளையும் பெட்டிக்குள் உட்கார்ந்திருந்த இந்துக்களிடம் காட்டினான். தொடப்போவதாகப் பயமுறுத்தினான். அந்த அருவருப்பான காட்சியைப் பார்த்ததும் பெட்டியில் இருந்தவர்கள் கதவைத் திறந்து கொண்டு திசைக்கொருவராக ஓடினர். இந் நிகழ்ச்சி இந்துக்களின் அறியாத் தன் மையை விளக்குகிறது. அச்ச உணர்வு சிற்று யிர்களிடத்திலே இருந்தால், சிறுவர்களிடத் திலே இருந்தால், அவற்றை இயற்கை என்று சமாதானம்கூறுவோம். சமீபகாலத்தில் ஸ்ரீரங் கத்தில் யானை ஒன்று ஒரு கடையின் முன்னே நின்றுகொண்டிருந்தது. ஒரு காக்கை வந்து அப்பொழுது அந்த யானையின்மீது அமர்ந்தது. உடனே பீதியடைந்த யானை பயங்கரமாகப் பிளிறிக்கொண்டு ஓட்டம் பிடித்தது. அற்பக் காக்கையைக்கண்டு அசுரபலம் கொண்ட யானை பயப்படுகிறதென்றால் அது அறிவற் றது, விவேகமற்றது, அதற்குச் சிந்தனை சக்தி கிடையாது எனலாம். ஆனால் மனிதனோ ஆறறிவு படைத்தவன். நல்லவனாகவும் இருக்க வேண்டும்; அதோடு வல்லவனாகவும் இருக்க வேண்டும். நம் புராணங்களில் தேவர்கள் நல்லவர்கள் என்றே சித்தரிக்கப்படுகிறார்கள். ஆனால் அவர்கள் அப்பாவிகள். அசுரர்கள் போக்கிரித்தனத்திற்கும் துஷ்டத்தனத்திற்கும் பெயர் போனவர்கள். அசுரர்களிடம் ஓயாது அடிவாங்கி, தாங்கமாட்டாது தேவர்கள் பிரம் மாவிடம் புகார்கொடுப்பது அவர்களுடைய சுபாவம். இதனால்தானோ என்னவோ நம் ஹிந்துக்களில் பலர் தேவர்கள் போன்று அசுரர்களாகிய புறமதஸ்தர்களால் இன்றும் தாக்கப்படுகிறார்கள். திருப்பித்தாக்கும் ஆற் றல் அற்றவர்கள் ஹிந்துக்கள் என்பது உண்மை அன்று. உண்மையான ஹிந்து வுக்குச் சிறந்த முன் மாதிரியாக இலங்குபவர் கள் சத்ரபதி சிவாஜி மன்னனும் சுவாமி விவே கானந்தரும் ஆவார்கள். அஞ்சி அஞ்சிச்சாகும் இயல்பு நம் ஹிந்துக்களிடமிருந்து எப்பொழுது அழியுமோ அன்றுதான் உண்மையான இந்து வின் தன்மை நம்மிடம் வந்ததாகக் கொள்ள லாம். அப்போது தான் "உச்சிமீது வானி டிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை, அச்சமில்லை" என்று சொல்லக்கூடிய தன்மை நமக்கு உண்டு.

நம்முடைய மதம் சனாதன தர்மம். ஹிந்து கலாசாரத்தை எந்தச் சக்தியாலும் அழிக்க முடியாது. இதுவரை எத்தனையோ முஸ்லீம் படையெடுப்புக்கள், முற்றுகைகள், வெள்ளை யர் ஆதிக்கம், நாஸ்திகமே உருவெடுத்த சார்வா கம் ஆகிய இவைகளெல்லாம் முயன்றும் ஹிந்து மதத்தை அழிக்க முடியவில்லை. இனிமேலா நடக்கப்போகிறது என்று கற்பனைக்கோட்டை கட்டிக்கொண்டு கண்மூடிக் கனவு கண்டு கொண்டு இருக்க வேண்டாம். பெரும்பான்மை யாக இருந்த ஹிந்துக்கள் சிறுபான்மை யாகச் சில மாகாணங்களில் ஆக்கப்பட்டுவிட் டார்கள். சுதந்திரமாகத் தங்கள் தர்மப்படி, வழிபடவோ, கோயிலுக்குச் செல்லவோ, பண்டிகை நடத்தவோ முடியாமல் இருக்கிறது. பெரும்பான்மை கிறிஸ்தவர்கள் உள்ள பள்ளி களில் ஹிந்து கடவுளைப்பற்றியபாடல்கள், நீதி போதனை ஆகியவை கூடாது என ஆணை யிடுகின்றனர். கிறிஸ்தவப் பள்ளிக்கு வருகிற அனைத்துக் குழந்தைகளும் சிலுவையணிந்து வரவேண்டும் என்றும், நெற்றியில் திலகமிடு வதோ, விபூதிபூசி, பூச்சூடி வரவோ கூடாது என்றும் ஆங்கு சிறுவர் சிறுமிகளுக்கு எச் சரிக்கப்படுகிறது. சிறுவர் சிறுமிகள் உள்ளத் தில் இந்துதெய்வத்தை இழிவுபடுத்தக்கூடிய கற்பனைக் கதைகள் சொலலிப் பச்சிளம் குழந்தைகள் மனம் இந்து மதத்தை வெறுக்க வும், இந்து தெய்வ விக்ரகங்களைப் பழிக்கவும் செய்துவிடுகின்றனர். இப்படிப்பட்ட துஷ் பிரசாரத்தின் மூலம் மனம் மாறித் தாய்மதம் விட்டு வேற்று மதத்திற்குப் போனவர்கள் எத்தனையோபேர்!

ஏழ்மை, அறியாமை, முதலியவற்றைப் பயன்படுத்தி அப்பாவி ஹிந்துக்களைக் கிறிஸ்த வர்களாக்கி வருகின்றனர். இவர்களுக்கு உதவுவதற்கு மேலை நாட்டு மிஷனரிகள் பணம் வழங்கிக் கொண்டிருக்கின்றன. மருத்துவ சேவை, கல்வி புகட்டுதல், முதலிய போர்வை யால் மதமாற்றம் நிகழ்ந்து வருகின்றது.

இந்தியாவைக் கிறிஸ்தவ நாடாக்க வேண்டும் என்பதே அவர்களுடைய நோக்கம். மத மாற்றத்தால் விளையும் நாசம் சொல்லத் தருமோ? அரசுக்கு இவையெல்லாம் தெரியுமா? தெரியாதா என்றால் எல்லாம் தெரியும். இருந்தும் கிறிஸ்தவர்கள், முஸ்லீம்களின் ஓட்டுக்களைப் பெறுவதற்காக அரசியல்வாதிகள் இவைகளிலெல்லாம் கருத்தைச் செலுத்துவதில்லை. ஏமாளி ஹிந்துக்கள் எப்படியும் தங்களுக்கு ஓட்டுப் போட்டுவிடுவார்கள் என்கிற தைரியத்தில் அவர்கள் ஹிந்துக்களுக்கே எல்லாவிதச் சட்டதிட்டங்களையும் கடைப்பிடிக்க ஆணையிடுகிறார்கள். வெளிநாட்டுப் பணம் எவ்வளவு வந்தாலும் சரி, எந்த ரூபத்தில் வந்தாலும் சரி, யாருக்கு வந்தாலும்சரி, அவற்றையெல்லாம் அவர்கள் கண்டுகொள்ள மாட்டார்கள். அவர்களுக்குப் பணமும், பதவியும்தான் முக்கியம். அப்படிப் பட்டவர்களை அகற்றித் தூய்மையும் ஒழுக்கமும், இந்து தர்மத்திற்காக, இந்துக்களுக்காகப் பாடுபடும் அறிவாளிகளைத் தலைவனைத் தேர்ந்தெடுக்கும் ஆற்றல் வல்லமை மக்களினத்திற்கு வரவேண்டும். சிறுகச் சிறுகக் குறைந்து வரும் ஹிந்துக்களின் நலனுக்காகப்பாடுபடும் நல்லவர்களுக்கே எங்கள் வாக்குரிமை என்று ஒவ்வொருஹிந்துவும்தீர்மானித்துமுடிவுசெய்து விட வேண்டும். ஹிந்துக்களுக்காகப் பாடுபடாத, ஹிந்துக்களல்லாத வேட்பாளருக்கு எமது வாக்கு இனிக் கிடையாது எனத்திட்டவட்டமாகச் சொல்ல ஒவ்வொரு ஹிந்துவுக்கும் உரிமையுண்டு. ஆனால் அவர்கள் அப்படிச் சொல்வதில்லை. அரசியல்வாதிகள், பதவி, ஓட்டுக்காகத் தவறுசெய்பவர்களைக் கண்டிக்காது, அவர்களைத் தாஜா செய்வதுபோன்றுசில பத்திரிகைகள்நியாயமான முறையில் செய்திகளை வெளியிடுவதில்லை. அரசியல் வாதிகளையும், அமைச்சர்களையும் கண்டபடி திட்டி எழுதி நேர்மையாக நடப்பது போலக் காட்டுகிற சில சஞ்சிகைகளும் முஸ்லீம்களும், கிறிஸ்தவர்களும் மதமாற்றம் செய்கிற தவறுகளைச்சுட்டிக் காட்ட அஞ்சுகின்றன. ஒருவேளை தங்கள் பத்திரிகைகளின் விற்பனை குறைந்துவிடுமோ என்கிற எண்ணம்தான். இந்தப் பயங்கொள்ளித்தனம்என்றைக்குப் போகுமோ தெரியாது. ஆகவே, அவர்களுக்கும் சேர்த்து உண்மை நிலையை உள்ளபடி மக்களுக்குச் சொல்ல "வல்லமை தாராயோ" எனத் தேவியை மீண்டும் வேண்டுவோமாக!

"சாதிகள் இல்லையடி பாப்பா குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்" என்றான் சாதி வெறியைச் சாகடிக்க விரும்பிய பாரதி. ஒரு பள்ளியில் ஒரு வகுப்பில் உள்ள குழந்தைகளைப் பார்த்து "உங்களில் முஸ்லீம் எத்தனை பேர் கையைத்தூக்குங்கள்" என்றால் முஸ்லீம் குழந்தைகள் உடனே கையைத் தூக்குவார்கள். கிறிஸ்தவர்கள்கைதூக்குங்கள்' என்றால் கிறிஸ்தவக் குழந்தைகள் உடனே கையைத் தூக்குவார்கள். ஆனால்'ஹிந்து குழந்தைகள் கைகளைத் தூக்குங்கள்'என்றால், ஹிந்துக்குழந்தைகள் அக்கம்பக்கம் பார்த்துத் திருதிருவென்று விழிப்பார்கள். அதற்கு ஜாதியின் பெயரைத்தான் சொல்லத் தெரியுமே தவிர ஹிந்து என்று சொல்லத்தெரியாது. ஆகவே ஜாதியை ஒழிக்க ஹிந்து என்ற உணர்வை எல்லாக் குழந்தைகளுக்கும் புகுத்தவேண்டும். ஆபாசம் மிகுந்த சினிமாப் படங்களை, பாடல்களைத் தடைசெய்யவேண்டும். குழந்தைகள் அவற்றைக் கேட்க அனுமதிக்கக்கூடாது.பக்தி, வீரம், நீதிக்கருத்துக்களடங்கிய பாடல்களை இசையமைத்து அவர்களைப் பாடச் செய்ய வேண்டும். நம் இதிகாச புராணங்களில் உள்ளவற்றைக் குழந்தைகளுக்குப் புரியுமளவு கூற வேண்டும். அவர்கள் உண்மை ஹிந்துக்களாக மாறிக் களிக்கூடங்களும், உயர்நிலைப் பள்ளிகளும், கல்லூரிகளும் எல்லாக் கல்வி ஸ்தாபனங்களும் ஹிந்து பண்போடு கூடியதாக உருவாகி நம் தர்மம் உலகனைத்திற்கும் சென்று மேல் நாட்டாரும் முழுமையாக இதில் நாட்டம் கொள்ள "வல்லமை தாராயோ" என வேண்டிக் கொள்வோமாக. ஹிந்துக்கள் ஒற்றுமையாகவும், தாழ்த்தப்பட்டவர்கள், உயர்ந்தவர்கள் என்ற வேறுபாடு இல்லாதவர்களாகவும் வாழப் பராசக்தியை, "வல்லமை தாராயோ" என்று வேண்டிக்கொள்வோம். ஹிந்து மதம் ஆன்மீக வலிமையை வலியுறுத்துகிறது. ஆன்மீகத்தில் நம் நாட்டை வலிவுடையதாக்குவது தான் நம் குறிக்கோள். ஆன்மீக வலிமைக்குள், மற்றெல்லா வலிமைகளும் அடங்கிவிடுகின்றன. "ஆன்மீக வல்லமை தாராயோ" என்று பிரார்த்திப்போம்.

குமரகுருபரர்

(வித்துவான். ஆதி. பாலசுந்தரன் M. A.,)

தீய ஒழுக்கத்தைப் போக்கவேண்டும். அதைச் செய்கின்றவர்களின் பொறுப்பிலே விட்டுவிடுவது மிகச்சிறந்த சமூக விஞ்ஞானம் [social science] ஆகிறது. தவறு செய்கின்றவர்களுக்குத் திருந்துவதற்கான வாய்ப்புக் கொடுக்கவேண்டும். ஒருவருடைய இழிந்த குணங்களை எடுத்துச் சொல்லாமல், பெருமைக்குரிய விஷயங்களை எடுத்துக்கூறி மனத்தைப் பண்படுத்துவது சிறந்த முறையாகிறது.

சொற்களின் எதிர் விளைவுகள் செயல்களுக்கு அடிப்படையாக அமைகின்றன. பேசுகின்ற சொற்களின் தன்மைகளுக்கு ஏற்றவாறு நல்ல செயல்களோ தீய செயல்களோ உண்டாகின்றன. பண்பு நிறைந்த பணிவான சொற்களைப் பேசுவதால் ஏற்படுகின்ற விளைவு நல்ல விளைவாகும். பண்பற்ற சொல்லோ தீமையை உண்டுபண்ணுகின்றது.

எண்ணங்களுக்கும், சொற்களுக்கும் வலிவு உண்டு. நமக்கு அறம் கூறிய சான்றோர்கள் எல்லாரும் வியங்கோளாகக் கூறியிருக்கிறார்கள். சில இடங்களில் வலியுறுத்திக் கூறுவதற்காக ஆணையிடும் முறைகளில் சொல்லியிருக்கிறார்கள். அவைகளும் அன்புக் கட்டளைகளாகவே இருக்கும்.

பணிவான வார்த்தைகளைப் பேசுவதால் பெருமையும் உயர்வும் ஏற்படுகின்றன. "பணியுமாம் என்றும் பெருமை" என்பது ஆன்றோர் வாக்கு. மூங்கில் மரம் வளைந்து கொடுப்பதால் உயர்வு பெறுகிறது. எப்படி? வளைந்த மூங்கிலில் வெண் கொற்றக் குடை அமைத்து, அரசனுடைய அரியாசனத்தில், அவன் தலைக்கு மேல் இருக்கும் பெருமையைப் பெறுகிறது. எதனால்? வளைந்து கொடுப்பதால்.

வளையாத மூங்கில் நேராக நிமிர்ந்து கிடக்கும். கழைக் கூத்தாடி தெருவில் கூத்தாடும்போது அவனுடைய கால்களில் அகப்பட்டு, மிதிபட்டு இழிந்த நிலையை அடைகிறது. உதாரணத்துக்காகச் சொல்லப்பட்டாலும் இதிலிருந்து தெரியக்கூடிய கருத்து என்ன? பணிவு உடையவர்கள் வாழ்க்கையில் உயர்வு அடைவார்கள். பணிவு இல்லாதவர்கள் படாத துன்பங்களெல்லாம் பட்டுச் சீரழிவார்கள்.

பணிவு இல்லாத வார்த்தைகளைப் பேசினால் துன்பம் நேரிடுவது உண்டு. பணிவுடைய சொற்களைப் பேசினால் இன்பமே நேரிடும். எனவே, பிறரைப்பற்றிப் பேசும்போது அவர்களுடைய தவறுகளை எடுத்துப் பேசவேண்டாம். நல்லவற்றை எடுத்துப் பேசுவோம்; பணிவான, நலம்தரும் வார்த்தைகளைப் பேசுவோம்.

மனிதனை மனிதனாக ஆக்குவது கல்வி; வாழச் செய்வது கல்வி. கல்வியை ஆன்றோர்களின் அறிவார்ந்த நூல்களைக் கற்பதாலும் பெறலாம், அனுபவத்தாலும் பெறலாம். ஆசான் உரைப்பனவற்றை அமைதியாக அமர்ந்து செவிப்புலன் வழியே கேட்டு நெஞ்சில் பதித்து வைத்துக்கொள்ளுவது, மீண்டும் சிந்தித்துப்பார்ப்பது, கற்றவற்றை எடுத்துச் சொல்லுவது, வாழ்க்கையில் கடைப்பிடிப்பது என்னும் முறைகளில், கல்விகற்பது தொன்று தொட்டு அமைந்து வந்துள்ளது.

கல்வி எப்போது தோன்றியது? கற்பிக்கும் முறை எக்காலத்தில் ஆரம்பமாயிற்று? சிவபெருமான் தட்சிணாமூர்த்தியாகக் கல்லால மரத்தின் கீழ் எழுந்தருளியிருந்து, சனகர், சனத்குமாரர், சனந்தர், சனாதனர் ஆகிய நால்வருக்கும் அறம் உரைக்கத் துவங்கிய நாளிலிருந்து கற்பதும், கற்பிக்கும் முறையும் உண்டாயின.

கல்வியைக் கற்கிறோம்; மற்றவர்களுக்குக் கற்பிக்கிறோம். கற்பது, மற்றவர்களுக்குக் கற்பிப்பது ஆகிய இரண்டு பகுதிகளுடன் மூன்றாவது ஒரு பகுதியையும் நம் முன்னோர்கள் மிகவும் வலியுறுத்துகின்றனர். அந்த மூன்றாவது பகுதி என்ன?

கற்றபடி வாழ்க்கையில் நடப்பதுதான் அந்த மூன்றாவது பகுதி. கற்றபிரகாரம் வாழ்க்கையில் நடக்காமல் போனால் கற்கின்றவற்றை வாழ்க்கையில் கடைப்பிடிக்காமல் போனால் கல்வி கற்றதால் ஏற்படக்கூடிய பயன் யாது? ஒன்றும் இல்லையே!

கற்றபடி வாழ்க்கையில் நடக்கவேண்டும்

என்பதைக் குமரகுருபரர் எம்முறையிலே கூறுகின்றார்?

"கற்றுப் பிறர்க்கு உரைத்துத் தாம்நில்லார் வாய்ப்படூஉம்
வெற்று உரைக்கு உண்டுஓர் வலியுடைமை சொற்றநீர்
நில்லாதது என்என்று நாண்உறைப்ப நேர்ந்து ஒருவன்
சொல்லாமே சூழ்ந்து சொலல்."

நூல்களை நன்றாகப் படிக்கவேண்டும்; படித்த பிரகாரம் வாழ்க்கையில் நடக்கவேண்டும் என்று கூறுவார்கள். நல்ல கருத்துக்களை அடுத்தவர்களுக்கு மட்டும் எடுத்துக் கூறி விட்டு, எடுத்துக் கூறியபடி தாங்கள் மட்டும் வாழ்க்கையில் கடைப்பிடிக்காமல் சிலர் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களின் வாயிலிருந்து வரக்கூடிய வார்த்தைகள்பயன் இல்லாத வெற்று வார்த்தைகளாகும். அந்த அர்த்தம் இல்லாத வெற்று வார்த்தைகளுக்குக்கூட ஒரு வலிமை உண்டு. அது என்ன வலிமை தெரியுமா?

"எங்களுக்குச் சொன்னமாதிரி நீங்கள் வாழ்க்கையில் கடைப்பிடிக்காமல் இருப்பது ஏன்?" என்று வெட்கம் உண்டாகும்படி, கேட்பவர்கள் சொல்லி விடுவார்களோ என்று நினைத்துக்கொண்டே, அறிவுரை சொல்லும் போதே, சிந்தித்துப் பார்த்து ஜாக்கிரதையாக அறிவுரை கூறுவதுதான் அந்த வலிமை.

உபதேசங்கள் எல்லாம் ஊருக்குத்தானா? படிக்கின்றபோதே, இவை நமக்குப் பயன் படும்; இவற்றைப் படிக்க வேண்டும் என்ற சிந்தனையுடன் படிக்கவேண்டும். விஷயங்களைப் பரவலாகத் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காசமட்டும் படிப்பது பொருந்தாது. அறிந்தவற்றைக் கண்டுபிடித்தவற்றைச் செயல் படுத்திப் பார்த்தால் அறிவியல் அணுகுமுறை நமக்குத் தெரியவரும்.

வாழ்க்கையில் எவ்வளவு படிக்கின்றோமோ அவ்வளவையும் வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகவேண்டும்.

"Education does not only mean teaching people what they do not know; but teaching them to behave in the way they are not behaving" என்று சொல்லும் ஜான் ரஸ்கின் கூற்று இங்கு நினைக்கத் தக்கது.

எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை ஆன்றோர்கள் நமக்குக் கற்பித்துத் தந்திருக்கிறார்கள். அவர்கள் கற்பித்துத் தந்தபடி யாரும் நடப்பதில்லை.

கட்டுப்பாடற்ற சமுதாயத்தை வழி நடத்துவதற்குக் கட்டுப்பாடற்ற சமூகத்துக்கு எந்த விதத் தகுதியும் இல்லை. வழிநடத்துவோர் வழி நடத்தும் தகுதி பெற்றோர் வழிகாட்டாது போனால், சமுதாயம் நெறி கெட்டுப் போய் விடும். வழிகாட்டுவதற்கு வழிகாட்டுவோர் தேவைப்படுகின்றனர். தகுதியுடைய ஒருவர் கைம்மாறு கருதாமல் வழி நடத்துவதைத் தம் முடைய கடமையாக மேற்கொள்கிறார்.

வழிகாட்டவேண்டும் என அவர்களை யாரும் வற்புறுத்துவது இல்லை. வழிகாட்டினால் இன்ன பரிசு கிடைக்கும் என ஆசைவார்த்தை சொல்பவர்களும் இல்லை. அப்படியே சொன்னாலும் அவர்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராய் இல்லை.

பிரதிபலன் எதிர்பார்க்காமல் இயற்கை தன்னுடைய கடமையைச் செய்கிறது. அது போன்று பதில் உதவி எதையும் நினைத்துக் கூடப் பார்க்காமல் சான்றோர்கள் சமூகத்துக்கு வழிகாட்டுகின்றனர். அப்படி வழிகாட்ட வேண்டும் என்னும் உள் உணர்வு அவர்களை உந்தித் தள்ளுகிறது. அந்த உந்து உணர்ச்சி காரணமாக அவர்கள் அறநெறி புகட்டுகிறார்கள்.

சொல்லுகிறபடி நடவாதவர்களும் சமூகத்தில் உள்ளனர் என்பதைக் குமரகுருபரர் இங்கே நினைவூட்டுகின்றார். அன்னவர்களும் மிகவும் ஜாக்கிரதையாக உபதேசம் செய்கின்றார்கள். "நீங்கள் ஏன் எங்களுக்குச் சொல்லுகிற பிரகாரம் நடப்பதில்லை?" என்று கேட்பவர்கள் குறைகூறிவிடுவார்களோ என்ற பயம் அவர்களுக்கு இருக்கிறது. எனவே, அதையும் மனத்தில் வைத்துக் கொண்டே கவனமாகப் பேசுவார்கள்.

"கற்கக் கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்று வள்ளுவர் கூறுவதன் மூலம் கல்விக்கும் வாழ்க்கைக்கும் உள்ள தொடர்பை விளக்குகின்றார்.

கல்வி புனிதமானது. புலனடக்கம்

பொருந்திய, கல்வி கேள்விகளில் வல்ல முனிவர் பெருமக்களால் கற்பித்தல் பணி வழி வழியாக நிகழ்ந்து வந்தது.

கல்வி, வேள்விக்கு நிகரானது. வேள்வி தூய்மையானது; தூய்மை ஆக்குவது. வேள்வி இயற்றுபவன் மனம் மொழி மெய்களில் தூய்மையானவன். மனத்திலே விருப்பு வெறுப்பு அற்றவன். ஆசிரியனும் வேள்வி இயற்றுபவனுக்கு நிகரானவன் ஆகிறான். ஆசு+இரியன். ஆசு-குற்றம். இரியன்-நீக்குபவன். குற்றத்தை நீக்குபவன். தன்னிடத்தில் உள்ள குற்றம் குறைகளை முதலிலே நீக்கிவிட்டு, மற்றவர்களிடத்தில் பொருந்தியுள்ள குறைகளைக் களைபவன் ஆசிரியன்.

நல்லாசிரியர் யார்?

நல்லொழுக்கம் உடைய குடும்பத்திலே பிறந்திருக்கவேண்டும். உயிர்களுக்குத் தீங்கு செய்யாத ஜீவகாருண்யம் உடையவராக விளங்கவேண்டும். தெய்வ பக்தியில் மேன்மை கொண்டவராகத் திகழவேண்டும். பல நூல்களைப் பலமுறை பயின்று தெளிவு பெற்றிருக்கவேண்டும். படித்த நூல்களின் பொருளைத் தெளிவாகவும், எளிமையாகவும் மாணக்கர் புரிந்துகொள்ளும்படி எடுத்துச் சொல்லும் திறன் பெற்று விளங்கவேண்டும்.

பூமியைப் போலப் பெருமையும், பொறுமையும் உடையவராகவும், பயன் தருபவராகவும் இருக்கவேண்டும். மலையைப் போலக் கம்பீரமான தோற்றப்பொலிவு பெற்றிருக்கவேண்டும். தராசுபோல நடுநிலையிலிருந்து கூறவேண்டும். உண்மையைக்காண நடுவு நிலைமை வகிக்கவேண்டும். முரட்டுச் சுபாவம் இல்லாமல், மென்மையான உள்ளம்கொண்டு விளங்கவேண்டும். என்ன நேரினும், மலர்ந்த முகத்தை உடையவராகத் தோற்றம் அளிக்கவேண்டும்.

எத்தகையவர் நல்லாசிரியர்?

நல்ல தந்தையார் ஒருவர், தம்மிடத்தில் உள்ள சொத்தைத் தம் பிள்ளைகளுக்கு வழங்குவதற்கு மறுக்கமாட்டார்; மறைத்துவிடமாட்டார்; குறைத்துக்கொடுக்க மாட்டார். அது போன்று நல்லாசிரியர் ஒருவர் தம்மிடத்தில் உள்ள கல்விச் செல்வத்தைத் தம் மாணவர்களுக்கு வாரி வழங்கிப் புகட்டுவதற்கு வஞ்சகம் செய்யமாட்டார். "மாட்டேன்" என்று மறுத்துவிடமாட்டார். பாடம் சொல்லும் போது குறைத்துச் சொல்லமாட்டார்.

இந்த முறைக்கு மாறாகக் கல்வியை வியாபாரச் சரக்காக எண்ணிக்கொண்டு, பேரம் பேசுகின்ற ஆசிரியர்களைப் பற்றிக் குமரகுருபரர் யாது கூறுகிறார்?

"பிறர்க்குப் பயன்படத் தாம்கற்ற விற்பார்
தமக்குப் பயன்வேறு உடையார்—சிறப்புடைஉம்
தீவினை அஞ்சா விறல்கொண்டு தென்புலத்தார்
கோவினை வேலை கொளல்."

வருந்தப்பட்டுத் தாம் கற்ற கல்வியைப் பணத்துக்காகப் பிறர்க்குக் கொடுக்கும் ஆசிரியர்கள் தங்களை நரகத்தில் போட்டுத் துன்பப்படுத்தும்படியாக, எமனுக்கு வேலை கொடுப்பார்கள்.

அறிவையும், பண்பையும், நல்லொழுக்கத்தையும், இறை உணர்வையும் மேம்படுத்துகின்ற கல்வியை வணிகப் பொருள் ஆக்குவதைப் போலப் பாவச் செயல் வேறு எதுவும் இல்லை.

மணிக்கணக்குப் பார்த்துச் சொல்லிக் கொடுப்பது; இத்தனை ரூபாய்க்கு இத்தனை பாடம்; ஒரு பாடத்துக்கானால் இவ்வளவு ரூபாய்; மூன்று பாடத்துக்கானால் இவ்வளவு பணம் என்று பேரம் பேசுவது கற்கும் சூழலையும், கற்பிக்கும் சூழலையும் கெடுக்கின்றன.

நல்லாசிரியரைப் பேணிப் பாதுகாக்கும் தார்மீகப் பொறுப்பும், கடமையும் சமூகத்துக்கு உண்டு.

மனத்தைப் பண்படுத்துவது கல்வி, அறிவை நெறிப்படுத்துவது கல்வி, உள்ளிருக்கும் ஆன்மாவைத் துலங்க வைப்பது கல்வி.

அத்தகைய கல்வியை வயிற்றை நிரப்புவதற்காகவே பயன்படுத்தக் கூடாது; ஊன் உடம்பைப் பெருக்குவதற்கு உதவும் ஒரு கருவியாக ஆக்கிவிடக் கூடாது.

'பொருள் செல்வத்தில் மயங்காத திடச்சித்தம் உடையவன் நல்லாசிரியன். ஆசிரியத்தகுதி பெற்றவன் பொருள் மயக்கத்திற்கு ஆளாகி விடக்கூடாது. அப்படிப் பொருள் கருதிக் கல்வியை வியாபாரப் பொருளாக்கி விற்பனை செய்து, கல்வியின் பெருமையைக் குறைத்துத் தம்மைத் தாழ்த்திக் கொள்ளுபவர் ஆசிரியர் ஆகமாட்டார். அவருக்கு நற்கதி கிடைக்

காது. அவருக்குக் கிடைப்பதோ நரகம் தான்!' இவ்வாறு குமரகுருபரர் கூறுகிறார்.

காலத்தின் கோலத்தில் கல்வியும் கடைச் சரக்காக மாறி இருப்பது தவிர்க்க வேண்டிய தாகும்.

"சிறுவயதில் இருந்தே ஒருவனை ஒழுக்கம் உள்ள வகையில் பயில்விப்பது, ஒழுங்குள்ள குடிமகனாக இருக்க வேண்டும் என்னும் ஆவலுடையவனாகச் செய்வது, நீதிமுறை வழுவாமல் ஆள்வதற்கும் ஆளப்படுவதற்கும் வழி காட்டுவது எதுவோ, அதுதான் கல்வி"— இது கல்வியைப் பற்றிப் பிளாட்டோ கூறுவதாகும்.

ஒழுக்கம், ஒழுங்கு, நீதி ஆகியவற்றை உணர்ந்துகொள்ள உதவுவது கல்வி. அத்தகைய கல்வி ஒருநாளும் விற்பனைப்பொருளாக இருக்க நியாயம் இல்லை.

பாடம் சொல்லிக்கொடுக்கும் பண்பு இல்லாதவர்கள்; இழிந்த குணம் இயற்கையிலேயே அமைந்திருப்பவர்கள்; பொறுமைக் குணம் உடையவர்கள்; பேராசைப்படுபவர்கள்; உண்மைப் பொருளைச் சொல்லாமல் பொய்ப் பொருளைச்சொல்லி வஞ்சிப்பவர்கள்; கேட்பவர்கள் கண்டு பயப்படும்படி பேசுபவர்கள்; கழற்குடம், மடற்பனை, பஞ்சுக் குடுக்கை, முடத்தென்னைமரம்—இந்தப் பொருள்களுக்கு உரிய குணங்களைப் பெற்றிருப்பவர்கள் எப்படி நல்லாசிரியர்களாகத் திகழமுடியும்?

இத்தகைய குணங்கள் உடையவர்கள், நல்லாசிரியர்கள் பெற்றிருக்கக்கூடிய அமைதியான மனத்தைப் பெற முடியுமா? முடியாது. மன அமைதி இருந்தால்தான் மன ஒருமைப்பாடு ஏற்படும். மன ஒருமைப்பாடு சிறந்த, நுட்பமான அறிவைப் பெறுவதற்கு உற்ற துணை ஆகிறது.

"There is only one method by which to attain knowledge that which is called concentration." என்பது சுவாமி விவேகானந்தருடைய வாக்கு.

மன அமைதியுடன், நுட்பமான அறிவைப் பெற்று, பொருள் செல்வத்தின்மீது பற்றுக் கொள்ளாமல், தகுதியுள்ள மாணுக்கர்களுக்குக் கற்றுக் கொடுப்பது நல்லாசிரியரின் கடமையாகும்.

மாணுக்கரின் தகுதிக்கு ஏற்றவாறு கல்வி கற்பிப்பதே முறை. வயது, அறிவின் இயல்பு, மனப் பக்குவம், மாணுக்கரின் தேவை, பொருத்தம் ஆகியவற்றை உணர்ந்து ஆசிரியர் கற்பித்தல் வேண்டும்.

"ஆசிரியர் தெரிந்து வைத்திருப்பவை அனைத்தும் மாணுக்கர் தெரிந்துகொள்ளவேண்டும் என்பது இல்லை; மாணுக்கர் எதைத் தெரிந்துகொள்ள வேண்டுமோ அதைமட்டுமே கற்பித்தல் வேண்டும்" என்பது தற்காலக் கற்பித்தலின் ஓர் அம்சம்.

கல்வி கற்றுக்கொள்ள விரும்பும் மாணுக்கர் எப்படிப்பட்டவராய் இருத்தல் வேண்டும்? ஆசிரியர் புகட்டுகின்ற கருத்துக்களை ஏற்றுக் கொள்ளும் தகுதி பெற்றிருத்தல் வேண்டும்.

இதைப் பற்றிக் குமரகுருபரர் கூறுவது என்ன?

"கற்றன கல்லார் செவிமாட்டிக் கையுறூஉம்
குற்றம் தமதே பிறிதன்று—முற்றுணர்ந்தும்
தாம்அவர் தன்மை உணராதார் தம்உணர
ஏதிலரை நோவது எவன்"

அறிவு நூல்களை நன்கு கற்றவர்கள், தாம் படித்த நல்ல விஷயங்களைப் படிக்காத மூடர்களின் காதில் நுழைப்பதால் ஏற்படுகின்ற அவமானக் குற்றத்துக்கு அவ் ஆசிரியர்களே காரணம் ஆகின்றார்கள். அது அவர்களுடைய குற்றமே. மற்றவர்களுடைய குற்றம் ஆகாது. எல்லாம் தெரிந்திருந்தும், மூடர்களுடைய மூடத்தன்மையை உணராமல், 'இவர் சிறந்த நல்லாசிரியர், மிகுந்த அறிவுடையவர்' என்று அறியாத மூடர்களுக்கு அறிவு நூற்பொருளைக் கற்பித்துப் பயன் இல்லை.

கற்பிக்கும் அதிகாரி யார்? அவர்களுக்கு என்னென்ன தகுதிகள் இருத்தல் வேண்டும் என்பது வரையறை செய்யப்பட்டுள்ளது. அதேபோன்று கல்வி கற்கும் தகுதியுடைய மாணுக்கர் யாவர்? அவர்களுக்குரிய தகுதிகள் யாவை? என்பனவும் வரையறை செய்யப் பட்டுள்ளன. ஆசிரியரும், மாணுக்கரும் தலைத்தரமானவர்களாக அமைந்துவிடுவார்களாயின் கல்வியும் தலைத்தரமானதாக அமைந்துவிடும். ஸ்ரீ ராமகிருஷ்ணர் தலைத்தரமான ஆசிரியருக்கும், சுவாமி விவேகானந்தர் தலைத்தரமான மாணுக்கருக்கும் சான்றுகளாவார்கள்.

அனுமன் கண்ட சீதை

(திரு. K. ராமமூர்த்தி M. Com.)

2. தெற்கே உதித்த சூரியன்

தென் திசைக்குச் சென்ற வீரர்கள் என்ன ஆனார்களோ என்று கருணைவள்ளல் கதிரவன், மைந்தனிடம் கவலையுடன் பேசிக்கொண்டிருந்தான். அந்த நேரத்தில் சூரியன் தெற்கே உதித்துவிட்டானே என்று காண்போர் வியக்கும் வண்ணம் அனுமன் சிவப்புப் பிழம்பாக ஒளிவீசும் தேஜசுடன் தென் திசையில் தோன்றினான். சிறிது சிறிதாகப் பெரிதாகி வந்த அந்த ஒளிமிக்க உருவம் ராமபிரான் இருக்கும் இடம் நோக்கி விரைவாக வந்தது. அப்படி வந்த அனுமன் ராமன் பாதங்களை முதலில் வணங்கினானில்லை; கற்புத் தெய்வம் கடுந்தவம் இயற்றிக்கொண்டிருந்த திசை நோக்கிக் கையெடுத்துத் தொழுதான்; தன் பேருருவம் மண்ணில் பட அத்திசை நோக்கி விழுந்து வணங்கினான்; அத்தெய்வத்தை உளமார வாழ்த்தினான்; பின்னர்தான் ராமபிரானைப் பார்த்துப் பேச ஆரம்பிக்கின்றான்:

" கண்டனென், கற்பினுக்கு அணியை, கண்களால்,
தென்திரை அலைகடல் இலங்கைத் தென்நகர்;
அண்டர் நாயக! இனி, துறத்தி, ஐயமும்
பண்டு உவ துயரும்; என்று அனுமன் பன்னுவான்"

— திருவடி தொழுத படலம், 25.

[தென்திரை-தெளிவான அலை, பன்னுவான்-விரித்துரைப்பான்.]

கம்பராமாயணத்தில் ஓரளவு ஈடுபாடுடையவர்கள்கூட மிகவும் விரும்பி, ரசிக்கும் பாடல்களில் இதுவும் ஒன்று. விரிவுரையாளர்கள் தங்கள் உரை எழுதும் திறமையையெல்லாம் பயன்படுத்தி இதற்கு உரை எழுதியுள்ளார்கள். கம்பராமாயணச் சொற்பொழிவாளர்கள், கூட்டத்தினரை நெடுநேரம் ஈர்த்துக்கொள்வதற்காக இப்பாட்டைப் பயன்படுத்திக்கொள்வார்கள்.

நான்கே வரிகளில் தன்னுடைய பணியைச் சிறப்புற நிறைவேற்றிய செய்தியைத் தெரிவிக்கும் அனுமனுடைய சொல்வன்மையை எவ்வளவு புகழ்ந்தாலும் போதாது. இந்தச் 'செய்தி அறிவிக்கும் திறன்' Reporting Skill -அனுமனுடைய தனிச்சிறப்பு என்றே சொல்லலாம். இந்தப் பாடலின் முதல் வரியிலுள்ள சொற்களின் வைப்பு முறையில் எவ்வளவு கவனம் செலுத்தியிருக்கின்றான் காற்றின் மைந்தன்! என்று எண்ணிப்பார்க்கும்போது நம் வியப்பிற்கு எல்லையேயில்லை. இப்படி அவனைப் பேசவைத்த கம்பனின் கவிதையைச் சிரம்தாழ்த்தி வணங்குவோமாக!

தனக்கு இட்ட பணியைச் செவ்வனே செய்து முடித்த விதத்தைச் சுருக்கமாக, தெளிவாக ராமபிரானிடம் தெரிவித்த பின்னர், விரிவாகத் தன் பயண விவரங்களைத் தெரிவிக்க முற்படுகிறான் அனுமன். ஆனால் ராமனிடம் சீதையைக் கண்டுவிட்டதாக ஆரம்பித்த அனுமன், அவளைப்பார்த்த விவரங்களைக் கூறும் முன்னர், தன்னை மறந்து, அவள் ஆற்றுகின்ற தவத்தின் அருமையை ராமனிடம் எடுத்துரைக்க ஆரம்பித்து விடுகின்றான்; பயண விவரங்களைச் சொல்வதற்கு முன்னால் சீதையிடம் தான் கண்ட பண்பு நலன்களைப் பறைசாற்றவேண்டும் என்ற துடிப்பு முந்திக்கொள்கின்றது. இதற்கு என்ன காரணம் என்று ஆராய்ந்தால் அனுமனுடைய செயலுக்கு விளக்கம் கிடைக்கும்.

முதன்முதலில் ராமனைப் பார்த்தபோது அனுமனின் மனம் நெக்குருகிற்று. அந்த ராமனைப்பிரிந்து அரக்கர் சிறையில் வாடிய சீதையைக் கண்டபோது அனுமன் பக்திப் பெருக்கில் அவளுக்கு அடிமையானான். அதுவரையில் ராமனிடமே தன் உள்ளத்தைப் பறிகொடுத்திருந்த அனுமன் சீதையைக் கண்ட பின்னர் அவளுடைய பண்பாட்டிற்கு அடிமையாகின்றான். அவள்படும் துயரத்திற்கு முன் ராமன் படும் துயரம் மிகச்சிறிதாகி விடுகின்றது. அத்துயரத்தை அவள் ஏற்றுக்கொண்டு பொறுத்திருந்த பண்பு, அனுமனைப் பிரமிக்க வைத்து விடுகின்றது. பஞ்சேந்திரியங்களை அடக்கி நீரிலும் நெருப்பிலும் நின்று கடுந்தவம் புரியும் முனிவர்களுடைய தவங்களையெல்லாம் விடச் சீதை ஆற்றும் தவம் பன்மடங்கு உயர்ந்தது என்று உறுதிகொள்கின்றான் மாருதி. அது மட்டுமன்று; இந்தத்தெய்

வத் தவத்தியைத் தவ நிலையில் பார்க்கும் பேறு ராமனுக்குக் கிடைக்கவில்லையே என்றும் ஏங்குகின்றான் அனுமன். இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்ததுபோன்று சீதைதான் இலக்குமி என்றும், எனவே ராமன் திருமாலாகத்தான் இருக்கவேண்டும் என்றும் சீதையைப் பார்த்தபின்னர்தான் ராமனையே அடையாளம் கண்டுகொண்டதாக அனுமன் கருதும் அளவிற்கு அனுமன் சீதையின் பண்பு நலன்களில் தன் மனத்தைப் பறிகொடுத்துவிடுகின்றான். எனவே, சீதையைப்பற்றிய இந்த நினைவுகள் அனுமனுடைய மனத்தில் நிறைந்து, சந்தர்ப்பம் வாய்த்தபோதெல்லாம் பொங்கிப் பிரவாகமாக வெளி வருவதில் வியப்பொன்றும் இல்லை. அனுமன் பயண விவரங்களைக் கூறும் முன்பு சீதையின் பண்பு நலன்களைப் பாராட்டிப் பேசியதன் காரணம் இதுதான்.

இனி, சீதைபற்றிய தன்னுடைய கணிப்பை அனுமன் ராமனிடம் அறிவிக்கும் முறையைப் பார்க்கலாம். அவன் ராமனிடம் கூறிய மொழிகள், ராமனுக்காக மட்டுமன்றி நமக்காகவும் என்று தோன்றுகின்றது. ஏனெனில் அனுமன் கண்ட சீதையைப்பற்றி இப்போதுதான் அனுமன் வாயிலாகக் கேட்கும் வாய்ப்பு நமக்குக் கிடைத்துள்ளது. எவ்வாறு ராமனைப் பாடும்போதெல்லாம் கம்பன் ஒரு ரிஷியாக ஆகி, அப்பாடல்களும் வேத மந்திரங்கள்போல் ஆகிவிடுகின்றனவோ, அதே போன்று சீதையைப்பற்றிப் பேசும்போதெல்லாம் அனுமன் ஒரு பக்த ஞானியாகவும் அவனுடைய சொற்கள் வேத மந்திரங்கள் போலவும் ஆகிவிடுவதைக் கம்பனில் பலஇடங்களில் காணலாம். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாகவே வாழ்ந்த வாயுகுமாரன் முதலில் சுக்ரீவனின் மந்திரியாக இருந்து, ராமனின் தொண்டனாக மாறிப் பின் சீதையின் பக்தனாக உயர்ந்து விடுகின்றான் என்பதை இப்பாடல்கள் நன்கு தெளிவாக்குகின்றன. சீதையைப் பற்றிய அனுமனின் கணிப்பைக் கூறுவதன்மூலம் பெண்மையின் அரும்பண்புகளை நமக்குப் போதிக்கும் கம்பனின் நோக்கமும் இங்குக் குறிப்பிடத் தக்கது. சீதையிடம் தான் கண்டதாக அனுமன் விவரித்த பண்புகளையெல்லாம் தொகுத்துப் பின்வரும் மூன்று பகுதிகளில் காண்போம்.

3. மகள், மனைவி, மருமகள் :

மகளிர் வாழ்வில் மூன்று நிலைகளில் அவர்கள் சிறப்பு வெளிப்படுகின்றது. பிறந்த வீட்டில் மகள், புகுந்த வீட்டில் கணவனுக்கு மணமகள், கணவனின் பெற்றோருக்கு மருமகள். எனவே ஒரு பெண் தான் செய்யும் ஒவ்வொரு செயலும் மகள், மணமகள், மருமகள் என்றதன் மூன்று நிலைகளுக்கும் ஏற்புடையதாகவும், சிறப்புடையதாகவும், பெருமை சேர்க்கக் கூடியதாகவும் அமைய வேண்டும்.

அசோகவனச் சீதை இந்த இலக்கணத்திற்கு ஏற்ற அற்புதமான ஓர் இலக்கியமாகத் திகழ்ந்தாள். ஜனகன் ஆட்சிபுரிந்ததற்கிடையில் சிறந்த துறவு மனப்பான்மை பெற்றிருந்தார். ராஜ்பத்தில் பற்றில்லாது ராஜ்யபரிபாலனம் செய்தார். எனவே அவர் ராஜரிஷி என்று யாவராலும் அழைக்கப்பட்டு வருகிறார். ராஜரிஷியாக வாழ்ந்த ஜனகனுக்கு ஏற்ற மகளாகவும், அறத்தின் நாயகனாகிய ராமனுக்கு ஏற்ற மனைவியாகவும், 'செயிரிலா உலகினில் சென்று நின்று வாழ் உயிரெலாம் உறைவதோர் உடம்பும்' ஆன தயரதனுக்கு ஏற்ற மருமகளாகவும் தன்னைச் சீதை உயர்த்திக் கொண்டாள்.

பிராட்டியின் சீரிய ஒழுக்கமே இம்மூவருடைய சிறப்பையும் இன்றும் உலகம் பாராட்டச் சிறந்த ஏதுவாய் உள்ளது.

"மண்ணிடை யாவர் ராகவன் அன்றி மாதவம் அறத்தொடு வளர்த்தார்?" [பாலகாண்டம். நகரப்படலம்-5] என்று துணிந்து சிறப்பிக்கப் பெறும். தர்மாத்மாவான ராமபிரானின் தேவி என்ற உரிமைக்கு ஏற்றவாறு அறக்கற்பின் அணியாய் நின்றவள் பிராட்டி.

"மறக்கமுற்றாதன வாய்மை காத்தவன், துறக்கமுற்றான்'' [ஆரண்ய. சடாயுகாண் படலம். 19] என்றும் 'வாய்மையும் மரபும் காத்து மன்னுயிர் துறந்த வள்ளல்' [கிட்கிந்தா. வாலிவதைப் படலம். 76] என்றும் பாராட்டப்பட்ட தசரதன் மருமகள் என்ற சிறப்பிற்கு ஏற்றவளாவாள் பிராட்டி.

"பற்றனைத்தும் கடந்த பரமயோகியாகிய சுகப்பிரும்மம் முதலிய மகான்களும் வந்து,

காத்திருந்து அறிவுரை கேட்டுத் தெளியப் பெறும் மகா ஞானியாகிய ஜனகராஜன் மகளாய் 'ஜனகன் பெற்ற அன்னம்' [கிட்கிந்தா. வாலிவதை 78] என்னும் பெருமைக்கு ஏற்ப, நல்லறிவு சிறந்து விளங்கி நின்ருள் பிராட்டி."

— [கம்பராமாயணம். சுந்தர. திருவடி தொழுத படலம். 26. டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் பதிப்பு-சிறப்புரை]

தங்கத்திற்கு நிகர் தங்கமே. அதுபோன்று, பொறுமையில் சீதைக்கு நிகர் சீதைதான். அப்படிப்பட்ட சிதையை மனைவியாகப் பெற்ற ராமனுக்கு நிகர் வேறு யாரும் இல்லை. இதனைக் கண்டு உலகத்தோர்க்குத் தெரிவித்த அனுமனுக்கு நிகரும் அனுமன் தான்.

"தீயில் உருக்கிப் பின் தகடாகவும் கம்பியாகவும் பலவித மாறுபாடான நிலைமைகளுக்கு உள்ளானலும், அவற்றல் தங்கம் தன் பெருமையும் தூய்மையும் சிறிதும் குறைவுருது, மேலும் சிறந்த ஒளியும் உருவும் பெற்றுப் பல்லோராலும் பாராட்டப்பட்டு விளங்குவது போன்று, சீதாதேவியும், ராவணனல் சிறை வைக்கப்பட்டு, பேய்களும் அஞ்சும் அரக்கியர் பலராலும், சினம்கொண்ட ராவணனலும் பலவித நிந்தை மொழிகளால் தாக்குண்டும், அச்சுறுத்தப்பட்டும் கூடத் தன் நிலையிற் சிறிதும் குன்ருது மேலும் உறுதியுடன் சிறந்து விளங்கியதால் சீதாதேவிக்குத் தங்கத்தை உவமித்தது மிகப் பொருத்தம். மகளிர்க்கு எல்லாம் தான் எவ்வாறு சிறந்து விளங்குமாறு இருந்தாளோ, அவ்வாறே மனைவியைப் பெற்ற ஆடவர்களுக்கெல்லாம் ராமன் சிறந்தவன் என்னும் பெருமையை ராமனுக்குத் தன் ஒழுக்கச் சிறப்பினுல் உவந்தருளியவள் சீதை. வனங்களில் வாழும் இழிந்த சாகாமிருக வருக்கத்திற்கு பிறந்த அனுமன் பிராட்டியைத் தேடிக் கண்டு, ராமனிடம் தெரிவித்து அதனுல் விளையக்கூடிய உலகப் பெரு நன்மைக்குக் காரணமான நிலையில் இருக்கச் செய்த பெரும் பேறு அனுமனுக்கு அளத்துள்ளாளாதலின் அனுமனுக்கு நிகர் அனுமன் என்ற சிறப்பு அனுமனுக்கு ஏற்பட்டது."

— [சுந்தர. திருவடி. 27. டாக்டர் உ.வே.சா. பதிப்பு-சிறப்புரை]

"செம்பு முதலிய வேறு உலோகக் கலப்புற்ற தங்கத்தைப் புடத்திலிட்டால், தன்னேடு கலந்திருந்த உலோகங்கள் எல்லாம் எரிந்து ஒழிந்துபோகத் தனியாகத் தங்குவது தங்கமே—அதனுல்தான் 'நோக்குதல்' என்னும் பொருளுடைய 'நோக்கம்' போலத் 'தங்கம்' 'தங்குதல்' என்னும் பொருளுடையதாய்ப் பொன்னுக்கு ஒரு பெயராயினதுபோலும்—புடச்சோதனையைப் பொறுக்கமாட்டாது மற்றெல்லா உலோகங்களும் நிலையாதொழியப் பொன் ஒன்றே பொறுத்து நிலை கெடாதிருத்தல் போல, மற்றெல்லா மக்களும் பொறுக்கமாட்டாமல் நிலைகெட்டு ஒழியும்படியுள்ள துன்பச்சோதனையைப் பொறுத்து நிலைகெடாது நின்ருள் சீதை என்பது கருத்து. பொறுமைக்கு நிலைப்பிடமாய், அதனுல் தானன்றித் தனக்கு நிகரில்லாதவளான சீதை, தனக்கு நாயகனைப் பெற்ற ராமன், அப்படிப்பட்ட மனைவியைப் பெருத மற்றைய ஆடவரெவரும் ஒப்பாகாது, தனக்குத் தானே ஒப்பாகும் பிரசித்தியைப் பெறச் செய்தாள். அனுமான் 'ஊழி ஓர் பகலாய் ஓதும் ஆண்டெலாம் உலகம் ஏழும் ஏழும் வீவுற்ற ஞான்றும் இன்றென இருத்தி' என்று சீதை தன்னை வாழ்த்தித் தொண்டரானருள்ளே தன்னையன்றித் தன்னை ஒப்பவரில்லையெனும்படி தான் சிரஞ்சீவியாகும் வரந்தந்தாள் "என்ருன்.

— [கம்பராமாயண சாரம். வெ. ப. சுப்பிரமணிய முதலியார். சுந்தர. பாடல் 139]

"பொன்னுக்கு, தீயிலிட்டுப் புடமிடும் தோறும் தன் ஒளி சிறத்தலும், அவ்ஒளிச் சிறப்பால் உலகிற்குச் சீரிய அணிகலமாதலும் இயல்பு; பிராட்டிக்கு, பிறர் வருத்த வருதகத் தூயவளாகிச் சிறந்து காட்டலும், அச்சிறப்பால் உலகம் தலைமேல் வைத்துக்கொண்டாடுதலும் இயல்பு. இப்பொன்னின் உவமையை:

'பொன்னைத் தீயிடைப் பெய்வது அப்பொன்னு
[டைத் தூய்மை
தன்னைக் காட்டுதற்கு என்பது மனக்கொவல்
[தகுதி

என்று யுத்தகாண்டம் மீட்சிப்படலத்துள் (பாடல் 123) வரும் திருவாக்காலும் உரைக்கத் தகும்"

—[கம்பராமாயணம். சுந்தர. திருவடி. 27. அண்ணமலைப் பல்கலைக்கழகப் பதிப்பு உரை]

ஆத்ம போதம்

(திரு V. S. நரசிம்மன்)

नानोपाधिवशादेव जातिवर्णाश्रमादयः ।
आत्मन्यारोपितास्तोये रसवर्णादिभेदवत् ॥

तोये (தோயே) தண்ணீரில் रस वर्ण (ரஸ, வர்ண) ருசி, நிறம் आदि (ஆதி) போன்ற भेदवत् (பேதவத்) வேற்றுமைகளைப் போல், जाति (ஜாதி) ஜாதி, वर्ण (வர்ண) வருணம், आश्रम (ஆஸ்ரம) ஆசிரமம் आदय: (ஆதய:) ஆகியவை नाना (நாநா) பலவித उपाधि (உபாதி) உபாதிகளின் वशात्एव (வசாத் ஏவ) வசப்பட்டிருப்பதால் आत्मनि (ஆத்மனி) ஆத்மனிடத்து आरोपिता: (ஆரோபிதா:) கற்பிக்கப்படுகின்றன.

"தண்ணீருக்கு நிறமும் ருசியும் அதனுடன் சேர்ந்துள்ள பொருள்களால் உண்டாகின்றன. அதுபோன்று ஆத்மா உபாதிகளின் வசப்பட்டிருப்பதால் ஜாதி, வர்ணம், ஆசிரமம் ஆகிய பேதங்கள் கற்பிக்கப்படுகின்றன."

ஜாதி என்ற சொல் ஒரு குறிப்பிட்ட பிரிவைக் குறிக்கும். தற்போது வழக்கில் உள்ள இந்தச் சொல்லிற்குச் சமுதாயத்தில் உள்ள இனப்பிரிவுகளைப் பொருளாகக் கொள்கின்றோம். ஆயினும் மனித ஜாதி, மிருகஜாதி, தாவரஜாதி என்ற பிரிவுகளையே இச்சொல் குறிக்கும். சமுதாயத்தில் அன்று நிலவிய வேறுபாட்டை வருணம் குறிக்கும். நால்வகை வருணங்களும், நான்கு ஆசிரமங்களும் ஹிந்து சமுதாயத்தின் சிறப்பியல்புகளாக அன்று திகழ்ந்தன. தற்போது வர்ண-ஆசிரம தர்மம் குறிப்பிட்ட நியதிக்கு உட்பட்டது அன்று. மனிதனின் பரிபாகம், தகுதி இவைகளுக்குஏற்பச் சமுதாய வாழ்வு செம்மையாக நடைபெற வகுக்கப்பட்டது இந்தத் தர்மம். இதன் அடிப்படைத் தத்துவத்தை உணராது, வெறுப்பினால் இம்முறையை ஒதுக்குதலோ, விமர்சிப்பதோ பொருந்தாது. காய்தல், உவத்தல் இன்றித் தத்துவத்தை நிலைநாட்டும் முறையில் இதனை நிறைவேற்றினால் ஹிந்து சமூகம் முன்னேறும். மனித இனத்திலோ, வேறு உயிரினத்திலோ வேறுபாடே இல்லாத சமத்துவத்தைக் காண இயலாது; அதற்கெனப் பாடுபடுவதும் முறையன்று. Superficial oneness–மேற்புறத்தே சமத்துவம் காணப்பட்டாலும், ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட பாங்கை மேற்கொள்வதே இயற்கை. Variety is the spice of life. வாழ்வு என்பதே வேறுபாடுகளின் கூட்டம்தான். வாழ்க்கைக்குப் புத்துணர்ச்சி அளிப்பதும் அதுதான். ஆயினும் மனப்பாங்கைப் பொருத்து அமையும் பிரிவிற்கு உரிய இடம் தராது, முற்றிலும் பிறப்பை அடிப்படையாகக் கொண்டு வருணத்தைத் தீர்மானிப்பது சரியன்று. சாதுர் வர்ண்யம் மயா ச்ருஷ்டம் குண கர்ம விபாகச: — குணம், தொழில் இவற்றின் வேறுபாட்டைக்கொண்டு நான்கு வருணங்கள் என்னால் உண்டாக்கப்பட்டன என்பது கீதையின் மொழி.

பேதங்கள் அனைத்திற்கும் காரணம் உபாதிகளே. சரீரத் தர்மங்களாகிய—ஜாதி, வர்ணம், ஆசிரமம் — ஆகியவற்றை ஆத்மாவின் தர்மங்களாக எண்ணி மயங்குவதே அஞ்ஞானம். இந்த உபாதிகளை நீக்கும் நெறியில் சாதகன் முனைந்து செல்லவேண்டும். தன்னுடைய பிறப்பை உயர்வாகக் கருதுபவனிடம் 'ஜாதிக் குறும்பு' என்ற குற்றம் இருப்பதாக ஸ்ரீராமனுஜர் கூறுகின்றார். முக்குறும்பு என்று அவர் 'ஜாதிச் செருக்கு, கல்விச் செருக்கு, செல்வச்செருக்கு' ஆகியமூன்றையும்குறிப்பார்.

பிறப்பால் நான் உயர்ந்தோன், அவன் தாழ்ந்தோன் என்ற சிந்தனை மேலிடுவது பெரும் அக்ஞானமாகும். இதன் காரணமாகத் தோன்றியுள்ள தீண்டாமை என்ற நோய் நமது ஹிந்து சமயத்திற்குப் பெரும் சாபக்கேடாக உள்ளது. காண்பவை அனைத்தும் பரப்பிரம்மமே—'சர்வம் கலு இதம் பிரம்மம்'— என்ற மேலான தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட சனாதன தர்மத்தின் நடைமுறையில், இத்தகைய வேறுபாடு காணப்படுவது விந்தையே! "ந ஹிந்து பதிதோ பவேத்– ஹிந்து எவனும் கீழானவன் ஆகமாட்டான்" என்ற தாரக மந்திரத்தை முழங்கச் செய்வதே நமது தர்மத்திற்கு நாம் ஆற்றும் தொண்டாகும்.

சமுதாயத்தில் நிலவிய பழக்கத்திற்கு அடிமையாகி ஞானிகளும் தீண்டாமையைக்

கடைப்பிடித்தபோது, இறைவனே அவர்களுடைய மயக்கத்தை மாற்றினார் என்று பல நிகழ்ச்சிகள் கூறுகின்றன. ஆசாரிய சங்கரர் கங்கையில் நீராடிவிட்டுச்சீடர்களுடன் வரும் பொழுது, நான்கு நாய்களைப் பிடித்தவாறு ஒரு புலையன் எதிர் நோக்கி வருகின்றான். அவனைக் கண்டதும், 'விலகிச்செல், விலகிச் செல்' என்றனர் சீடர்கள். அப்போது புலையன் கேட்கின்றான், "யதிகளில் சிறந்தோரே! அன்ன மயக்கத்தாலான இச்சரீரத்தை அன்னமயமான ஒரு சரீரத்தினின்று விலகும்படி கூறுகிறீர்களா? அல்லது சைதன்ய சொருபத்தினின்று, சைதன்யத்தை அகன்று போகும்படி சொல்கின்றீர்களா? கங்கை நதியில் பிரதிபலிக்கும் சந்திரனின் பிம்பம், சண்டாளன் ஒருவன் குடிசைக்கு அருகில் உள்ள குட்டையில் உள்ள பிம்பத்தினின்று வேறுபடுமோ? பொற்குடம், மண்குடம் இவற்றில் உள்ள ஆகாசத்தில் வித்தியாசம் உள்ளதா? எங்கும் நீக்கமற நிறைந்து இருக்கும் சத்திய ஆனந்த போதத்தில் திளைத்து இருக்கும் உம்மிடம், 'இவன் மேலோன்' 'இவன் தாழ்ந்த குலத்தோன்' என்ற பெரும் மயக்கம் எப்படித் தோன்றுகின்றது?" அவன் மொழிகளைக் கேட்ட ஆசாரியர் ஆத்ம தத்துவ உண்மையை நினைவு கூறுகின்றார். தம் மனம் பழக்கத்திற்கு அடிமையாகிப் பாமரத்தன்மை எய்தியதை அகற்றி, உயர்ந்த தத்துவத்திற்கேற்ற மனநிலையுடன் உரைக்கின்றார். "பரம்பொருளின் தன்மையை உணர்ந்து உறுதியான போதத்துடன் இருப்பவர் சண்டாளர் ஆயினும், அந்தணர் ஆயினும் அவரை என் குருவெனப் போற்றுகின்றேன். 'ஸ ஏவ நிஜ வஸ்து இதி த்ருட ப்ரக்ஞா யஸ்ய அஸ்தி சேத், சண்டாளோ அஸ்து ஸது த்விஜோ அஸ்து குருரிதி ஏஷா மநீஷாமம' என்ற ஈற்றடியைக்கொண்ட ஐந்து சுலோகங்களை இயற்றினார். 'மநீஷா பஞ்சகம்,' என்று அவை குறிப்பிடப்படும்.

ஸ்ரீ ராமாநுஜர் அவர்களும் 'தாழ்ந்த குலத்தவர்' என்று அழைக்கப்படும் சமூகத்தினர் பலரைத் தம் சீடர்களாக அங்கீகரித்துள்ளார். குறிப்பாக அவருடைய குருநாதர் ஒருவரும் இத்தகைய குலத்தில் பிறந்தவரே. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் தமக்கு உபநயனச் சடங்கு நடந்தபோது, முதல் பிக்ஷைக்குச் சாதாரண மாது ஒருத்தியின் இல்லத்திற்கே சென்றார். 'தாயே இவர்கள் அனைவரும் உன் குழந்தைகள்' என்று உரைத்துத் தனது ஆணவத்தை அகற்ற, அவர்கள் வீட்டின் கழிவறைகளைத் தலை முடியால் சுத்தம் செய்தார்.

पञ्चीकृतमहाभूतसंभवं कर्मसञ्चितम् ।
शरीरं सुखदुःखानां भोगयतनमुच्यते ॥

पञ्चीकृत (பஞ்சீக்ருத) பஞ்சீகரணம் செய்யப்பட்ட महाभूत (மகாபூத) மஹாபூதங்களுடைய संभवं (ஸம்பவம்) உண்டாக்கப்பட்டதும் कर्म सञ्चितम् (கர்ம சஞ்சிதம்) கர்மாவினால் அடையப்பட்டதும் शरीरं (சரீரம்) ஸ்தூல உடல் सुखदुःखानां (சுகதுக்கானாம்) சுக, துக்கங்களின் भोग (போக) அனுபவிப்பதற்கு आयतनम् (ஆயதனம்) இருப்பிடமாக उच्यते (உச்யதே) உரைக்கப்படுகின்றது.

"பழைய கர்மவினையினால் அடையப்பட்ட சரீரம், ஐந்து மூலகங்களின் பஞ்சீகரண சேர்க்கையினால் உண்டாகின்றது. இன்ப, துன்பங்களுக்கு உறைவிடமாகச் சொல்லப்படுகின்றது."

ஆத்மாவிற்கு உபாதிகளாக இருப்பவை, சரீர த்ரயம் எனப்படும். அவைகள் ஸ்தூல, சூக்ஷ்ம, சரீரங்களாம். ஸ்தூல சரீரம் இந்தச் சுலோகத்தில் விவரிக்கப்படுகின்றது. ஸூக்ஷ்மமாக உள்ள ஐந்துபூதங்கள் பஞ்சீகரணம் என்ற முறையில் ஒன்று சேர்க்கப்பட்டதால் ஸ்தூல சரீரம் உண்டாகின்றது. ஒவ்வொரு மூலப்பொருளின் பாதியும் மீதி உள்ள நான்கில் ¼ பங்கும் சேர்ந்து, ஒரு மூலப்பொருளாக மாறுகின்றது. உதாரணமாக, பிருத்வி-நிலம் என்ற மூலப்பொருளில் பாதிப்பகுதி நிலம்; நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய நான்கும் சேர்ந்து மற்றொரு பாதி. இதனால் ஒவ்வொரு பூதமும் தனியான மூலகம் அன்று; ஐந்தின் சேர்க்கையே என்று உணர்த்தப்படுகின்றது.

ஐந்து பூத தத்துவம், பஞ்சீகரண முறை ஆகியவை தற்கால விஞ்ஞானத்திற்கு ஏற்றவை அல்ல. தற்போது மூலகங்கள் (Elements) 110க்கு அதிகமானவை; வேதியியல் தண்ணீரை மூலகமாக ஏற்பது இல்லை;

இரண்டு வாயுக்களின் சேர்க்கையே (பிராண வாயு + கரியமிலவாயு = ஜலவாயு நீர் ஆகும்.) (Oxygen + Hydrogen = Water) எனவே இக்கூற்றுப் பொருந்தாத ஒன்று என்று கூறப்படுகின்றது. ஆயினும் வேதாந்த விசாரத்தில் குறிக்கப்படும் இத்தகைய கருத்துக்கள் தற்கால விஞ்ஞானத்திற்கு முற்றிலும் பொருந்துவதாக அமைய வேண்டும் என்று நாம் எதிர்பார்ப்பது தவறு. இங்கு விஞ்ஞானம் புகட்டப்படுவதில்லை. பாரதீய இலக்கியத்தில் விஞ்ஞான நூல்கள் பல உள்ளன. அவற்றை மட்டும் தற்கால நிலையோடு ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். தத்துவ ஆராய்ச்சியில் உலகத்தின் தோற்றம், தன்மை ஆகியவை சற்று விவரமாகவும், உயர்வு நவிற்சியாகவும் குறிப்பிடப்பட்டாலும், நோக்கம் வேதாந்த ஞானமே அன்றி உலக ஞானம் அன்று. காணப்படும் உலகத்தினின்றும், காண்கின்ற ஜீவன், அவன் போற்றுகின்ற ஈஸ்வரன் ஆகிய பேருண்மைகள் உணர்த்தப்படவேண்டும். எனவே, இத்தகைய குறிப்புக்களை ஆத்ம சாதகர்கள் பெரிதுபடுத்த வேண்டியதில்லை. மஹரிஷி ஸ்ரீ ரமணரிடம் மேஜர் சாத்விக் (சாது அருணாசல) என்பவர் ஒரு விளக்கம் கேட்டார். அவர் மொழி பெயர்ப்புச் செய்யும் புராணத்தில் உலக சிருஷ்டி, ஸ்திதி பற்றி பல விளக்கங்கள், வர்ணனைகள் தரப்பட்டிருந்தன. பல பகுதிகள் அவருக்குப் புரியவில்லை; மொழி பெயர்ப்பும் சிக்கலாக இருந்தது. மகரிஷி அவரிடம் இத்தகைய பகுதிகளைப் பற்றி அதிகம் கவலைப்படாது, சுருக்கமாகக் கூறி விட்டுத் தத்துவப் பகுதிக்குச் சென்று அதில் அதிகக் கவனமும், சிரத்தையும் கொள்ளுமாறு பணித்தார்.

தத்துவ ரீதியாகப் பார்த்தால் இந்தப் பாகுபாட்டில் ஆழ்ந்த பொருள் இருப்பதை அறியலாம். நாம் உலகை உணர்வது ஐம்பொறிகளின் மூலமே. ஒவ்வொரு இந்திரியமும் ஒரு குறிப்பிட்ட திறமை படைத்தது. கண்ணால் பார்த்தல், காதால் கேட்டல் போல, ஆகாயம் என்ற பூதம், வெளி ஆகாசத்தை மட்டும் குறிப்பதில்லை. சப்தம், ஓசைக்கு ஆதாரமாக உள்ள தத்துவத்தையும் குறிக்கும். அடுத்து வாயு-ஓசையும், ஊறும் உடையது; அடுத்து நெருப்பு உருவையும் கொண்டுள்ளது; பின் எழும் நீர் சுவையையும் ஏற்றுள்ளது. இறுதியில் நிலம் மணத்தையும் பெறுகின்றது. இங்ஙனம் சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரசம், கந்தம் ஆகிய ஐந்து குணங்களும் ஆகாசம், வாயு, அக்னி, நீர், நிலம் ஆகியவற்றின் ஆதாரத்தைக்கொண்டு அமைகின்றன. ஆகாசத்தில் ஒரே குணம்; நிலத்தில் ஐந்து குணங்களாகக் காணப்படுகின்றன. இங்ஙனம் வ்யக்தியாக இலங்கும் ஜீவனுக்கும் பிரபஞ்சத்திற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. ஐந்துபொறிகளால் பிரபஞ்சத்தை அறியும் சாதகன், பிரபஞ்ச அதீதத்திற்குச் செல்ல வேண்டுமாயின் ஐந்து பொறிகளையும் அடக்க வேண்டும். திருவள்ளுவரின் 'பொறிவாயில் ஐந்தவித்தான்' என்ற குறளும், 'சுவைஒளி ஊறு ஓசை நாற்றம் என்று ஐந்தின் வகைதெரிவான் கட்டே உலகு' என்ற குறளும் ஈண்டு நினைவு கூரத் தக்கன. எனவே ஐம்பூதத் தத்துவம் ஜீவ தத்துவத்தோடு இயைந்து வருவதால், வேதாந்த விசாரணைக்கு ஏற்புடைத்ததே.

ஸ்தூல சரீரம் சுக துக்க அனுபவங்களுக்கு இருப்பிடமாக அமைகின்றது. வாழ்க்கையில் நமக்கு ஏற்படும் அனுபவங்கள் அனைத்தையும் சுகம், அல்லது துக்கம் எனப் பாகுபடுத்தலாம். இவற்றிற்குப் புறம்பாக அனுபவம் எதுவும் இல்லை. தேக புத்தி உள்ள வரை இவற்றை அனுபவித்தே தீரவேண்டும். ஸ்தூல சரீரம் என்ற உபாதி அகல வேண்டுமாயின் சுக, துக்கங்களைப் பொருட்படுத்தாது வாழவேண்டும். சரீரம் போகத்திற்கு உண்டாக்கப்பட்டது என்ற மனப்பான்மையைக் களையவேண்டும். 'சுக, துக்கே சமே க்ருத்வா-சுக, துக்கங்களைச் சமமாகச் செய்து' என்று கீதை புகட்டுகின்றது. "யத் ஆயாது தேஹஸ்த ஆத்மா ந லிப்யதே-எது வரினும் சரி; சரீரத்தில் குடிகொண்டுள்ள ஆத்மாவிற்கு அதனால் மாசு எதுவும் இல்லை" என்ற சிந்தனை மேலோங்கினால் சரீரப்பற்றுக் குறையும். சுக, துக்கங்களால் மனம் அலைக்கழிக்கப்படாது; சமபாவத்தில் நிலைத்திருப்பது சிறந்த ஆத்ம சாதனம் ஆகின்றது. மனம் ஆத்மாவில் ஒடுங்கும் போது சுக துக்கங்களைக் கடந்து செல்கிறோம்.

ஸ்ரீ ஸாரதா ஸமிதி

தீவிரமாகக் கடவுள் நாட்டம் கொள்வது மானுடப்பிறவியின் சீரிய குறிக்கோள் ஆகும். ஆண்பாலர் பெண்பாலர் ஆகிய இருபாலர்க்கும் இது ஒப்ப முடிந்த லட்சியமாகும். கடவுள் நாட்டம் அதிகரிப்பதற்கு ஏற்ப உலக ஆசைகள் தாமாக மறைந்துபட்டுப் போகின்றன. உலக ஆசைகளை அறவே ஒழித்தவர் துறவியர் ஆகின்றனர். பெண்பாலர்க்கிடையில் இக்காலத்தில் தீவிரமான துறவியாகத் திகழ்ந்தவர் அன்னை ஸ்ரீ சாரதா தேவியார் என்பது உலகு அறிந்த விஷயமாகும். அவரைத் துறவறத்துக்கென்றே ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் ஆயத்தப்படுத்தினர். அன்னையாரின் பாரமார்த்திகப் பெருவாழ்வு உலக மக்களுக்கு ஓர் ஒப்பற்ற அருள்விருந்து ஆகிறது. அருள்கனிந்த இந்த ஞானத்தாயின் பெயரில் சேலம் ஸ்ரீ ஸாரதா ஸமிதி நிறுவப் பெற்றுள்ளது. ஸமிதி என்னும் சொல் திருக்கூட்டம் எனப் பொருள்படுகிறது.

பழங்காலத்தில் பாரமார்த்திக வாழ்வு வாழ விரும்பிய பெண்பாலர்க்குக் கன்னிமாடம் என்னும் ஸ்தாபனம் அமைத்துவந்தனர். அக்காலத்தில் பண்பட்டிருந்த பெற்றோர்கள் அதற்கு முற்றிலும் சம்மதம் கொடுத்து வந்தனர். ஆனால் இடைக்காலத்தில் சமுதாயத்தின் சூழ்நிலை கன்னிமாடத்துக்குப் பிரதிகூலமாயிருந்தது. ஆதலால் அந்த ஸ்தாபனம் மறைந்துபட்டுப் போயிற்று. மகளிர் மணம் புரிந்தே ஆகவேண்டும் என்னும் கட்டுப்பாடு வந்தது. ஆனால் திருவருளின் சகாயத்தால் பழைய அனுகூலமான நிலைமை மீண்டும் வந்து கொண்டிருக்கிறது. அதைப் பயன்படுத்துவது மக்களின் கடமையாகும்.

இக்காலத்தில் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களுக்கிடையில் துறவு பூண்டுள்ள மகளிர் ஸ்தாபனம் (nunnery) உலகெங்கும் நன்கு நடைபெற்று வருகிறது. அம்மதத்தைச் சேர்ந்த தாய் தந்தையர் மனமுவந்து தங்கள் புதல்வியர்களுள் ஒருத்தியைக் கன்னிமாடத்துக்குச் சீதனம் கொடுத்து ஒப்படைக்கின்றனர். கல்வித்துறையிலும் மருத்துவத்துறையிலும் அம்மகளிர் கூட்டம் அரும்பணியாற்றி வருகிறது. ஹிந்து சமுதாயத்திலும் அத்தகைய ஸ்தாபனம் விரைவில் வருவது இன்றைக்கு அவசியமாகிறது.

பாரமார்த்திகப் பெருவாழ்வு வாழ விரும்புகிற ஆடவர்களுக்குத் திருப்பராய்த்துறையில் ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம் வசதியளிக்கிறது. அதே பாங்கில் மகளிர்களுக்குச் சேலம் ஸ்ரீ ஸாரதா ஸமிதி வசதியளிக்கிறது. இந்த ஸமிதியைத் தாய்மார்கள் சிலர் நிர்வகித்து வருகிறார்கள். அவர்கள் உலக பந்தபாசங்களிலிருந்து முற்றும் விடுபட்டவர்கள் ஆகிறார்கள். சேலம் ஸ்ரீ ஸாரதா மகளிர் கல்லூரி, ஸ்ரீ ஸாரதா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, ஸ்ரீ ஸாரதா பெண்கள் மேல்நிலைப்பள்ளி, ஸ்ரீ ஸாரதா பாலமந்திர் ஆகிய கல்விச்சாலைகளின் நிர்வாகங்கள் அவர்கள் ஆதிக்கத்தில் இருந்து வருகின்றன.

ஸ்ரீ ஸாரதா ஸமிதியில் எத்தகைய மாதர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள் என்பதன் விளக்கம் வருமாறு:—

(1) விவாகம் செய்துகொள்ள விருப்பமில்லாத வனிதைகள் இதில் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள். அதற்கு அவர்கள் தங்கள் பெற்றோரின் அனுமதி பெறவேண்டும்.

(2) குழந்தைகள் இல்லாத கைம்பெண்கள் தங்கள் வசத்தில் இருக்கிற செல்வத்தை ஸமிதியில் சேர்த்துவிட்டு அதில் சேர்ந்து கொள்ளலாம்.

(3) கணவன்மார்களால் கைவிடப்பட்ட பெண்கள் ஸமிதியில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

ஸமிதியில் சேர்ந்துகொள்ள விரும்புபவர்கள் தங்கள் வரலாறுகளைப்பற்றிக் கடிதம் எழுத வேண்டும். அம்முறையில் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் மாத்திரமே ஸமிதியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

ஸ்ரீ ஸாரதா ஸமிதியில் சேர்த்துக்கொண்டவர்களுக்கிடையில் ஜாதி மத வேற்றுமை கிடையாது.

ஸமிதியில் அங்கத்தினராகச் சேர்ந்து கொண்டவர்களுக்குப் பாரமார்த்திக வாழ்வு, கல்வி, ஸ்தாபன நிர்வாகம் ஆகியவைகளில்

பயிற்சியளிக்கப்படும்.

அங்கத்தினர்களை ஆயுட்காலம் முழுதிலும் நன்கு பரிபாலித்து வர ஸமிதி கடமைப்பட்டிருக்கிறது.

சேலம் ஸ்ரீ ஸாரதா ஸமிதியானது திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனத்தின் லட்சியத்தைக் கடைப்பிடித்து வருகிறது. அதாவது ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர், அருள் அன்னை ஸ்ரீ ஸாரதாமணி தேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகிய பெருமக்கள் புகட்டியபெருநெறியை வாழ்க்கையிலும், நடைமுறையிலும் கொண்டுவருவது இந்த இரண்டு ஸ்தாபனங்களின் லட்சியமாகும்.

ஸ்ரீ ஸாரதா ஸமிதியைப்பற்றி மேலும் அறிந்துகொள்ள விரும்பும் தாய்மார்கள் கீழே கண்டுள்ள விலாசங்களுக்கு எழுதலாம்.

1. யதீஸ்வரி ஸாரதாப்ரியா

தலைவி ஸ்ரீஸாரதா ஸமிதி, அழகாபுரம், சேலம்-4.

2. சுவாமி சித்பவானந்தர்

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்,

திருப்பராய்த்துறை-639 115, திருச்சி ஜில்லா.

குறிப்புகள்

அரசாங்கமும் நாட்டுப் பிரச்னைகளும்

மனிதன் அறிவுடையவனாகும்பொழுது மனம் விரிவடைகிறது. அப்பொழுது அவன் மயக்கத்துக்கு ஆளாகின்றான். மயக்கநிலையில் இருக்கின்ற மனிதன் பொருந்தாத சில ஆசைகளைத் தன் உள்ளத்தில் வளர்த்துக்கொள்கின்றான். அவ் ஆசைகளை நிறைவேற்றுவதற்கு ஒழுக்கத்திலிருந்து தவறுகின்றான். கட்டுப்பாடான வாழ்விலிருந்து பிசகிப்போவதற்கு ஆசைபடைத்த மனிதன் முயல்கின்றான். மக்களை ஒழுங்குப்படுத்தவும், கட்டுப்பாடான வாழ்க்கை வாழச் செய்வதற்கும் ஒரு சக்தி தேவைப்படுகிறது. அந்தச் சக்திதான் அரசாங்கம் அல்லது ஆட்சி ஆகிறது.

ஆட்சியில் பல முறைகள் இருக்கின்றன. முடியாட்சி, குடியாட்சி என்ற இரண்டும் முக்கியமானவைகளாகும். முடியாட்சியில் தனி மனிதனிடம் மக்களை நல்வழியில் நடாத்திச் செல்லும் பொறுப்பு ஒப்படைக்கப்படுகிறது. அவன் நல்லவனாகவிருந்தால் மக்களிடம் நல்வாழ்வு உருவாகி வரும்படி செய்கின்றான். அவன் கெட்டவனாகவிருந்தால் மக்களை அவதிப்படுத்துகின்றான். குடியாட்சியில் மக்களை ஒழுங்குப்படுத்துகின்ற பொறுப்பு மக்களிடமே ஒப்படைக்கப்படுகின்றது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிடம் மக்களை நடாத்திச் செல்லும் பொறுப்பு ஒப்படைக்கப்படுகிறது. சமுதாயத்தில் நல்லவர்கள் தொகை அதிகமாகவிருந்தால்தான் குடியாட்சியில் நல்லவர்கள் ஆட்சிக்கு வரமுடியும். கெட்டவர்கள் தொகை அதிகமாகவிருக்கும்பொழுது நல்லவர்கள் ஆட்சிக்கு வருவது சிரமம். இன்றைக்கு எங்கும் சீர்கேடும், சீர்குலைவும் தென்படுவதற்கு நல்லவர்கள் தொகை குறைவாகவிருப்பதே காரணமாகும். இன்றைய நிலையில் ஓரளவு நலம் தரும் ஆட்சி நிலவவேண்டும் என்றால் சில விஷயங்களைக் கருத்தில் கொள்ளுதல்வேண்டும்.

அரசாங்கத்துறை என்றும், தனியார் துறை என்றும் இரண்டு துறைகள் இருக்கின்றன. அரசாங்கம் மேற்கொண்டிருக்கிற துறைகளில் ஊழல்கள் அதிகம் நிறைந்திருக்கின்றன. அரசாங்கம் எடுத்து நடத்தும் காரியம் ஒழுங்காக நடைபெறுவதில்லை. அரசாங்கம் பொதுமக்களுக்கு நன்மை செய்து தரவும் முடிவதில்லை, இலாபகரமாகத் தொழிலை நடத்துவதும் முடிவதில்லை. பஸ் போக்குவரத்துத்துறையை எடுத்துக்கொள்வோம். தனியார் பொறுப்பில் ஓடும் பஸ்கள் நல்ல நிலையில் இருக்கின்றன. மக்களுக்கு அவை நன்கு பயன் பட்டுவருகின்றன. மக்கள் கவலை இல்லாமல் பிரயாணம் செய்வதற்குத் தனியார்துறையில் நடத்தப்படும் பஸ்கள் பொறுப்பு எடுதந்துக் கொள்கின்றன. அரசாங்கப் பஸ்ஸில் இத்தகைய பொறுப்பு உணர்ச்சியைக் காண முடிவதில்லை. அரசாங்கப் பஸ்களும் நல்ல நிலையில் இல்லை. அரசாங்கப் பஸ்ஸில் பிரயாணம் செய்யுபொழுது பிரயாணிக்குப் போய்ச் சேர்வேண்டிய இடத்துக்குப் போய்ச்சேரும் வரையில், போய்ச்சேருவோமா, சேரமாட்டோமா என்ற கவலை இருந்துகொண்டே இருக்கும். தனியார்துறை இலாபகரமாகப் பஸ் போக்குவரத்தை நடத்துவதுபோன்று அரசாங்

கத்தினரால் நடத்தமுடிவதில்லை. பொருள் நஷ்டத்தோடு வசதிக்குறைவும் இருப்பதை அரசு நடத்தும் பஸ்துறையில் காண்கின்றோம்.

கல்வித்துறையை எடுத்துக்கொண்டால், தனியார் நடத்தும் பள்ளிகளில் உள்ள தரத்துக்கும், அரசாங்கம் நடத்தும் பள்ளிகளில் உள்ள தரத்துக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசத்தைக் காண்கின்றோம். தனியார் நடத்தும் பள்ளிகளில் ஓரளவு ஒழுங்குப்பாட்டையும், கட்டுப்பாட்டையும் காண்கின்றோம் அரசாங்கம் நடத்தும் பள்ளிகளில் ஒழுங்குப்பாட்டையோ, கட்டுப்பாட்டையோ காணமுடிவதில்லை. அரசாங்கம் நடத்தும் பள்ளிகளில் ஆசிரியர்களும் பொறுப்புடன் தங்கள் பணிகளைச் செய்வதில்லை; மாணவர்களும் தங்கள் கடமையை உணர்ந்து படிப்பதில்லை. கல்விக்கு அடிப்படையாகவிருக்கும் தூய்மையும், மன ஒருமுகப்பாடும் அரசாங்கப்பள்ளிகளில் அறவே புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. இன்றைக்குக் கல்வித்துறை அரசாங்கத்தின்கையில் அகப்பட்டுத் திண்டாடிக்கொண்டு இருக்கிறது. இந்நிலையில் அரசாங்கமே பள்ளிகளின் பொறுப்பு அனைத்தையும் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று பேசுபவர்களும் இருக்கிறார்கள். கல்வித்துறை அரசாங்கத்திடம் இருந்தால் வேலை செய்யாது சம்பளம் வாங்கிக்கொண்டு வேறுதுறைகளிலும் பணம் சம்பாதிக்கலாம் என்று அவர்கள் எண்ணுவதே அதற்குக் காரணமாகும். இந்நிலையில் நாட்டுக்கு நலம் செய்யவேண்டும் என்ற நல்ல எண்ணம் அரசாங்கத்துக்கு இருக்குமானால் நன்றாகச் சிந்திக்கவேண்டும்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப(து) அறிவு"

என்ற குறட்பாவின்படி நாட்டுக்கு நலம்தருவது எது என்பதை அரசாங்கம் சிந்திக்கவேண்டும்.

பண்டைக்கால முறையில் தியாகமே உருவாகவிருந்த ரிஷிகள் கையில் கல்விப் பொறுப்பு முழுவதும் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதனால் அன்று கல்வி தலைத்தரமாக இருந்தது. இன்றைக்குத் தியாக மனப்பான்மையுடையவர்களிடம் பார்த்துக் கல்விப் பொறுப்பு ஒப்படைக்கப்படவேண்டும். பண்பாட்டை வளர்க்கவும், அன்பைப் பெருக்கவும், சேவை மனப்பான்மையை வளர்க்கவும், அறிவை வளர்க்கவும் கல்விக்கூடங்கள் செயல்படவேண்டும் என்றால் அத்தகைய பணியாளர்களைப் பார்த்து அவர்களிடம் கல்வித்துறை ஒப்படைக்கப்படவேண்டும். இதை அரசாங்கம் செய்து முடித்துவிட்டால் கல்வித்துறைக்கு அரசாங்கம் செய்யவேண்டிய பணி முடிந்தது.

அறநெறியைப் பாதுகாக்கும் பணியிலும், அநீதியைத் தலை எடுக்கா வண்ணம் ஒடுக்கும் பணியிலும் அரசாங்கம் முழுக்கவனத்தையும் செலுத்தவேண்டும். அரசாங்கம் பலதுறைகளை ஏற்று நடத்துவதற்குப் பதிலாக அவற்றை நடத்துவதற்கேற்ற பொறுப்பு உணர்ச்சியும், திறமையும் உள்ளவர்களிடம் ஒப்படைத்து அவை ஒழுங்காக நடைபெற்று வருகின்றனவா என்பதை அரசாங்கம் மேற்பார்வை பார்த்து வரலாம். இன்றைக்குச் சமுதாயத்தில் நல்லவர்கள் குறைவாக இருக்கிறார்கள். அவர்கள் நன்கு பயன்படுத்தப்படாமல் இருக்கிறார்கள். நல்லவர்களைக் கண்டுபிடித்து, அவர்களை நன்கு பயன்படுத்த அரசாங்கம் தெரிந்து கொள்ளுமானால் நாட்டிலுள்ள பல பிரச்னைகள் தீர்ந்து போய்விடும்; நாட்டை நல்ல நாடாக உருவாக்கலாம்.

செய்திகள்

நிகழ்பவை

24—4—82 சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மேல் ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுல மாணவர்கள் கோடை விடுமுறைக்காக அவரவர் ஊருக்குப் புறப்படுவார்கள்.

16—5—82 ஞாயிற்றுக்கிழமையன்று வட ஆற்காடு ஜில்லா ஆம்பூர் அருள்மிகு நாகநாத சுவாமி ஆலயத் திருமண மண்டபத்தில் **ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள்** ஒருநாள் அந்தர்யோகம் நடாத்துவார்கள்.

17—5—82 திங்கட்கிழமையன்று வடஆற்காடு ஜில்லா குடியாத்தம், வேதாந்தப் பாடசாலையில் **ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள்** ஒருநாள் அந்தர்யோகம் நடாத்துவார்கள்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் இயற்றிய நூல்கள்

மஹாபாரதம்	பிரசார விலை ரூ.		7-00
ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள்	„	...	6-00
ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரீ	„	...	5-50
இராமாயணம்	„	...	6-00
தினசரி தியானம்	„	...	4-00
கர்மயோக விளக்கம்		...	10-00
ஞானயோக விளக்கம்		...	8-00
ராஜயோக விளக்கம்		...	8-00
பரமஹம்சரின் பெருமை		...	6-00
விவேகானந்த விவரணம்		...	4-00
விவேகானந்த உபநிஷதம்		...	4-00
கடவுளின் வடிவங்கள்		...	4-00
சந்தேகம் தெளிதல் பாகம்-I		...	3-50
அனுஷ்டான வேதாந்தம்		...	3-00
எதிர்கால இந்தியா		...	3-00
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம்		...	3-00
திருக்கயிலாயகிரி யாத்திரை		...	3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்)		...	2-50
ஸ்ரீ சாரதா தேவியார் சரிதம்		...	2-00
தாயுமானவர் இயற்றிய			
கருணாகரக் கடவுள்	விரிவுரை	...	3-50
பரிபூரணானந்தம்	ஷை	...	3-00
சின்மயானந்த குரு	ஷை	...	3-00
ஆனந்தமானபரம்	ஷை	...	3-00
சுகவாரி	ஷை	...	3-00
மௌனகுரு வணக்கம்	ஷை	...	3-00
எங்கும்நிறைகின்றபொருள்	ஷை	...	2-50
பரசிவ வணக்கம்	ஷை	...	1-00
பஜனைப் பாடல்கள்		...	2-50
கண்ணன் என்னும் கடவுள்		...	2-50
ஹரிச்சந்திரன்	(நாடகம்)	...	2-00
விரதவீரர் பீஷ்மர்	ஷை	...	1-50
விபீஷணன் சரணாகதி	ஷை	...	1-50
பரமஹம்சர் பாமாலை		...	1-50
அமரநாத யாத்திரை		...	1-25
சந்நியாசி		...	1-25
இறைவணக்கம்		...	1-00
குழந்தைகளின் களிக்கூடம்		...	1-00
சகோதரி நிவேதிதை		...	1-00
இராவண தத்துவம்		...	1-00
வாலி மோட்சம்	(நாடகம்)	...	1-00
தவப்புதல்வர்கள்	„	...	1-00
ஏகலைவ்யனின் குருபக்தி	„	...	1-00
தானவீரன் கர்ணன்	„	...	1-00
பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம்		...	1-00
மார்க்கண்டேயன்	(நாடகம்)	...	1-00
பிரஹ்லாதன்	„	...	1-00
தபோபலன்	„	...	1-00

இந்துமதமும் கிறிஸ்துவ மதமும்	ரூ. 1-00
நோய்க்கு இடம் கொடேல்	... 1-00
ஆத்ம சக்தி	... 1-00
நன்மக்களைப் பெறுதல்	... 0-80
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா?	... 0-75
*ஆலய வழிபாடு	... 0-75
*சக்தி தத்துவம்	... 0-70
*சிவதத்துவம்	... 0-70
*மனிதனது நிஜசொரூபம்	... 0-70
தாயுமானவர் ஆலயத்தில் தத்துவ அமைப்பு	... 0-60
நன்னெறிகளும் அருள்வாக்குகளும்	... 0-60
*விஷ்ணு தத்துவம்	... 0-50
சைவன் யார்?	... 0-50
கர்மகாண்டம்எது? ஞானகாண்டம்எது?	0-50
*கணபதி	... 0-40
வர்ணாச்ரம தர்மம்	... 0-30
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும்	... 0-30
கந்தர் அநுபூதி	... 0-25
The Bhagavad Gita (11th Imp.)	...24-00
Sri Lalitambika Sahasranama Stotram	...10-00
Tirukkural (with plastic cover)	... 8-00
The Indian National Education	... 8-00
Ramakrishna Lives Vedanta	... 8-00
Facets of Brahman or The Hindu Gods	... 5-00
Daily Divine Digest (DELUXE)	... 4-50
Daily Divine Digest (Ordinary)	... 2-50
SRI KRISHNA-The Manifest Divinity (with plastic Cover)	... 6-00
Mahabharata (with plastic cover)	... 6-00
Ramayana (do)	... 4-00
The Man Making Message of Vivekananda (with plastic cover)	... 4-00
Sri Vishnu Sahasranama Stotram	... 4-00
The Bhagavad Gita (Small Size)	... 4-00
Siva Sahasranama Stotram	... 3-50
Bheeshma The Superman	... 3-50
Hinduism Hosts Christianity	... 3-00
Holy Bible—In the Light of Vedanta	... 1-50
Reminiscences of Master Mahashaya	... 1-50
*Introducing the Gita	... 1-50
The Garland of Paraaparam	... 1-50
The Student	... 1-25
TAT TVAM ASI *That Thou Art* IN Tayumana Swami	... 1-00
The Nursery School	... 1-00
The School	... 1-00
The Teacher	... 1-00

தேவையான புத்தகங்களுக்கு உரிய விலையுடன் தபால் கட்டணத்திற்காக கீதைக்கு ரூ. 3-75ம் மஞ்ஜரிக்கு ரூ. 1-40ம் இராமாயணத்திற்கு ரூ. 1-30ம் மஹாபாரதத்திற்கு ரூ. 1-40ம் தினசரி தியானத்திற்கு ரூ 1-20ம் மற்ற வெளியீடுகளுக்கு ரூ. 3-00 முதல் ரூ. 4-00 வரையும் சேர்த்து அனுப்புங்கள். * இப்புத்தகங்கள் ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

மாதேசுவரன் மலையில் அந்தர்யோகம்-5

1982ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26, 27 திங்கள், செவ்வாய் ஆகிய இருதினங்களில் கீழ்க்கண்ட வாழ்க்கை முறைப்படி திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர் அவர்களால்

கர்நாடக மாநிலம் மாதேசுவரன் மலையில் அந்தர்யோகம் நடாத்தப்பெறும். பாலாறு செல்வதற்குச் சேலம் ஜில்லா மேட்டூர் தாலுகாவிற்கு அருகிலுள்ள கொளத்தூரிலிருந்து வேனோ, லாரியோ கிடைக்கும். பாலாற்றிலிருந்து காலை 7-30க்கும், மாலை 2-30க்கும் மாதேசுவரன்மலைக்குப் பஸ் புறப்படுகிறது. மேலும் பஸ் வசதி விபரம் வேண்டுபவர்கள் Br. கிருஷ்ணன் அவர்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும். அந்தர்யோகத்தில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் Br. கிருஷ்ணன், ஸ்ரீ ராமகிருஷ்ண குருகுலம், சின்னத் தண்டா P. O., கொளத்தூர் (Via) சேலம் ஜில்லா என்ற விலாசதாரரிடமோ அல்லது N. அன்னையன், சன்மார்க்க சங்கம், மேச்சேரி P. O., சேலம் ஜில்லா என்ற விலாசதாரரிடமோ நபர் ஒன்றுக்கு ரூபாய் இருபது வீதம் M. O., மூலமோ, நேரிலோ செலுத்திப் பதிவு செய்து அனுமதிகார்டு பெற்றுக்கொண்டு ஏப்ரல் மாதம் 25ஆம் தேதி மாலை 6-00 மணிக்குள் மாதேசுவரன் மலைக்குப் படுக்கை வசதியுடன் வந்துசேரவேண்டும். அந்தர்யோகத்தில் கலந்துகொள்ளாதவர்களுக்குத் தொகை வாபஸ் செய்ய இயலாது.

வாழ்க்கை முறை

காலை	மணிமுதல்	மணிவரை	மாலை	மணிமுதல்	மணிவரை
துயில் எழுந்திருத்தல்	4-30		உணவு, ஓய்வு	1-00	3-15
நாம ஜபம்	5-00	5-30	உபந்யாசம்	3-15	4-15
ஆசனம், நீராடல்	5-30	7-00	வாசிப்பு	4-15	4-45
தியானம்	7-00	7-45	பானம், உலாவல், நீராடல்	4-45	6-15
சிற்றுண்டி	7-45	8-45	அர்ச்சனை	6-15	7-15
உபந்யாசம்	8-45	9-45	தியானம்	7-15	7-45
மௌனம்	9-45	10-30	உணவு	7-45	8-45
பஜனை	10-30	11-15	சத் சம்பாஷணை	8-45	9-30
ஆலயவழிபாடு, அர்ச்சனை, ஆரதி	11-15	12-15	நித்திரை	9-30	

Edited by SWAMI NITHYANANDA,

Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.